Registered at the G. P. O. as a Newspaper

வாரப்பதிப்பு விலை சதம் 20

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, SILVERSMITH STREET, COLOMBO—12.




மெய்யென்
போக்
ஆட்டுப்பால் மா

இருமல், காசம் தொய்வு நோய் மூல வியாதி மற்றும் பலவீனம் முதலானவற்றிற்கு மிகச் சிறந்தது.

விபரங்களுக்கு:
த. கணேசன்,
53, மெயின் வீதி,
கொழும்பு.

புத்தகம் 13 திருவள்ளுவர் ஆண்டு 1990 சித்திரைத் திங்கள் 6-ம் நாள் 19—4—1959 ஞாயிற்றுக்கிழமை ஷவ்வால் பிறை 10 இதழ் 47

# தமிழர் எல்லைப் பிரதேசத்தில் தொல்லை விளைவிக்க அரசாங்கம் சூழ்ச்சி

## வவனியா—மதவாச்சி ஓரப் பகுதிகளில் சிங்கள எஸ். எஸ். ஸி. வாலிபர்களை குடியேற்றப் பூர்வாங்க நடவடிக்கை

### மத்திய வகுப்பாருக்கு சேமநலத் திட்டம் என்ற போர்வையில் எல்லாம் நடக்கும்

(சுதந்திரன் நிருபர்)

வவனியா—மதவாச்சி ஓரப்பகுதிகளில் சிங்கள எஸ். எஸ். ஸி. படித்த வாலிபர்களைக் குடியேற்றி அதன்மூலம் வவனியாவில் வாழும் தமிழர்களுக்கு சதா தொல்லை கொடுக்க அரசாங்கம் சூழ்ச்சித் திட்டம் திட்டிப் பூர்வாங்க நடவடிக்கை எடுத்து வருவதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

வவனியாவுக்கு அணித்தாய் தெற்கேயுள்ளது மதவாச்சிப் பகுதியாகும். இங்கும் இதைச் சுற்றியுள்ள பிரதேசத்திலும் முழுக்க முழுக்கச் சிங்களவர்களே வாழ்கிறார்கள். படிப்படியாக வவனியாவையும் சிங்களப் பிரதேசமாக்குவதே அரசாங்கத்தின் அந்தரங்க நோக்கமாதலால் வவனியாவின் எல்லையில் இப்போது எஸ். எஸ். ஸி. படித்த சிங்கள வாலிபர்களைக் குடியேற்ற அரசாங்கம் எண்ணியுள்ளது.

#### தமிழர்களை ஒதுக்கத் திட்டம்

ஒருகால் வவனியாவைக் கைப்பற்ற முடியுமானால் சற்று மேற்கே சென்று மன்னாரையும் சுவீகரித்துக் கொள்வது ஒன்றும் பெரிய காரியமல்ல. கிழக்கேயுள்ள பதவியா பகுதியிலும் தென் கிழக்கேயுள்ள திருமலையிலும் இப்போதே குடியேற்றத் திட்டங்கள் மூலம் 'ஆக்கிரமிப்பு' நடந்து கொண்டிருப்பதால் காலக்கிரமத்தில் தமிழர்களைப் படிப்படியாக ஆனையிறவுக்கு அப்பால் கொண்டு போய் ஒதுக்கிவிடலாம் என்பதுதான் அரசாங்கத்தின் நீண்டகாலத் திட்டமாகும்.

#### ஆரம்ப நடவடிக்கை

இதன் ஆரம்ப நடவடிக்கையாக வவனியா — மதவாச்சியை அடுத்துள்ள மல்வத்தை ஓயா நதிக்கரைப் பகுதிகளில் சிங்கள எஸ். எஸ். ஸி. படித்தவர்களை அரசாங்கம் குடியேற்றும் என்று தெரிகிறது.

#### வவனியா மீது முக்கிய கவனம்

மத்திய வகுப்பாருக்கான சேமநலத் திட்டம் என்ற போர்வையில் அரசாங்கம் வெகு விரைவில் இந்த நடவடிக்கையில் ஈடுபடவிருக்கிறது. நெற்பயிர் சாகுபடிக்கும் தெங்குச் செய்கைக்கும் குடியேற்றப்படுபவர்களுக்கு போதிய வாய்ப்பு அளிக்குமுகமாக இரண்டுக்கும் ஏற்ற வவனியாப் பிரதேசத்தை அரசாங்கம் முக்கிய கவனத்துக்கு எடுத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

மிக விரைவில், முதல் நடவடிக்கையாக, வவனியாப் பகுதியில் சுமார் 5,000 ஏக்கர் நிலத்தில் சிங்கள எஸ். எஸ். ஸி. படித்த வாலிபர்கள் குடியேற்றப்படுவார்கள்.

# நீர்ப்பாசன இலாகாவில் இனவெறிக் காய்ச்சல்

## சிவில் உத்தியோகஸ்தர் தமிழ் உத்தியோகஸ்தரைப் படுத்தும் நிஷ்டூரம்

(சுதந்திரன் நிருபர்)

கொழும்பு நீர்ப்பாசன இலாகாவில் கொடிய இனவெறிக் காய்ச்சல் பரவி வருவதாகத் தெரிகிறது. அங்கு வேலைபார்க்கும் தமிழ் உத்தியோகஸ்தர்களை அவர்களுக்குப் பொறுப்பாயுள்ள ஒரு சிங்கள சிவில் உத்தியோகஸ்தர் நிஷ்டூரப் படுத்தி வருகிறாராம்.

திறைசேரியிலிருந்து நீர்ப்பாசன இலாகாவுக்கு மாறுதலாகிவந்த ஒரு இளம் சிங்கள சிவில் சேவை உத்தியோகஸ்தர் பெரும் இன வெறியராகக் காணப்படுகிறார் என்று புகார் செய்யப்படுகிறது.

இவர் அங்கு வேலை பார்க்கும் தமிழ் உத்தியோகஸ்தர்களை நிஷ்டூரப்படுத்தி வருகின்றாராம்.

அவர்களுடைய பதவி உயர்வு, சம்பள ஏற்றம் ஆகியவற்றிற்குக் குந்தகம் விளைக்கும் முகமாக வேண்டுமென்றே பாதகமான குறிப்புக்களை அவர் "பேர்ஸனல் பைல்"களில் திணித்து வருவதாகக் குற்றஞ் சாட்டப்படுகிறது.

திருவாளர்கள் எஸ். நாகராஜா, எஸ். சின்னையா, பி. ஜே. பீட்டர் ஆகிய மூன்று தமிழ் உத்தியோகஸ்தர்கள் உயர்வு பெறும் வண்ணம் இரண்டாந்தர குமாஸ்தா தேர்வு எழுத விடாமல் இவர் தடுத்துவிட்டார். இப்படித் தடுத்தமைக்கு அவர்கள் தமிழர்கள் என்பதைத் தவிர வேறு முகாந்திரம் எதுவுமில்லை யென்று சொல்லப்படுகிறது.

தடுத்து நிறுத்தப்பட்ட மேற்படி தமிழர்கள் திறைசேரிக்கு அப்பீல் செய்து கொண்டதன் பேரில் இப்போது தடை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

#### தண்டனை

வகுப்புக் கலவரத்தின் போது சிங்களப் பகுதிகளிலிருந்து துன்புற்று வந்த சில தமிழ் குமாஸ்தாக்களை இவர் மீண்டும் பொலநறுவை, கிரித்தலை போன்ற கொடிய வகுப்புவாதப் பிரதேசங்களுக்கு மாற்றித் தண்டித்துள்ளார்.

இந்த சிவில் உத்தியோகஸ்தர் திறைசேரியில் வேலை பார்த்த காலத்திலும் இனவெறியராகக் காணப்பட்டதாலேயே அங்கிருந்து நீர்ப்பாசன இலாகாவுக்கு மாற்றப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இவருடைய "பேர்ஸனல் பைல்" குறிப்பொன்றில் "இந்த உத்தியோகஸ்தர் சிங்களவர்-தமிழர் என்று திறைசேரிக்குள் இனவெறியை மூட்டி வருவதால் இவரை உடனடியாக மாற்ற வேண்டும்" என்று திறைசேரியின் டிபியூட்டி காரியதரிசி தம் கைப்பட எழுதியுள்ளார் என்று தெரியவருகிறது.

தீண்டாமை புல்லுருவி

# இந்து சமயம் இந்த அநீதியை ஒருபோதும் ஆதரிக்கவில்லை

## தீண்டாமை ஒழிப்பு வாரத்தையொட்டி கோப்பாய்ப் பிரதிநிதி வெளியிட்ட செய்தி

"ஜாதி வித்தியாசம் பாராட்டுவது மனித தர்மத்துக்கும், மனிதப் பண்பாட்டிற்கும் முற்றிலும் மாறானது. பழந்தமிழ் வாழ்க்கையில் ஜாதி வேற்றுமை கிடையாது. தீண்டாமை என்ற சாபத்திடு தமிழ் சமூகத்துள் இடையிட்டே புகுந்திருக்கிறது. சமூக வாழ்வைப் பாழ்படுத்தும் இந்தப் புல்லுருவியை ஒழித்துக் கட்ட முனைவோமாக" என்று தமிழரசுத் தலைவர்களுள் ஒருவரும் கோப்பாய் பிரதிநிதியுமான திரு. கு. வன்னியசிங்கம் கூறினார்.

கடந்த புதன் கிழமை முதல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வரும் தீண்டாமை ஒழிப்பு வாரத்தையொட்டித் திரு. வன்னியசிங்கம் அளித்த ஒரு பேட்டியின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தொடர்ந்து கூறியதாவது: "'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்

(8-ம் பக்கம் பார்க்க)

இந்த சக்தி வாய்ந்த நிவாரணி மார்பு நோய்களை விரட்டுகிறது!




ரிச்லெட்ஸ் பெக்டோரல்
(Richelet's Pectoral)

ஒரு பிரசித்திபெற்ற தயாரிப்பு. குறிப்பாக சுவாச சய நோய்களுக்கென்றே விசேஷமாகத் தயாரிக்கப்பட்டது. ஆகவே, தொய்வுக்கு இது ஒரு வரப் பிரசாதம்!

● மூச்சுவிடுதல் தடைப்படுவதால் வேதனை ஏற்படுவதுடன் நின்று விடாது. சில சந்தர்ப்பங்களில் அபாயத்தையும் ஏற்படுத்தக் கூடும்! எனவே இதை ஒழித்துக் கட்டுவதில் அலட்சியமாயிருத்தல் கூடாது.

● ரிச்லெட்ஸ் பெக்டோரல் துரிதமாகப் பரவி வேலை செய்யக் கூடிய ரஸச் சேர்க்கையும் சக்தியும் கொண்டது. ஆகவே ஒன்றிரண்டு வேளை மருந்து சாப்பிட்டதுமே சுவாசப்பை, மூச்சுக் குழல் இவைகளில் ஏற்படும் அடைப்பை நீக்கி, கபத்தை உடைத்து, மூச்சுத் திணறலைத் தகர்த்து, சுவாசப் போக்குவரத்தைச் சமநிலைப்படுத்துகிறது. பிசின்-நுரை-போன்ற சளியை இளகச் செய்து காரி உமிழ்வதை இலகுவாக்குகிறது.

● இடைவிடாத இருமல், இளைப்பு, நெஞ்சு வலி, தொண்டை ரணம், மூச்சடைப்பு, தொண்டையிலேற்படும் கர்ர் புர்ர் என்ற சத்தம், தடிமல் காய்ச்சல், குளிர், பீனசம், கக்குவான், போன்ற சகல நோய்களையும் தணிப்பதுடன், படிப்படியாக நிரந்தரமான—நிச்சயமான—குணத்தையும் அளிக்கிறது




ரிச்லெட்ஸ் பெக்டோரல்

தொய்வினால் துன்புற்ற பலர் ரிச்லெட்ஸ் பெக்டோரலின் புண்ணியத்தால் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் பூரண குணம் பெற்று வானளாவப் புகழ்கின்றனர்!

எங்கும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:
வெஸ்டன் ஏஜன்சீஸ்,
170 ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப்பறியும் தொடர் நவீனம்:

# நீலவேணி

"நவம்"

## (41)

### பிணம் எங்கே?

யாருமே எதிர்பாராத வகையில் நிழல் மனிதனைச் சுட்டு வீழ்த்திய கையோடு அங்கிருந்து விரைந்தாள் மியூரியல்.

தணிகாசலத்திடம் இந்த வெற்றிச் சம்பவத்தைக் கூறிவிட்டு உடனேயே நீலவேணியோடு பாரீஸிற்குக் கிளம்பிவிட வேண்டும் என்ற துடிப்போடு விரைந்தாள் அவள்.

வில்லிலிருந்து புறப்பட்ட அம்புபோல் அவள் கார் பறந்தது. மல்லிகைத் தோட்டப் பங்களாவுக்குள் அவள் கார் நுழையும்போது, பங்களாவுக்குள்ளிருந்து தணிகாசலத்தின் கார் வெளியே புறப்பட்டுக்கொண்டிருந்தது.

தணிகாசலத்தின் காருக்கு அருகில் தன் காரை நிறுத்தி விஷயத்தை விசாரித்தாள் மியூ.

மியூறியலை அந்த வேளையில் தணிகாசலம் அங்கு எதிர்பார்க்கவில்லை. அப்படியிருக்க அவள் அங்கு வந்து சேர்ந்தது அவனுக்குச் சற்று வியப்பாக இருந்தது.

மியூறியலிடம் அவன் கேட்ட முதல் கேள்வி, "நிழல்மனிதன் தன் சவாலை நிறைவேற்றி விட்டானா?" என்பதுதான்.

அதற்கு அவள் உடனேயே பதில் சொல்லிவிடவில்லை. "காரைத் திருப்பிக்கொண்டு வருகிறேன். பல முக்கிய விஷயங்கள் நடந்துவிட்டன. தனிமையில் பேசுவோம்" என்று சொல்லிவிட்டு தன் காரைத் திருப்பி மறுபடியும் சாலைக்குக் கொண்டுவந்தாள்.

மியூறியலின் பரபரப்பு தணிகாசலத்துக்கு என்னவோபோல் இருந்தது. பேசாமல் அவள் காரில் வந்து ஏறிக் கொண்டான்.

கார் நிதானமாக ஓடிக் கொண்டிருந்தது. தணிகாசலம் பேச்சை ஆரம்பித்தான்.

அதற்குள் அவள் முந்திக் கொண்டு, "அஜந்தாவின் மரண விசாரணை முடிந்து விட்டதா?" என்று கேட்டாள்.

"எல்லாம் முடிந்து விட்டது. கொலை செய்தவனையும் கைது செய்து விட்டனர்.

"யார் வைத்திதானே?"

"அவனேதான்! தொலைந்தன பீடைகள்! ஒரே கல்லில் இரண்டு பறவைகள்."

"உங்கள் நாடகம் வெற்றிகரமாக ஒரு விக்னமுமின்றி முடிந்து விட்டது. இனி என் திட்டம்தான் நிறைவேற வேண்டியது பாக்கியிருக்கிறது."

"எல்லாம் கச்சிதமாக நடந்தேறும். அது சரி; அந்தக் 'குள்ள நரி' ஹோட்டலுக்கு வந்ததா?"

"யாரைக் குறிப்பிடுகிறீர்கள்? நிழல்மனிதனையா?"

"அவனையேதான்!"

"வந்தான். போய்விட்டான்!"

"வந்தான்; போய்விட்டான் என்று இப்படி நறுக்குத் தெறித்தாற்போல் சொன்னால் யாருக்கு வெளிச்சம்? கொஞ்சம் விளக்கமாகத்தான் சொல்லுங்களேன்."

"தன் சவால் பிரகாரம் ஹோட்டலுக்கு வரவே செய்தான்! வந்ததோடு நில்லாமல் என்னுடன் தழுவல் நடனமும் வேறு ஆடினான்! பொல்லாத எமகாதகன்"

"என்ன? என்ன? உன்னுடன் டான்ஸ் கூட ஆடினானா? மியூ! எனக்கென்னவோ இனியும் இங்கு தாமதிப்பது உசிதமாகப் படவில்லை. இன்னமும் தாமதித்தோமானல் நம் திட்டம் எல்லாம் குட்டிச்சுவர்தான். அதற்காக நாம் முன்னர் எண்ணிய பிரகாரம் கப்பலில் ஒரு நாடகம் ஆடுவதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டேன்.

"நாளை விஷயத்தில் இறங்க வேண்டியதுதான். நிழல் மனிதன் சாமர்த்தியம் எந்த அளவில் இருக்கிறதென்று பார்ப்போம்."

"ஹோட்டலுக்கு வந்தால் நீங்களே அவன் சாமர்த்தியம் எவ்வளவு தூரத்திலிருக்கிறதென்று பார்த்து விடுவீர்கள்."

"என்ன? என்ன சொன்னாய்? அவன் இன்னமும் ஹோட்டலில்தானா தங்கியிருக்கிறான்?"

"ஹோட்டலில் என் அறையுள் சுகமாகத் தூங்கிக் கொண்டிருக்கிறான்?"

"என்ன மியூ! மூளையைக் குழப்புகிறாய்?"

அதற்குப் பின்னும் மியூறியல் தணிகாசலத்தைத் தவிக்கவிடவில்லை. தணிகாசலம் டெலிபோன் அழைப்புவந்து, பங்களாவுக்குப் போன தன்பின்னால் நடந்த எல்லா விவரங்களையும் சொல்லி, தன் அறைக்குள்ளேயே தன்னை மிரட்ட வந்த அவனைத் தீர்த்துக்கட்டியது வரையும் ஆதியோடந்தமாகக் கூறி முடித்தாள் மியூ.

மியூறியலின் திறமையை எப்படிப் போற்றுவதென்றே தணிகாசலத்துக்குப் புரியவில்லை.

இருவரும் ஹோட்டலுக்கு வந்ததும் வராததுமாக, மியூறியலின் அறைக்குள் நுழைந்தார்கள். அங்கு... அங்கு... நிழல் மனிதனின் பிணத்தைக் காணவில்லை!...

## (42)

### நிழல்மனிதன் கடிதம்!

தணிகாசலம் மியூறியலைப் பார்த்தான்; மியூறியல் தணிகாசலத்தைப் பார்த்தாள். இருவரும் திருதிரு என்று விழித்துக்கொண்டிருந்தனர். இருவருக்கும் எதுவுமே பேசத் தோன்றவில்லை.

"கனவு கண்டாயா?" என்று கேட்டு முதலில் பேச்சை அங்குரார்ப்பணம் செய்து வைத்தான் தணிகாசலம்.

அவன் கேள்விக்குப் பதில் சொல்ல வாய் உன்னிய அவளோ, அங்கு கிடந்த ஒரு கடிதம் கவர்ந்தது. நடுங்குங் கரங்களுடன் அதை எடுத்துத் தணிகாசலத்திடம் தந்தாள் மியூ.

தணிகாசலம் கடிதத்தைப் படித்தான். கடிதத்தை அவன் வாசிக்க வாசிக்க மியூறியலின் தலையில் 'சம்மட்டி' அடிகள் விழுந்து கொண்டேயிருந்தன.

"பரிதாபத்திற்குரிய மியூறியல் அம்மையாரே! செத்த பிணம் திடீரென்று மறைவதும், பின்னர் தோன்றுவதுமான அதிசயம் உங்கள் அறையில்தான் நிகழ்கின்றது.

"முன்னர் [illegible] தன்னை உங்கள் [illegible] எங்கோ வைத்துக் கொள்ளப்பட்ட டோரினின் பிணம் நீங்கள் சற்றும் எதிர்பாராத வகையில் இதே உங்கள் அறையில் வந்து விழுந்து கிடந்தது. அதைக் கண்டதால் ஏற்பட்ட பதட்டம் அடங்கிப்போவதற்கிடையில், அந்தச் சம்பவத்தைத் தூக்கியடிக்கத்தக்கதாக இன்னும் ஒரு சம்பவம் நடந்திருக்கின்றது!

"சற்று நேரத்துக்கு முன்னால் உங்கள் கைத்துப்பாக்கியாலேயே, உங்கள் கையால் வெடிதீர்த்துக் கொல்லப்பட்ட என் பிணம் எங்கோ மறைந்துவிட்டது. மறைந்ததோடு நில்லாமல், பேசவும் செய்கின்றது, இதோ இந்தக் கடித மூலமாக! மூளை குழம்புகிறது இல்லையா?

"உங்கள் ஆசை நாயகர் திருவாளர் தணிகாசலம் அவர்களும் இதைப் படிக்கும்போது அனேகமாக உங்கள் அருகில்தான் இருப்பார்.

என்னைத் தொலைத்துவிட்டோம் என்ற எக்களிப்போடு நீங்கள் அவரை அழைத்து வந்திருப்பீர்கள். பாவம், அந்த மனுஷரும், தம் மனைவியைப் பறிகொடுத்த துக்கத்தையும் மறந்து உங்களுடன் ஓடி வந்திருப்பார்.

"இப்படி எதிர்பாராதவிதமாக என் கடிதம் கிடைத்தது அவர் உள்ளத்தைக் குழப்பிக்கொண்டிருக்கும். பாவம்! நீங்கள்தான் இனித் தாரம், தாய் எல்லாம். அவரைக் கொஞ்சம் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளுங்கள். ஏற்கனவேயே நொந்துபோயிருக்கும் உள்ளம், மேற்கொண்டு நாமும் அவருக்குச் சிரமத்தைத் தர முடியாது.

"கடிதத்தை முடிக்க முன்னம், நான் எப்படி உயிர் பெற்றேன், எப்படிக் கடிதத்தை எழுதினேன், என்ற தகவல்களையெல்லாம் இதோ சொல்லிவிடுகிறேன். ஆழ்ந்து படியுங்கள். இனியும் இப்படியான அவசரக் காரியங்களை நீங்கள் செய்யாமல் இருப்பதற்கு அவை உபயோகமாக இருக்கும்.

"விருந்து மண்டபத்தில் ஒரு பஞ்சாபி இளைஞன் வேடத்தில் வந்து தங்களுடன் நான் டான்ஸாடினேனல்லவா?

"உல்லாசமாய் நாம் நடனமாடிக் கொண்டிருப்பதை உணராமல் அஜந்தாவின் மரணத் தகவலைத் தாங்கிக் கொண்டு அந்த முட்டாள் டெலிபோன் அலறியது.

"டெலிபோனில் கதைத்துவிட்டு நேரே உங்களிடம் ஏதோ பேச வந்தார் தணிகாசலம். என் பஞ்சாபி வேஷத்தைக் கலைக்க அந்த இடைவேளை நன்கு ஒத்தாசை புரிந்தது. உங்கள் அணைப்பிலிருந்து விடுபட்ட நான் நேரே உங்கள் அறைக்குள் நுழைந்தேன். வேஷத்தை அங்கேயே களைந்துவிட்டு நிழல்மனித உருவத்தைப் பெற்று உங்கள் வருகையை எதிர்நோக்கிக் கட்டிலில் படுத்தேன்.

"அப்படிப் படுத்த என் முதுகை ஏதோ ஒன்று உறுத்தியது. எழுந்து பார்த்தேன். உங்கள் மெய்ப்பாதுகாவலனான சுழல் துப்பாக்கி அங்கே கிடந்தது.

"மெள்ள அதை நான் எடுத்துக்கொண்டு என் மெய்ப்பாதுகாவலனை பொய்த் துப்பாக்கியைத் தலையணைக்குக் கீழே 'ஜம்' என்று வைத்துவிட்டேன்.

"அப்புறம்? அப்புறமென்ன? அப்புறம் நடந்தவைதான் உங்களுக்குத் தெரியுமே! நீங்கள் வந்தீர்கள். என் சொற்பொழிவை நல்ல ஆர்வத்தோடு கேட்டீர்கள். கேட்டுக்கொண்டு வந்த உங்கள் விழிகளில் திடீரென்று ஏற்பட்ட விஷ மாறுதலை அவதானித்த நான் என்னைச் சுடுவதற்கு உங்களுக்கு ஒரு 'சான்ஸ்' தருவதற்காக அறையைவிட்டு வெளியேறுபவன்போல் பாசாங்கு செய்தேன். சமயத்தை நன்கு பயன்படுத்திக்கொண்டு நீங்களும் வெளுத்துக்கட்டிவிட்டீர்கள்!

"ஒன்று சொல்லி வைக்கிறேன். அஜந்தாவின் கொலையில் அகஸ்மாத்தாக வைத்

(13-ம் பக்கம் பார்க்க)

## படலை திறமினோ!

"மஹாகவி"

சடை இருந்து மலர் சரிய, மென் குதிகள்
சமையல் உள்ளினிடை திரியவும்,
இடை இடைஞ்சல் படும்; எனினும் இன் கணவர்
இனி வரும் தருணம் என விரைந்
துடைக சங்கிடவும், உலையில் வெண்தரளம்
உவகையோடும் இடு பாவையீர்!

பழைய செந்தமிழின் இசையை வீணையொடு
பழகிடும் தளிரின் விரலிலும்
அழகு தந்து பொழுதவம் இழுந்ததென
அகம் உளைந்து துணிய, எழில் நகம்
பழுதுணும் கொடிய கரி படிந்தும் அவர்
பசி நினைந்துருகு பண்பினீர்

சுவை விருந்தெனநும் மவர் மகிழ்ந்திடுதல்
சுலபம் அன்றெனினும் அவர்கள் நா
எவை விரும்பும் என எளிது கண்டு செயும்
இயல்பிருந்திடினும், இவைகளால்
நவை அகன்று மனை அறம் உயர்ந்ததில்லை!
நகை வலீர், இதயம் திறமினோ!

உணவும் உண்பது தம் உரிமை என்பதனை
உணர்விலாத சிலர் திரிகிறார்;
பிணம் நடந்ததென அவரை அஞ்சிடுதல்
பிழை, பெரும் பிரமை! பொருளையே
பணியும் உங்களது படியில் வந்தனர்கள்—
பழியலக்! கதவு திறமினோ!

அடைய வந்த திரு அகலும் என்றிதனில்
அவலம் எய்துவதென் னடி? அனப்
பெடை மறந்த நடை தெரிய நும் கொழுநர்
பெயரும் "நாய் கவன"ப் பலகையும்
உடைய வெம் படலை திறமின் ஓடி, வய
தொளிய வென்ற உடை 'இடை' யினீர்!

## ஆங்கிலம்

ஆங்கிலம் அழகாகப் பேச, வாசிக்க, எழுத ஆறே மாதங்களில் படிக்க விரும்பினல் இலவச விபரங்களுக்கு எழுதுக.

அற்லஸ் ஹோல்,
723, மருதானை ரோடு,
கொழும்பு-10.
த. பெட்டி 649.

## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ANANDA MEDICAL HALL, SEA STREET, COLOMBO 11

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டுப் பாருங்கள்

குயுக்தி



டி. லிங்கம், குச்சவெளி

கே: பிரசங்கிகள் மேடையேறியதும் பெண்கள் பக்கமாகவே கண்களை வைத்துப் பேசுவதேன்?

ப: பிரசங்கம் கேட்க வந்த ஆண்களும் அந்தப் பக்கமே கண்களை வைத்திருப்பதால் தான்.

ஃ

க. இளவழகன், வவுனியா

கே: வளங்கொழிக்கும் தமிழ் வறண்டு வற்றலாவது எங்கே?

ப: இலங்கை வானொலி வறுத்தக ஒளி பரப்பிலே!

ஃ

எஸ். அரசரத்தினம், கிளிநொச்சி

கே: கல்லென்றாலும் கணவன், புல்லென்றாலும் புருஷன் என்று அந்தக்காலத்தில் சொன்னார்கள். இந்தக் காலத்தில்......?

ப: இளவலானாலும் சரி கிழவனானாலும் சரி கையில் பசையுள்ளவன்தான் கணவன் என்கிறார்கள்.

ஃ

எஸ். ஆர். தமிழ்செல்வி, எட்டியாந்தோட்டை.

கே: நான் காதலித்த ஒருவரை இன்னொருத்தி காதலிக்கிறாள், இதற்கு என்ன செய்யலாம்?

ப: உம்முடைய "சொக்குப் பொடி" பழையஸ்டொக்காகயிருக்கலாம், அதற்கு நான் என்ன செய்ய.

ஃ

ஸி. க. தம்பிராசா, கல்முனை.

கே: பட்டிருப்புப் பிரதிநிதி திரு. எதிர்மன சிங்கம் வாயே திறக்க மாட்டார் போல் இருக்கிறதே!

ப: ஏன் திறக்கமாட்டார், ஹோட்டல்களில் திறந்து வைக்கலைக் கென்று ஊற்றிக் கொள்கிறாரே.

ஃ

ச. அ. சவரிமுத்து, இளவாலை.

கே: காதலுக்குக் கண் இல்லை என்கிறார்கள். உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: ஏதும் இல்லை என்பதே என் அபிப்பிராயமாகும்.

கே: கற்பு என்பதன் பொருள் என்ன?

ப: பொற்பு என்றால் பொன்னின் தன்மை. கற்பு என்றால் கல்லின் தன்மை என்று பொருள். கல்லைப் போல் அசையாமல் மலையைப் போல் நிலையாக நிற்கும் பண்பு கற்பெனப்படும்.

ஃ

து. இலங்கேஸ்வரன், சந்திவெளி.

கே: தேய்ந்த செருப்பு குப்பையில் கிடப்பதேன்? தேவடியாள் தெருவில் அலைவதேன்?

ப: கட்டுவார் அற்று. (அதாவது கட்டுகின்றவார் அறுந்து போனவுடன் செருப்பு குப்பையில் வீசப்படுகிறது. தேவடியாளை யாரும் கலியாணம் செய்து கொள்ளாததனால் அவள் தெருவில் அலைகிறாள். இப்படி இரட்டை பொருள் உண்டு)

ஃ

மார்சலீன், மூதூர்.

கே: கண்ணிருந்தும் குருடாவதெப்போது?

ப: ஆசை அல்லது, ஆபிமானம் குறுக்கிடும்போது.

ஃ

அமலன், திருகோணமலை.

கே: நீங்கள் சிறந்தவன் என்று யாரை அழைப்பீர்கள்.

ப: இறந்தவனை!

கே: எல்லோரும் உண்மை பேச ஆரம்பித்துவிட்டால் என்ன நடக்கும்?

ப: உலகம் வாழாது. வானரதியே என்று அழைத்த காதலியை வனரமே என்று உண்மையைச் சொல்லி காதலன் அழைத்துவிட்டால் ஒரே ரகளைதான் அல்லவா?

ஃ

வே. ரதி, பண்டத்தரிப்பு.

கே: ஆணுக்கும் பெண்ணுக்கும் விவாகம் செய்து வைப்பதன் காரணம் என்ன?

ப: காரணம், ஆணுக்கும் ஆணுக்கும்—பெண்ணுக்கும் பெண்ணுக்கும் விவாகம் செய்து வைக்க இயற்கை ஏற்பாடு செய்து வைக்கவில்லையே என்பதுதான்.

ஃ

கே: பேரின்பம், வலைகட்டிறவு.

கே: பல ஆண்டுகள் ஆகியும் தமிழரசுக் கட்சி ஒரு தொழிலாளர் யூனியன் அமைக்காததன் காரணம் என்ன?

மிஸ்டர் குயுக்தியார்
C/o சுதந்திரன்,
த. பெ. 1183
கொழும்பு.—12

ப: தொழிலாளர் சமூகம் என்ற அப்பாவிக் கும்பலை ஏமாற்றுமலே தலைமைப் பதவிகளுக்கு வரக் கூடிய சூழ்நிலை தமிழ் பிரதேசங்களில் இருந்து வருவதால்.

ஃ

யோசா வாஸ், ஏறாவூர்.

கே: இக் காலத்து வாலிபர்கள் எல்லோரும் மீசை வைத்துக்கொள்கிறார்களே, எதற்காக?

ப: இக்காலத்துப் பெண்கள் அளவுக்கு மீறி முகத்தில் சாம்பல் அப்பிக் கொள்வதால் அதை வேண்டும் போது துடைத்துவிடுவதற்காக.

ஃ

க. பஞ்சலிங்கன், மட்டக்களப்பு.

கே: சொர்க்கம் எங்கேயிருக்கிறது?

ப: சொர்க்கம் சோற்றில் இருக்கிறது என்பான் மிஸ்டர் மூன்று நாள் பட்டினி. சொர்க்கம் தன் காதலியின் கைப்பிடியுள் என்பான் மிஸ்டர் காதல் கிறுக்கு. சொர்க்கம் அங்குமில்லை இங்குமில்லை. ஒருவனுடைய மனத்தில்தான் இருக்கின்றது என்கிறேன் நான்.

ஃ

பூ. இராசதிலகம், யாழ்ப்பாணம்

கே: உலகில் இன்று நிலையற்றது எது?

ப: கொம்யூனிஸ்டுகளின் வாக்குறுதி. ஹங்கேரியிலும் திபெத்திலும் காணவில்லையா?

ஃ

சின்னமணி கிருபைராஜ், மட்டுவில்

கே: மாமியும் மருமகளும் ஏன் ஒரு குடும்பத்தில் இருந்து அன்பாய் வாழ முடியாதாம்?

ப: [illegible] யார் மெத்திய மருமகள் வரப்போகிறதைப் பார்த்தால் தெரிகிறது.

கா சதாசிவம், அளவெட்டி

கே: பிள்ளையார் என்றால் யார்?

ப: தெரியாதா? மழைவேண்டும் என்ற விவசாயிக்கும் மழை வேண்டாமென்ற கூத்தாடிக்கும் ஒரு முடித் தேங்காய்க்காக இரண்டு பக்கமும் ஆஜராகும் வக்கீல்.

ஃ

சி. இராசையா, தாண்டவன்வெளி

கே: பண்டாவின் மூளைக்குள் இருப்பது களிமண் தான் என்கிறேன்......?

ப: தவறு களிமண் என்றால் கரைந்து கொடுத்திருக்கும். காங்கேசன் சுங்கிரீட் என்று சொல்லுங்கள்.

ஃ

ஜே. டி. சி. விக்டர், டெனியாய

கே: மரிக்காரின் முத்திரைகளில் பசையைக் காணவில்லையே?

ப: லாட்டரி அடித்தவர்கள் எல்லாம் மந்திரியானதும் பசைப்பிடியோடு விளங்குகையில் மந்திரி மரைக்கார் பசைக்கு எங்கே போவார்?

ஃ

செ. சத்குருகுல சிங்கம், வரணி வடக்கு

கே: பிறரை எல்லாம் திருந்தும்படி புத்தி சொல்லி விட்டுத் தான் மட்டும் திருந்தாதிருப்பவனுக்கு என்ன பெயர்?

ப: பத்திரிகாசிரியன்!

ஃ

அமுதா, மட்டக்களப்பு

கே: ஆண்கள் ஏன் தாங்கள் காதலித்த பெண்களைப் பார்க்க பணத்தை மிகவும் விரும்புகிறார்கள்?

ப: காதலி கட்டிலில் மட்டுந்தான் இன்பமளிப்பாள் பணம் ஹோட்டலில் கூட இன்பமளிக்குமே.

ஃ

என். வி. சிங்கம், வேலணை

கே: கடந்த காலத்து தலைமுறைப் பற்றிப் பெண்கள் எப்போதாவது சிந்திப்பதுண்டா? எப்போது?

ப: உண்டு, பிரசவ ஆஸ்பத்திரியின் கட்டிலில் வயிற்றைத் தூக்கிக் கொண்டு ஏறும் போது.

## ஒழிக, தீண்டாமை!

மாந்தர் குலத்தினில், தாழ்ந்தவர் என்றொரு
வர்க்கம் இயற்கையில் இல்லையடா!
ஆழ்ந்துணராத அகந்தையர், முன்பு
அமைத்த வழக்கம், இதைத் தகர்ப்போம்!

நாயினைப் பூனையைக் கோழியை வீட்டினுள்
நாள்தொறும் கொஞ்சிக் குலாவிடும் நாம்,
தூய மனிதனைச் சோதரனைத் தெருத்
தூரத்தில் ஒட்டித் துரத்துவதோ?

சொந்தச் சகோதரன் தன்னை மிதித்துத்
துவைத்துக் கொடுமைப் படுத்திடும் நாம்,
எந்தத் துணிவில், பிறர்நமக் காற்றும்
இடுக்கண் களைக்கண் டெதிர்ப்பது வோ?

வள்ளுவன், காந்தி, மகாகவி பாரதி
வாக்கில் உருகி வழிந்திடும் நாம், — அவர்
உள்ளம் வெறுத்திட்ட தீண்டாமைப் பேய்க்குணம்
ஊட்டி வளர்ப்பதோ, உண்மை அன்பு?

ஒன்று குலம்; தெய்வம் ஒன்று; தமிழினம்
ஒன்றெனக் கண்ட உயர் தமிழர்,
இன்றுபல சாதிப் பிரிவினை யால், இழி
வெய்தினர்; இந்நிலை மாற்றிடுவோம்!

அன்பில், அறிவில், அடக்கம், ஒழுக்கத்தில்,
ஆற்றலில் தாழ்வுயர் வாவதன்றி,
இன்பப் பரமன் படைப்பில், மதங்கள்
எவற்றிலும் பேதமொன் றில்லையடா!

பூசனை ஏதுக்குத் தாழ்குலம் என்று
புறையை இனத்தைதவிட் டோட்டிவிட்டால்?
ஈசன் கருணைப் பெருக்குண்டு; வையத்தில்
என்றும் தமிழருக் கேற்றமுண்டாம்!

தீண்டாமை, பாராமைப் பேய்களெல்லாம், கொடும்
தீய பொறாமையின் சோதரராம்!
தோண்டிப்பா தாளக் குகையிற் புதைத்தினித்
தோன்றுதல் வாமைகளை யொழிப்போம்!

—"பரமஹம்ஸதாசன்"


## "ஆஸ்த்மா"வைப் பற்றிய உண்மைகள்

ஆஸ்த்மா என்ற நோய்வு ஒரு பயங்கரமான வியாதியாகும். நரம்புத்தளர்ச்சி, காலநிலை, மூக்கடைப்பு மார்பில் ஏற்படும் சளி, வயிற்றுக்கோளாறுகள் ஆகிய பல காரணங்களால் ஆஸ்த்மா, என்ற நொய்வு ஏற்படுகிறது.

பல வருட ஆராய்ச்சிக்குப் பிறகு வியாதியைப் பூர்ணமாகக் குணமாக்கக் கூடிய "ஆஸ்த்மடிக்கா" என்ற அற்புதமான மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. இம் மருந்தின் பெருமையைப்பற்றி நூற்றுக்கணக்கான கடிதங்கள் தினசரிப் பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளதை நீங்கள் நன்கு அறிவீர்கள்-நன்றிக் கடிதங்கள் எழுதிய தமிழன்பர்கள் யாவருக்கும் நம் நன்றி—இன்னும் சில கடிதங்கள்.

(1) டாக்டர்,
எனக்கு பல வருடங்களாக இருந்த ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்சளி "ஆஸ்த்மடிக்கா" ஸ்பெஷல் பாவித்ததில் பூர்ண குணம்.
என் அன்பு நன்றி.

திரு. S. S. றம்து
C/o திரு. K அப்துல் வஹாப்
(மட்டக்களப்பு பகுதிக்கு அரசாங்க கண்டிராக்டர்
11, பவுன்டரி ரோட் (BOUNDRY ROAD.) மட்டக்களப்பு)

(2) எனது மனைவிக்கு 15 வருட காலமாக இருந்த ஆஸ்த்மா, மாரடைப்பு, பூர்ணசுகம் நன் நன்றி.

திரு. இ. சரவணமுத்து
பிரதம அதிகாரி
வி. சி. ஆபிஸ் பக்கியல்ல (களுவாஞ்சிக்குடி)
களுவாஞ்சிக்குடி (EP)

ஒரு பாட்டில் ஆஸ்த்மடிக்காவில் எனக்கிருந்த ஆஸ்த்மா என்ற நொய்வு பூர்ணசுகம்.

வணக்கம்
திரு. அ. ஆனந்தலிங்கம்
ருப்பியன் தோட்டம், கம்பர்மலை
வெள்வெட்டித்துறை

அன்பர்களே அநேக ஆண்டுகளின் ஆராய்ச்சியின் விளைவாக வந்த "ஆஸ்த்மடிக்கா" என்ற அற்புத மருந்தைப் பாவியுங்கள்.

3 பாட்டில்கள் தொடர்ச்சியாகப் பாவித்தால் வியாதி பூர்ண சுகமடையும் என்பது நம் உத்தரவாதம். ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்சளி, மார்பில் "கர்" என்ற சத்தம், இரவில் ஏற்படும் இருமல் இவைகளுக்கு

"ஆஸ்த்மடிக்கா"
(ஒரு நவீன சஞ்சீவி)

ஆஸ்த்மடிக்கா ஸ்பெஷல்—ரூ. 15/-
(மிக உபாதை தரக்கூடிய நாள் பட்ட ஆஸ்த்மாவுக்கு)
ஆஸ்த்மடிக்கா சாதாரணம் ரூ. 5/-

வி. பி. பி. சதம் -/85

விபரங்களுக்கு
டாக்டர்

சுக ஆதார வைத்தியசாலை
MODERN CLINIC
255, காலி ரோட், பம்பலப்பிட்டிய
கன்வென்ட் எதிரில்
கொழும்பு-4.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திண்ணைப் பள்ளிக்கூடம்

பொருளாதாரம் (13)

# திட்டமிடுதல் : ? ? ?

# PLANNING : Entrepreneurship

பாத்திரங்கள்

1. உபாத்தியாயர் உலகநாதர்
2. அப்பாக்குட்டி
3. குமரேசு

உபாத்தியாயர்:

சென்ற இரண்டு வாரங்களிலும் திட்டமிடும் பொழுது பொருளாதார அமைப்பின் பல்வேறு அம்சங்களும் முரண்பாடின்றி இணைக்கப்படுவதன் அவசியத்தை பல உதாரணங்களுடன் ஆராய்ந்தோம்.

குமரேசு:

இன்றைக்கு ஒரு நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைவதற்கு அந் நாட்டு மக்களிடையே அவசியம் மலிந்திருக்க வேண்டிய ஒரு பண்பைப்பற்றி யாராய்வோம்.

உபாத்தியாயர்:

நீங்கள் குறிப்பிடும் பண்பு, என்ன பண்பு?

குமரேசு:

அந்தப் பண்பை தமிழில் ஒரு சொல்லாலோ அல்லது இரண்டு சொற்களாலோ அல்லது அதற்கு மேற்பட்ட சொற்களாலோ திருப்திகரமாகச் சொல்லி வைக்க இயலாமலிருக்கின்றதே.

உபாத்தியாயர்:

என்ன அதிசயம்! தமிழ் பாஷையில் பண்புச் சொற்கள் பல்லாயிரம் உண்டே?

குமரேசு:

ஆம். அதுவும் உண்மைதான். காதலை வர்ணிக்க, காட்சியைச் சித்திரிக்க, இதயத்தின் எழுச்சிகளை எடுத்துரைக்க, வேதாந்தம் பேச இன்னும் எது எதுக்கெல்லாமோ தமிழில் நிறையப் பண்புச் சொற்கள் இருக்கின்றன. ஆனல் நாட்டுப் பொருளாதாரம் அபிவிருத்தியடைவதற்கு மக்களிடையே பெருமளவில் காணப்பட வேண்டிய ஒரு பண்பை — உயிர் நாடி போன்ற ஒரு பண்பை— குறிப்பிடுவதற்குத் தமிழில் தக்க சொல் இல்லை.

அப்பாக்குட்டி:

தமிழிலே அதுக்கு ஏத்த சொல் இல்லாவிட்டால் அதைப்பற்றி என்னண்டு பேசப்போருேம்?

குமரேசு:

அதற்கு ஒரு பஞ்சமும் இல்லை. தமிழில் தக்க சொல் இல்லையென்ற காரணத்திற்காக அந்த விஷயத்தைப் பேசாமல் விடப் போவதில்லை. உதாரணங்களை எடுத்து விளக்கிக் காட்டுவதுதானே.

ஆங்கிலேயன் இலங்கையை ஆட்சி பண்ணத் தொடங்கின காலத்தில், கண்டி இராச்சியத்தை ஆக்ரமித்தபோது, மலை நாட்டில் எத்தனை தனித் தனி ஆங்கிலேயன் எவ்வளவு தீவிரமாகவும் சுறுசுறுப்பாகவும், துணிச்சலுடனும் காப்பித் தோட்டங்களை உண்டாக்கினன் என்பதைச் சற்று ஊன்றி யோசியுங்கள்.

அவனுடைய சொந்த நாடு இங்கிலாந்து. இலங்கையிலிருந்து ஆருயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து வந்தான். புகைக் கப்பல் இல்லாத காலம். பாய்க் கப்பலில் இலங்கைக்கு வர மாசங்கள் ஆறு செல்லும். கொழும்பிலிருந்தோ கண்டிப் பகுதிக்குப் போவதற்கு ரயில் இல்லாத காலம் அது.

கண்டிப் பகுதியோ மலையும், காடும், புதருமாக இருந்த இடம். கண்டியில் வாழும் சுதேசிகளோ ஆங்கிலேயனுக்கு மாருக யுத்தம் செய்யும் மனோநிலையிலிருந்

சகாதேவன்

தவர்கள். தொழில் செய்வதற்கோ இலங்கையில் தொழிலாளி கிடையாது. இந்தியாவிலிருந்து வரவழைக்க வேண்டும். மலேரியாவும் வேறு எத்தனையோ விதம் விதமான வியாதிகளும் பீடிக்கக் கூடிய சூழல் இருந்தது.

காப்பிச் செடி இலங்கைக்குப் புதிது. வந்த ஆங்கிலேயனுக்கும் காப்பிச் செடி புதியது. இங்கிலாந்தில் காப்பிச் செடி வளர்த்தவன் அல்லன் அவன். இவ்வளவு சிக்கலான நிலைமையில் காப்பித் தோட்டங்கள் உண்டாக்கினல் வெற்றி கிட்டுமா, லாபம் கிடைக்குமா என்று முன்-கூட்டி அறிய வாய்ப்பு எதுவுமில்லை. அப்படியிருந்தும் எவ்வளவு துணிச்சலாகக் கருமத்திலிறங்கினன் வெள்ளையன் என்பதை எண்ணிப் பாருங்கள்.

சில ஆண்டுகளாக நல்ல பலனளித்து வந்த காப்பிச் செடி இடையில் ஒரு விநோதமான நோய் ஏற்பட்டு [illegible] டக்கார ஆங்கிலேயருக்கெல்லாம் நட்டம் பேசியது. அப்பொழுதும் சற்றும் சளைக்காமல் இந்த ஆங்கிலேயன் நோயினால் பீடிக்கப்பட்ட காப்பிச் செடிகள் முழுவதையும் களைந்து எறிந்து விட்டு வேறு ஒரு புதுச் செடியை, அதாவது தேயிலைச் செடியை உண்டு பண்ணினன். அவனுடைய துணிச்சலும் தன்னம்பிக்கையும் எப்படிப்பட்டது பார்த்தீர்களா?

நம் சமூகத்தில் உள்ளவர்கள் என்ன மாதிரி நடந்து கொள்கிறார்கள் என்பதை வெள்ளையனின் இந்தப் பண்போடு ஒத்துப் பார்த்தால் நான் முன்பு குறிப்பிட்ட பண்பு என்ன, எத்தன்மையானது என்பது புலனுகும்.

இன்றைக்கு இரண்டு வருடங்கட்கு முன்னர் அநேக தமிழர், ஏறக்குறைய அனைவரும் அரசாங்கத்தில் உத்தியோகமாக இருக்கிறவர்கள் அல்லது வேறு ஏதோ வகையில் படித்து உயர்ந்த பதவிகளிலிருப்பவர்கள், தலைக்கு பத்து அல்லது பதினைந்து ஏக்கர் காணி வவனியாப் பகுதியில் கமஞ் செய்வதற்கென்று அரசாங்கத்திடம் பெற்றனர்.

இந்தக் காணிகள் யாவும் மூன்று வருடங்களுள் செப்பனிடப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் கொடுக்கப்பட்டன. இம்மாதிரிக் காணி பெற்றவர்கள் ஏறக்குறைய எல்லோருமே உத்தியோகத்திற்காக தற்பொழுது தென் இலங்கையில் வாழ்பவர்கள். அவர்கள் தங்கள் சொந்த ஊராகிய யாழ்ப்பாணத்திற்குப் போவது, வருவது எல்லாம் இந்த வவனியாப் பகுதிக்கூடாகவே. அனேகர் மோட்டார் வண்டிகளில் வவனியாவிற்கூடாகவே இரண்டு மாசத்திற்கொரு முறையேனும் போக்கு வரத்துச் செய்பவர்கள். தற்பொழுது காட்டு நிலங்களைச் செப்பனிட புல்டோசர், டிராக்டர் போன்ற விதவிதமான உபகரணங்கள் உண்டு.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எத்தனையோ தமிழர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தில் தவித்துக் கொண்டிருக்கின்றனர். மலை நாட்டில் தோட்டங்களில் வேலையில்லாமல் தமிழ் மக்கள் திண்டாடிக் கொண்டிருக்கின்றனர். இலங்கையில் ஜனத்தொகையோ விஷம் தலைக்கேறும் வண்ணமாக நாளிலும் பொழுதிலும் ஏறிக்கொண்டிருக்கிறது. காணிப் பஞ்சம் நாளைக்கு நம்மை வாட்டப் போகின்றது என்பது வெள்ளிடைமலை.

கமஞ் செய்வது தமிழ் மக்களின் பாரம்பரியத் தொழில். அரசாங்கமோ விதை நெல் தொட்டு எத்தனையோ வசதிகள் அளிக்கத் தயாராக இருக்கிறது. விளைந்த நெல்லை உத்தரவாத விலைக்கு அரசாங்கத்திற்கே விற்றுச் சுளையாகப் பணம் பெறலாம். இவ்வளவு சாதகமான சூழ்நிலை இருந்தும் இன்றைய தமிழ் மக்கள் இந்த — நடுத்தர வகுப்புத் தமிழ் மக்கள்— தூங்கிக் கொண்டிருக்கின்றனர்.

ஒருசிலர் நான்கு ஐந்து ஏக்கர் வரையில் ஒருமுறை சேனை வேளாண்மை செய்து விட்டு "அப்பாடி, இந்த வவனியாக் காட்டுக்குள் என்ன மாதிரிக் கமஞ் செய்கிறது" என்று சலித்துக்கொள்கிருர்கள். கொழும்பில் "அனெக்சிகளில்", (தனி வீடாக வாடகைக்கெடுக்க முடியாது) சோம்பேறிக் கதிரைகளில் சாய்ந்து கொண்டு தூக்கப் பறிக்க முடியாத மாதிரி தொந்தி வளர்த்து, அதைப் பக்குவமாகத் தடவிக் கொடுத்துக் கொண்டிருக்கிருர்கள். இன்னும் சில மாசங்களில் மூன்று வருடத் தவணையில் கொடுபட்ட இந்த காணிகள் திரும்ப அரசாங்கத்தால் பறித்து எடுக்கப்பட்டுவிடும்.

இந்த இருசாராரும் நான் குறிப்பிட்ட வகையில் நடந்ததில் ஒரு வேற்றுமை தெற்றென விளங்குகிறது. ஆங்கிலேயனிடம் ஒரு விசேட

(13-ம் பக்கம் பார்க்க)

## எப்படிச் சொல்வது?

இன்றைக்கு நாம் விவாதிக்கும் விடயத்திற்குத் தமிழில் தலைப்புக் கொடுக்கவில்லை. அதற்குப் பதிலாக மூன்று வினுவடையாளங்கள் தரப்பட்டிருக்கின்றன. காரணம் ஆங்கிலத்தில் Enterprise, Entrepreneurship என்று குறிப்பிடப்படும் பண்பை சரியாகக் காட்டும் சொல் தமிழில் இல்லாததே.

சில கலைச் சொல் நிபுணர்கள் "முயற்சி" என்ற சொல்லடியாகப் பிறந்த பதம் ஒன்றைத் தயாரிக்கலாம் என்று கருதுகின்றனர். ஆயினும் இதுவரையும் தமிழில் "முயற்சி" என்ற சொல் நாம் மனத்தில் வைத்திருக்கும் பண்பைத் தக்கபடி குறிப்பதான உபயோகத்தில்லை.

நாம் இந்தப் பண்பைச் சரியாகக் குறிப்பதற்கேற்ற ஒரு சொல்லைச் சிருட்டித்து, அந்தக் கருத்துத் தொனிக்கும் வகையில் உபயோகித்து, வழக்கில் கொண்டு வரவேண்டும். தமிழ் வித்துவான்கள், அபிமானிகள் எவரேனும் இதற்கேற்ற கருத்துகளை தந்துதவ முன் வந்தால் அவை மகிழ்ச்சியுடன் வரவேற்கப்படும்.

—"சகாதேவன்"


# மௌலானு

## அச்சடி சீத்தைகள்



ரமணீகரமாக காட்சியளிக்க இன்றே தெரிவு செய்யுங்கள்

★ கண்ணைக் கவரும் டிசைன்கள்.
★ சாயம் மங்காதவை.
★ நீடிய உழைப்பு.
★ தரத்தில் உயர்வானது.

விசேஷமாக வரவழைக்கப்பட்டிருக்கும், புத்தம் புதிய டிசைன்களை, தெரிவுசெய்ய இன்றே விஜயம் செய்யுங்கள்.

மௌலானு (சிலோன்) லிமிட்.
கொழும்பு, மருதானை, கண்டி.


# மக்கள் குரல்

## தீண்டாமை

சமீபத்தில், தாழ்த்தப்பட்ட மக்கள் சமூகத்தைச் சேர்ந்த கலைஞர்கள் பங்குபற்றும் நிகழ்ச்சிகளில் தாம் கலந்துகொள்ளப் போவதில்லை என்று 'உயர் சாதி'க் கலைஞர்கள் பிடிவாதமாகச் சொல்லிவிட்டதாகப் பத்திரிகைகளில் செய்தி படித்தேன்.

கலையிலே கூடச் சாதியைக் கலக்கும் கொடுமை தமிழன் வாழும் இடங்களைத் தவிர வேறெங்கும் காணமுடியாத ஒன்ருகும்.

குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழரிடையே சாதி வேற்றுமை உணர்வு எவ்வளவு தூரம் வேரூன்றி இருக்கிறது என்பதற்கு இது ஓர் தக்க உதாரணமாகும்.

தமிழரசார் முன்னின்று நடத்தும் தீண்டாமை வாரம் இன்றைய நிலையில் அவசியம் வேண்டியதே. ஆயினும் செயல் இன்றி வெறும் பேச்சுகளோடு விஷயம் முடியுமாயின் அந்த வாரத்தாலும் ஆகப்போகும் உருப்படியான நன்மை ஒன்றுமில்லை.

—யாழ்-மைந்தன்
யாழ்ப்பாணம்

## தி. மு. க. வெற்றி

இலங்கையில் நாம் இன்னலுற்ற காலை நெஞ்சம் இளகி நமக்கு ஆறுதலும் தேறுதலும் கூறிவரும் தமிழ் நாட்டு அரசியல் கட்சிகளில் முக்கியமானது அறிஞர் அண்ணுவின் தி. மு. க. கழகமாகும்.

கடந்த வருட வகுப்புக் கலவரத்தின் போது நாம்சொல்லொணுக் கஷ்டங்களுக்கு இலக்காகியது கண்டும் ஏதும் செய்யாது பார்த்துக் கொண்டிருந்த தமிழ் நாட்டு ஆட்சியாளரை இன்று கழகம் பழி தீர்த்ததுபோலச் சென்னை நகரசபைத் தேர்தலில் தோற்கடித்திருக்கிறது. கொம்யுனிஸ்ட்டுகளையும்சின்னத்துரையின் பிரஜா சோஷலிஸ்ட்டு கட்சியையும் மற்றெல்லாக் கட்சிகளையும் ஒரு புறத்தில் ஒதுக்கிவிட்டு தி. மு. க. அதிகப்படியான ஸ்தானங்களைக் கைப்பற்றி இருப்பதில் ஈழத்தில் உள்ள எமக்கும் மகிழ்ச்சியே.

அதிகாரம் இல்லாமல் இருந்தபோதே நமக்கு உதவத் துடித்த தி. மு. க. வுக்கு ஓரளவு அதிகாரம் இப்போது கைக்கு வந்திருப்பதால் இனி எதற்கும் அதை நாம் எதிர்பார்த்து இருக்கலாமல்லவா.

—கார்வண்ணன்
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்பான்மையினரிடம் நீதி கோருபவர்கள் தம்முள் சிறுபான்மையினருக்கு அநீதி செய்வதா?

# தீண்டாமை ஒழிந்தாற்றான் தமிழினம் விடுதலை அடைய முடியும்

## தமிழரசுத் தந்தையின் கருத்து

**யாழ்ப்பாணத்தில் 15-ந் தேதி முதல் நடைபெற்றுவரும் தீண்டாமை வாரத்தை யொட்டித் தமிழரசுத் தந்தை சுதந்திரனுக்கு எழுதிய விசேட கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.**

மனிதருக்குள் பாகுபாடு காட்டும் வழமை இலங்கையில் மாத்திரமல்ல, உலகத்தின் பல பகுதிகளிலும் இருந்தே வருகின்றது.

இங்கிலாந்தில் ஐரோப்பாவில் எல்லாம் வகுப்பு வேற்றுமை இருந்தது. இப்பொழுதும் சிறிதளவில் இருக்கத்தான் செய்கிறது.

அமெரிக்காவில் வெள்ளையர் தமக்குள் வகுப்பு வேற்றுமை பாராட்டுவதில்லை. இருந்தாலும் அங்கே வெள்ளையருக்கும் கறுத்தவருக்குமிடையே பெருத்த வகுப்பு பிரிவினை இருந்து வருகிறது.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஜாதி வேறுபாடுகள் மக்களைக் கெட்டியாய்ப் பிரித்து வைத்து விட்டன பல பிரிவுகளாக.

### அவலட்சணம்

ஜாதிப் பாகுபாட்டிற் படுபாதகமான கொடுமை தீண்டாமை என்ற வடிவத்தில் இன்று கோரத் தாண்டவம் ஆடுகிறது.

உலகெங்குமுள்ள மக்களில் பலரும் வகுப்பு வேற்றுமை, நிறபேதம், ஜாதி வேறுபாடு இவற்றைப் பாராட்டல் இழுக்கென்றும் அவலட்சணம் என்றும், எனவே இவை அகற்றப்படவேண்டும் என்றும் ஒத்துக் கொள்கிறார்கள்.

### இந்தியாவில்...

இந்தியாவில் மகாத்மா காந்தியும் இந்திய தேசிய காங்கிரஸும் இந்திய சுதந்



திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம்

திரம் பெறுவதற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தார்களோ, அவ்வளவு முக்கியத்துவம் தீண்டாமை ஒழிப்புக்கும் கொடுத்தார்கள். இந்தியாவில் தீண்டாமை முற்றாக ஒழிக்கப்படாவிட்டாலும் இந்தப் பணியில் அங்கு குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள்.

### ஒழிக்க வேண்டிய சமூகக் கொடுமை

யாழ்ப்பாணத்தில் தீண்டாமையை நீக்க வேண்டும் என்ற கோஷம் பெருந் தொகையான மக்களிடையே தோன்றுகிறது.

இந்தத் தீண்டாமை ஒழிப்பு நோக்கத்தை ஒரு சிலர் எதிர்க்கிறார்கள். பிற்போக்கு எண்ணம் உடையவர்கட்கு தீண்டாமை உண்மையிலேயே ஒழிக்கப்பட வேண்டியதோர் சமூகக் கொடுமை என்பதை விளக்கி அவர்களை மனம் திரும்ப வைக்க வேண்டியது முற்போக்கு எண்ணம் கொண்டவர்களின் கடமையாகும்.

### ஏன் ஒழிக்க வேண்டும்?

அறிவும் தெளிவும் பெற்ற மக்கள் பல காரணங்களுக்காக, தீண்டாமை ஒழிய வேண்டும் என்று உணர்கிறார்கள்.

அந்தக் காரணங்களாவன:

(1) தீண்டாமை ஹரிஜனங்களுக்கு பல கஷ்டங்களை விளைவிக்கின்றது. அதை விட அந்த வகுப்பினர்க்குப் பெரும் அநீதியாய் இருக்கிறது.

(2) தீண்டாமை ஹரிஜனங்கட்கு மட்டும் துன்பத்தை விளைக்கவில்லை. தமிழ் சமூகம் அனைத்துக்குமே கஷ்டத்தைத் தருகின்றது. அதனால் உயர்ந்தவகுப்பு மக்கள் என்று சொல்லப்படுகிறவர்களுக்கும் கூட, கேடு நேர்கிறதே,தவிர அனுகூலம்சிறிதுமில்லை. நமது சமூகத்தில் இந்தக்குறைபாட்டை வைத்துக்கொண்டு, நாம் எல்லாம் இன்றைய உலகில் வளர்ச்சி அடைவது முடியாத காரியம்.

(3) கொடுமைகள் எல்லாவற்றிலும் தீண்டாமை கொடுமைதான் மிக மோசமானது. தனிப்பட்டவர்கள் மாத்திரமல்ல சமூகங்களும் நீதி ஒழுங்குக்குக் கட்டுப்பட்டவர்களாக இருக்கிறார்கள். தனிப்பட்ட ஒரு மனிதன் எப்படிக் கொடுமையை வினதக்க, கொடுமையை அறுக்கிறானே, அதேபோலத்தான், ஒரு பிரிவினருக்கு எங்கள் சமூகம் கொடுமை புரிந்து ஒடுக்குவது போல, எங்கள் சமூகமும், வேறு ஒரு பிரிவினரால் ஒதுக்கப்பட்டுக் கொடுமைக்குள் ஆழ்த்தப்படுகிறது.

### எப்படி வெற்றி கிடைக்கும்?

அரசியல் துறையில் தமிழ் மக்கள் இலங்கையில் அழிந்து போகாமல் தப்பிப் பிழைப்பதற்கு சீவமரணப் போராட்டம் நடாத்தி வருகிறார்கள்.

பெரும்பான்மைச் சமூகம் தங்களை அடக்கி, ஒடுக்கி, வருவதாக, தமிழ் சமூகத்தினர் குரல் எழுப்புகிறார்கள். தமிழ் சமூகத்துள் ஒரு பிரிவினர் அடக்கி ஒடுக்கப்பட்டு வரும் வரையில் தமிழ் மக்கள் பெரும்பான்மையினருடைய அடக்கு முறையைத் தாம் முறியடித்து வெற்றி காண்போம் என்று எதிர்பார்க்கமுடியாது. ஏனெனில் [illegible] இப்பொழுதும் அடக்கி மடக்கி வைத்திருக்கிறோம்.

(13-ம் பக்கம் பார்க்க)

## சங்கப் பலகை

### தமிழோசை

பதிப்பாசிரியர்: க. நவசோதி. வெளியீடு: வளரும் எழுத்தாளர் சங்கம். அலுவலக முகவரி: தமிழோசை, 29 லஸ்கறின் தெரு, கொழும்பு 13. மாத வெளியீடு. விலை சதம் 15.

வளரும் எழுத்தாளர் சங்கத்தின் மாத சஞ்சிகையான தமிழோசையின் முதல் இதழ் கிடைக்கப்பெற்றோம்.

'தமிழ் மக்களும், தமிழ் இலங்கையும் செழிப்புற்று வளம் பெறத் தமிழ் மொழி வளர வேண்டும், வாழ வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு' தொடங்கப்பட்ட முயற்சியின் பயனாக வெளிவந்துள்ள முதல் இதழில் எழுத்துத் துறையில் அனுபவம் பெற்ற எழுத்தாளர்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் இடம் பெற்றிருக்கின்றன. வளரும் எழுத்தாளர்களின் தரமான படைப்புகளும் தரப்பட்டிருக்கின்றன. உதயணின் 'மனக் குறைவு' என்ற கதை உள்ளத்தில் நெடுநாள் நின்று உறவாடக் கூடிய சிறந்த கதை.

'பதவி உயர்வு' என்ற தலைப்பில் பதிப்பாசிரியர் நவசோதி எழுதியுள்ள கதையைப் படிக்கும் போது வளர வேண்டிய எழுத்தாளர் இப்படி எழுதி வளரலாமா, ஒரு கால் வளர்ந்துவிட்டாலும், அதால் எவருக்கேனும் லாப முண்டா என்று எண்ணத் தோன்றுகிறது. யார் மீதோ கொண்ட வெறுப்பை வெளிக்காட்டக் கதையைக் கருவியாக்கி, தமிழைத் தாழ்த்தி, தமிழர் பண்பாட்டைப் பாழ்படுத்தி,எழுத்தாளர் வர்க்கத்தையும் தலை குனிய வைக்கவேண்டுமா? இப்படியான எழுத்துக்கள் குறிப்பாக வளரும் எழுத்தாளருக்கும் அவர்கள் ஏட்டுக்கும் அறவே கூடாது.

இந்த முதல் இதழில் அச்சுப் பிழைகள் அதிகமாகக் காணப்படுகின்றன. அடுத்தடுத்த இதழ்களில் அச்சுப் பிழை ஒன்றுதானும் இல்லாமல் செய்யச் சம்பந்தப்பட்டவர்கள் முனைய வேண்டும்.

அழகான முகப்போடு 28 பக்கங்களில் வெளிவந்திருக்கும் முதல் இதழில் மேற்சொன்ன குறைபாடுகள் இருப்பினும் வளரும் எழுத்தாளரின் முயற்சி பாராட்டப்பட வேண்டியதே. விலையும் குறைவே. வரவிருக்கும் இதழ்களில் குறைகள் தவிர்க்கப்படுமாயின் அவ்விதழ் தமிழ் மக்களிடையே நல்ல செல்வாக்கு ஏற்படும் என்று உறுதியாக நம்பலாம்.

## நமக்குத் தொழில் கவிதை

நமக்குத் தொழில் கவிதை என்ற வெண்பாப் போட்டியில் கவிதை எழுத விரும்புவோர் யாவரும் கலந்து கொள்ளலாம். கட்டுப்பாடு கிடையாது. ஒருவர் எத்தனை வெண்பாக்கள் வேண்டுமானாலும் எழுதலாம். கவிதை அஞ்சல் அட்டையில் (Post Card) மட்டுந்தான் எழுதப்பட வேண்டும். ஒரு அட்டையில் ஒரு வெண்பாவுக்கு மேல் எழுதக் கூடாது. கீழே தரப்பட்டிருக்கும் அச்சிட்ட முகவரியை வெட்டி அஞ்சலட்டையில் ஒட்டி அனுப்ப வேண்டும். அச்சிட்ட முகவரி ஒட்டப் பெறாத அட்டைகள் கவனிக்கப்படமாட்டா.

போட்டி இல 6:

### திருவள்ளுவர் திருநாள் வெண்பாப் போட்டி

#### ஒரு சவரன் எடையுள்ள தங்கப் பதக்கம் பரிசு

இந்த ஆறுவது வெண்பாப் போட்டிக்கு திருவள்ளுவர் திருநாளை யொட்டி, "நானிலத்தை வாழ்விக்கும் நாள்" என்ற ஈற்றடி தரப்பட்டிருக்கிறது.

மத்தியஸ்தர்களால் தேர்ந்தெடுக்கப்படும் வெண்பாக்கள் முதலில் சுதந்திரனில் வெளியாகும். பின்னர் அவை தமிழ் மறைக் கழகத்தினரால் ஒரு தொகுப்பு நூலாக வெளியிடப்படும்.

மத்தியஸ்தர்களின் அபிப்பிராயப்படி மிகச்சிறந்த வெண்பாவை எழுதியவருக்கு ஒரு சவரன் எடையுள்ள தங்கப் பதக்கம் ஒன்றினைப் பரிசளிக்க தமிழ் மறைக் கழக ஆயுள் தலைவர் பண்டிதர் வித்துவான் கா. பொ. இரத்தினம் எம். ஏ. பி. ஒ. எல். முன்வந்துள்ளார். இரண்டாவது மூன்றாவது ஸ்தானங்களை அடைவோர் புத்தகப் பரிசில்களைப் பெறுவர்.

பரிசில்கள் 1959 மே மாதம் 22-ந் தேதியன்று யாழ்ப்பாணத்தில் தமிழ் மறைக் கழக ஆதரவில் நடைபெறவிருக்கும் திருவள்ளுவர் திருநாள் விழாவில் சுதந்திரன் பிரதிநிதியினால் வழங்கப்படும்.

—ஆசிரியர்: சுதந்திரன்.

'நமக்குத் தொழில் கவிதை'
C/o ஆசிரியர்,
சுதந்திரன்,
த. பெ. 1183.
கொழும்பு—12.

வெண்பாக்கள் கிடைக்க வேண்டிய இறுதி நாள் 30—4—1959

'நானிலத்தை வாழ்விக்கும் நாள்'

தலை முடியை சிவுவதல்ல உங்கள் பிரச்னை!
நீங்கள் விரும்புவதுபோல்
தலை முடியைச் சிவுவது எப்படி என்பதுதான்!

நேத்திர லோக
உங்கள் பிரச்னையை தீர்க்கிறது.

விசேஷ கலவைப் பொருட்கள் சேர்க்கப்பட்ட தனித் தயாரிப்பான நேத்திரலோக தைலம் தலையைக் குளிரச் செய்கிறது. உச்சந் தலையை சுத்தப்படுத்துகிறது. சொடுகு ஏற்படாமல் தடுக்கிறது. நீண்ட, அடர்ந்த, சுருண்ட, ஆரோக்கியமான கேசத்தை வளர்க்கிறது.

நேத்திரலோக தைலம்

★ நலை மயிர் நரைப்பதைத் தடுக்கிறது.
★ கண் பார்வையை துலக்குகிறது.
★ தலை சம்பந்தப்பட்ட எல்லா வியாதிகளையும் தடுக்கிறது.
★ கண் சம்பந்தப்பட்ட வியாதிகளைப் போக்குகிறது.
★ பீனிசம் ★ தலை எரிவு ★ தடிமல்
★ குளிர் ★ நரம்புத்தளர்ச்சி ★ தலைவலி
★ பல், காது சம்பந்தப்பட்ட சகல வியாதிகளையும் தவிர்க்கிறது.

நேத்திர லோகத் தைலம் இலங்கையடங்கிலும், அல்லது நேரில் எம்மிடமும் கிடைக்கும்.

விலை: 6 அவுன்ஸ் போத்தல் ரூபா 3/- தபாற் செலவு 50 சதம்.

டபிள்யு. கே. ஜினதாஸ,
ஆயுர்வேத வைத்தியர்
161, நோறிஸ்றோட், புறக்கோட்டை
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் அபாயகரமான விரோதி



## பயோரியா

**ஈறுகளில் இரத்தம் வடிதல் ? வாய்ப் புண் ? பல்லாட்டம் ?**

இந்த பயங்கர வியாதி உங்கள் பற்களை விழச் செய்வது மன்றி, ஆரோக்கியத்தையும் கெடுத்து விடுகின்றது. தேகத்தில் ஏற்படும் வியாதிகளில் 85 சத விகிதத்திற்கு பயோரியா தான் காரணமென பரிசோதனையிலிருந்து தெரிய வருகிறது. ஆயினும் அநேகர் இந்நோயின் அறிகுறிகளை அலட்சியம் செய்து நாளா வட்டத்தில் கடுமையான நோய்க்குள்ளாகின்றனர். நவீன சாஸ்திரீய முறைப்படி தயாரிக்கப்பெற்றுள்ள பயோரிஸான் எந்த நிலைமையிலுள்ள பயோரியாவையும் நீக்குவதில் கைகண்ட மருந்து பயோரிஸான். ஈறுகளில் இரத்தம் வடிதலை நிறுத்தி, சீழ் பிடிப்பதைத் தடுத்து, பற்களை ஆட்டமில்லாமல், உறுதியாக நிலைகொள்ளச் செய்கிறது பயோரிஸான்.

விலை ரூபா. 3/50

தபால்செலவு பிரத்தியேகம்

இலங்கையில் சோல் ஏஜண்டுகள்:

**பயனீர் பார்மஸி,**

ராப்புத்தெரு, கொழும்பு

# தடுப்புக் காவலில்
## மூன்று மாதங்கள்

( 13 )

உதவிப் பொலிஸ் சுப்பிரின்டென்டென்ட் சந்திரசேகரா சொல்லிவிட்டுச் சென்ற செய்தி திரு.வன்னியசிங்கம் இரத்தக் கொதிப்பினால் தாக்கப்பட்டிருக்கிறார் என்பதுதான்.

இரத்தக் கொதிப்பு அவரோடு சிலகாலமாக ஒன்றியிருக்கும் நோயாயினும் தற்போதுள்ள நிலையில் அந்நோய் அவரைப் பெரிதும் தாக்கியிருக்குமென்பதில் சந்தேகமில்லை. வேறு நாட்களாக இருந்தால், அல்லது வீட்டில் இருக்கும் சமயமாக இருந்தால் நண்பர்களாயினும், அன்பு மனைவியாயினும் உடன் இருந்து கவனிப்பார்கள். இங்கு, தனி அறையில் அவரை யார் கவனிக்கப் போகிறார்கள் என்று நான் பெரிதும் கவலைப்பட்டேன்.

### கட்சி அமைக்க உறுதுணை

திரு. செல்வநாயகம் கட்சியை அமைக்க எவ்வளவு முயன்றாரோ, அவ்வளவு தூரம் அவரின் முயற்சிக்கு உறுதுணையாக, உற்ற துணைவனாக நின்று கைகொடுத்தவர் திரு. வன்னியசிங்கம் ஆவார். தமிழ்க்காங்கிரஸ் அரசியல் குத்துக்கரணம் அடித்தபோது, தமிழ் மக்களை நிரந்தர அடிமைகளாக்க, வாழைப்பழத்தில் ஊசியை புகுத்துவது போல் காரியமாற்றிய யூ. என். பி. கட்சியின் மந்திரி பதவிகள் என்னும் (அ) சிங்காரக் கோட்டைக்குள் தலைவர் ஜீ. ஜீ. பொன்னம்பலமும் அவரின் சிட்டுகோடிகளும் நுழைந்த சமயத்தில், தன்னந்தனியாக நின்ற திரு. செல்வநாயகத்துக்கு முழுப் பலமும், தைரியமும், நம்பிக்கையும் ஊட்டியவர் திரு. வன்னியசிங்கமே.

### அருமைமிகு தலைவர்

இலக்கணத்திற்கு இலக்கியம் போன்ற பிரதிபிம்பமாக விளங்கியவர் திரு. வன்னியசிங்கம். தர்மருக்கு ஒரு காண்டீபன் போல, இராமருக்கு ஒருலட்சுமணன்போல, இராவணனுக்கு ஒரு இந்திரஜித் போல, காந்திஜிக்கு ஒரு நேரு போல திரு செல்வநாயகத்தோடு தோளோடுதோள் நின்று கட்சியைக் கட்டியெழுப்பவும், தமிழ் மக்களுக்கு உதவவும் வீடு—வாசல் — மனைவி — மக்கள் என்று பாராது அல்லும் பகலும் கடமை செய்து வந்தவர் திரு. வன்னியசிங்கம். இப்பொழுதும் அதே வகையில் பணி செய்துவரும் அருமைமிகு தலைவர் அவர்.

**மட்டக்களப்பு எம். பி.**
**திரு. செ. இராசதுரை**

### 'ஏகக் குரல்'

1952-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் திரு. செல்வநாயகம் உட்பட பல தமிழரசுக் கட்சிப் பிரமுகர்கள் தோல்வி கண்டபோது யாழ்ப்பாணம் முழுவதற்கும் ஒரேயொரு கட்சிப் பிரதிநிதியாக—பாராளுமன்றத்தில் இருந்தவர் திரு. வன்னியசிங்கம். 1952லிருந்து 1956 பங்குனி மாதம் வரை அவர் பாராளுமன்றத்திலும், வெளியிலும் செய்த அளப்பரிய சேவையை ஒரு போதும் மறக்க முடியாது. அரசியல் எதிரிகளுக்குச் சூடு கொடுக்கவும், அரசாங்கத்தின் கொடுங்கோன்மைக்கு சவுக்கடி கொடுக்கவும் அவர் பாராளுமன்றத்தில் தவறுவதே இல்லை. இலங்கைத் தமிழ்ப்பேசும் சமூகத்தின் இன்னலை எடுத்து பாராளுமன்றத்தில் பேசும் 'ஏகக் குரலாக' திரு. வன்னியசிங்கம் அப்போது விளங்கினார்.

### செய்யும் தவறு!

அரசாங்கத்திற்கு அவர் பெரும் தலையிடியாக இருந்தார். மானம், உணர்வு, சுதந்திர தாகம், அடிமைத்தளையை தகர்த்தெறிய வேண்டும் என்னும் ஆர்வம் குடிகொண்ட தமிழன்பர்களுக்கு அவர் உற்ற நண்பனாகத் தோன்றினார்.

அதே சமயத்தில், அன்று போல் இன்றும் கூட அரசியல் எதிரிகளுக்கு அவர் ஒரு சிம்ம சொற்பனமாகவே காட்சியளிக்கின்றார். தமிழரசுக் கட்சியில் திரு செல்வநாயகத்தைத் தமக்குப் பிடிக்கிறது, அவரைப் பிடிக்கிறது, இவரைப் பிடிக்கிறது என்று சொல்லும் சிலர் திரு வன்னியசிங்கத்தை மட்டும் [illegible] கூறுவார்கள். இப்படிக் கூறுபவர்களுக்கு திரு வன்னியசிங்கம் ஒன்றுமே தீமை செய்து விடுவதில்லை. அப்படிப்பட்டவர்கள் செய்யும் அரசியல் விபசாரத்தை, அதன் அலங்கோலத்தை, அப்பட்டமாக வெளிப்படுத்துவதுதான் அவர் செய்யும் தவறு!

### கேள்விகளுக்குப் பதில்

தமிழரசுப் பிரசார மேடைகளில் திரு வன்னியசிங்கம் இந்திய சுதந்திரப் போராட்ட சரித்திரத்தில் முக்கிய இடம் பெற்றுள்ள சர்தார் வல்லபாய் படேலைப்போல் விளங்குவார். பொது மக்களிடமிருந்து கிடைக்கும் எத்தகைய கேள்விகளுக்கும் சளைக்காமல் பதில் கூறும் ஆற்றல் தமிழரசுக் கட்சியில் அவரிடமே உண்டு. நகைச்சுவையும் கொள்கை விளக்கமும் அவர் பதங்களில் மிளிரும். சிரிப்போடு கூடவே சிந்தனைக்கும் வேலை கொடுப்பார். செந்தமிழ் மக்களின் சீர்கெட்ட நிலையை தமது பதிலில் அப்பட்டமாக வெளியிட்டு கேட்போரைத் தம்பால் ஈர்க்கும் ஆற்றல் அவருக்குண்டு. எவரையும் திருப்திப் படுத்துவதற்காக எதையும் மூடி மறைக்கும்போலித் தன்மையை திரு வன்னியசிங்கத்திடம் காண முடியாது நண்பர்களாயினும் சரி விரோதிகளாயினும் சரி அவர்களிடமுள்ள குறைகளைச் சுட்டிக்காட்டுவதும், நிறைவுகளைப் பாராட்டுவதும் அவரது இயல்பான குணங்களாகும். இதனால் வெறும் முகஸ்துதிகளையும், போலிப்பாராட்டுகளையும் எதிர்பார்க்கும் பேர்வழிகளுக்கும் தமிழினத்தின் அழிவுக்கு பக்கபலமாக நின்ற தமிழ் சமூகத்தின் துரோகிகளுக்கும் அவர் விரோதியாகக் காட்சியளிக்கின்றார்.

### தாக்குதலால் துவண்டு போவதில்லை

அவரோடு நெருங்கிப் பழகாதவர்கள் கூட அவரைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும் சொல்வதை நினைத்தால் சிரிப்புத்தான் வரும். அவரைப்பற்றிக் கூறும் பொய்க் கூற்றுக்களைப்பற்றிக் கேட்டால் சிரித்தபடி, "அது என் ஜாதகப் பொருத்தம் ராஜா" என்று சொல்லி சமாதானப் படுவார். எதிரிகளின் ஈனத்தனமான தாக்குதல்களினால் மனம் இடிந்து போவதோ, தளர்ந்து போவதோ அவர் வழக்கமில்லை.

### குழந்தை உள்ளம்

திரு வன்னியசிங்கம் எவருடனும் சகஜமாகப் பழகுவார். ஏழை-பணக்காரன், படித்தவன்-பாமரன், பெரியவன்—சிறியவன் என்கிற பேதமின்றி எல்லாருடனும் அன்போடு பழகும் சுபாவமுடையவர். டம்பமோ வீண் டாம்பீகமோ, பம்மாத்துக்களோ அவரிடம் கிடையவே கிடையா. அவருடைய உள்ளம் குழந்தைகளுடைய இருதயத்தைப் போன்றது. பளிங்கு போல் தெளிவானது.

### நீதிக்காகப் போராடுவார்

அநீதிக்காக கொதிப்பார். மனச்சாட்சிக்கு விரோதமான எதையும் அவர் ஏற்றுக்கொள்ள மாட்டார். அதற்காக நெருங்கிய நண்பர்களின் வெறுப்பைக் கூட சம்பாதிக்க அவர் தயங்குவதில்லை. நீதிக்காக போராட அவர் பின்னிற்பதில்லை. திரு. வன்னியசிங்கத்தோடு நெருங்கிப் பழகியவர்கள் அவரைப் பகைக்க என்றுமே விரும்பமாட்டார்கள். தமிழரசுக் கட்சியில் இன்று 'செயல்! செயல்!! செயல்!!!,' என்று துடிக்கும் பாராளுமன்றப் பிரதிநிதிகளில் திரு. வன்னியசிங்கம் முதன்மையானவர்.

### தியாகம்

கட்சி பிரசார வேலைகளுக்காக தமிழரசுக் கட்சி பாராளுமன்ற அங்கத்தவர்கள் தத்தம் தொழில்களை ஒதுக்கி வைக்க வேண்டுமென்று தமிழரசுக் கட்சி செயற்குழு முடிவு செய்தபோது தனது நியாய துரந்தரர் வேலையை முதலில் நிறுத்தியவர் திரு. வன்னியசிங்கம் ஆவார். பல மாதங்களாக அந்த முடிவின் படி உறுதியாக நின்று தமிழ் மக்கள் வாழும் பகுதிகளெங்கும் மின்வேகப் பிரசாரம் செய்தார்.

### பளிச்சென்று புள்ளி விவரம் தருவார்

இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு முழுவதையும் பக்கத்துக்குப் பக்கம் வரிக்கு வரி படித்தறிந்துள்ள திரு. வன்னியசிங்கம் இலங்கை சம்பந்தப்பட்ட மட்டிலும், அதிலும் குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களைப் பொறுத்த வரையில் அவற்றிலுள்ள கிராமங்களின் பூமிசாஸ்திர அமைப்பு, நிலவளம், மக்கள் வாழ்க்கை முறை முதலான சகல விவரங்களையும் நொடிப் பொழுதில் தரக்கூடிய திறமையுள்ளவராவர். இன்னும், அரசாங்க இலாகாக்களில்சம்பந்தப்பட்ட மட்டிலும் எந்த ஒன்றைப் பற்றிய புள்ளி விவரங்களையும் பளிச் பளிச் சென்று வெளியிடும் ஞாபக சக்தியும், பேராற்றலும் வாய்ந்தவராக இருக்கிறார்.

தமிழ்ப் பிரதேசங்களில் கல்லோயா, அல்லை, கந்தலாய், பதவியா ஆகிய குடியேற்றத் திட்டங்களில் நடைபெறும் கொடுமைகளைச் சுட்டிக்காட்டி, புள்ளி விவரங்களை அள்ளி வீசி அரசாங்க மந்திரியையே பேந்தப் பேந்த விழிக்கச் செய்துவிடும் அசாத்தியத் திறமை அவரிடமுண்டு;

### சட்ட நுணுக்கங்கள்


பாராளுமன்ற நிகழ்ச்சி முறைகள் சம்பிரதாயங்கள், சட்ட நுணுக்கங்கள் முழுவதும் நன்றாக அறிந்த ஒரேயொரு பாராளுமன்றப் பிரதிநிதி திரு. வன்னியசிங்கம் என்றால் மிகையாகாது.

பாராளுமன்ற நடைமுறை விதிகளில் யாருக்காவது சந்தேகம் தோன்றினால் "மெயின்" (Maine) ஐப் புரட்டிப் பாருங்கள் என்று சொல்வார்கள். "மெயின்" எழுதிய பாராளுமன்ற நடைமுறைகள் பற்றிய புஸ்தகம் சர்வதேசப் புகழ் வாய்ந்தது. உலக நாடுகளின் பாராளுமன்றங்களுக்கு துணையாக நிற்கும் புஸ்தகம் இது. பாராளுமன்ற நடைமுறைகள் பற்றி எழும் சந்தேகங்களைத் தீர்க்க உதவும் ஏடுகளில் இது முக்கியமானது. ஆனால், "மெயினில் தப்பித் தவறி அச்சுப்பிழைகளாவது இருக்கலாம், எதற்கும் வன்னியசிங்கத்தைக் கேளுங்கள்" என்று தமிழரசுக் கட்சியினர் சொல்லுமளவுக்கு அந்தத் துறையில் சிறந்து விளங்குபவர் திரு. வன்னியசிங்கம்.

என் எண்ண அலைகளுக்கு திடீரென்று முற்றுப் புள்ளி வைக்கப்பட்டாகிவிட்டது. அதற்குக் காரணமாயிருந்ததை என்னால் என்றும் மறக்க முடியாது.

—(தொடரும்)

**மொரிஸன் பம்புகள்**



நெருங்கிப் பொருந்திய விவசாயத்திற்குரிய பம்புகள் மண்ணெண்ணெயால் தாமே இயங்கவும், நீடித்த பாவனைக்கும் உத்தரவாதமுள்ளவை.

1½, 2, 2½ அங்குல அளவுகளில் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

**கே. என். அப்துல் காதர் ராவுத்தர் அன் கம்பெனி லிமிட்டெட்,**

312, ஸ்கின்னர்ஸ் ரோடு தெற்கு, கொழும்பு-10.

டெலிபோன்: 2956. தந்தி: MEDAL.

வடமாகாண விநியோகஸ்தர்கள்:

**ராஜா ஸ்டோர்ஸ்,** 2/B, ஸ்டான்லி ரோடு, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைலாசம்- -கண்டேன் (14)



ஜங்குவிலிருந்து புறப்பட்டுச் சிறிது தூரம் நடந்ததும் ஏற்றமொன்று எதிர்ப்பட்டது. ஏற்றத்தில் அனுபவிக்கும் காட்சியோ அற்புதமானது. மலையின் மேற்றான் செல்லுகிறோமோ, அல்லது வானுலகத்தில் அமைந்த வனம் மிக்கதோர் மைதானமோ என்ற வியப்பை ஆக்கும். கண்ணுக்கெட்டிய தூரம் ஒரே சமவெளி, அதனைச் சுற்றி வளைத்துக் கோட்டைபோல உயர்ந்த மலைகள் காட்சி தருகின்றன. பஞ்சொத்த முகிற் கூட்டங்கள் மலையுச்சிகள் மீது தவழ்ந்து செல்கின்றன. இடையிடையே தோன்றி மறைகின்ற நீலவானம், அவற்றிற்குத் தனியழகை ஊட்டுகின்றது. காணும் மலை முகடுகள் அத்தனையும் இமயத்தின் சிரங்களே. அவற்றை யெலாம் மேகக் கூட்டங்கள் மறைத்து நிற்காவிடின் அங்கிருந்தே கைலையங்கிரியைத் தரிசிக்க இயலுமாம். கைலையைக் காணவிடாது தடுக்கும் முகில் கவிந்த மலைகளை நோக்க, தில்லைப் பெருமானைத் தரிசிக்கவிடாது, இடைநின்று தடுத்த நந்தியின் நினைவே தோன்றியது

## சல்தூ நதி

ஜூலை 9
செவ்வாய்க்கிழமை

சமவெளியைக் கடந்து சல்தூவினை அடைந்தோம். வெளுத்திருந்த மேகத்தில் திடீரென்று கார்முகில் கவிந்தது. பெருந்துளியாகப் பெய்த மழைக்கு அஞ்சி மேல் பிரயாணத்தைநிறுத்தி சல்தூ நதிக்கரையிற் கூடாரம் அமைத்து ஒதுங்கிக் கொண்டோம். அப்போது பகல் 1 மணி. அன்று இரவு அங்கேயே கழிந்தது. மறுநாட் காலை புறப்படுமுன் மான்சிங் தனது குதிரைகள் இரண்டும் மிக களைத்து விட்டதாகக்கூறி திரும்பிச் செல்ல உத்தரவு கேட்டான். அவனுடன் மற்றும் ஒரு குதிரையாளும்சேர்ந்துகொண்டான். வேறுவழியின்றி மூன்று குதிரைகளுக்கும் விடைகொடுத்தோம். சவாரிக்கென வைத்திருந்த குதிரைகளைச் சுமை தூக்க விட்டோம்.



கெம்லுங் என்னுமிடத்தில் உள்ள சில சிலா ஓவியங்கள். முன்னணியில் காணப்படுபவர் தீபெத்தைச் சேர்ந்த வரி அறவிடும் ஒரு உத்தியோகஸ்தராவர்.

## சிவசிலிம் நதி

குதிரைகளின் எண்ணிக்கை பன்னிரண்டிலிருந்து ஒன்பது ஆயிற்று. அதன் பின்னர் புறப்பட்டுச் சென்றபோது மூன்று சிறிய ஏற்ற இறக்கங்கள் குறுக்கிட்டன. சிரமமின்றிச் சுலபமாக அவற்றைக் கடந்து அடுத்த மைதானத்தை அடைந்து விட்டோம். சமபூமியில் இலகுவாக நடந்து சிவசிலிம் நதியையடைந்தோம். தெளிந்த நீரெனினும் உறைபனியினின்றும் ஊறி வருவதால் நிறைந்த குளிராக இருந்தது. சற்று வேகமாகத் தான் ஓடிக்கொண்டிருந்தது. சுமைகளை அக்கரையில் இறக்கிவிட்டு வந்து குதிரைகளே எம்மையும் சுமந்து நீருள் நீந்தி அக்கரை அடைந்தன. நதிக்கரையை அடைந்த நாம் அப்பாற் செல்லத் துணியவில்லை.

## கவரிப் பசுவின் அழைப்புக் குரல்

சிவசிலிம் நதியைப் பிரிந்து சென்றால், நெடுந்தூரம் நீர் அகப்படாமல் வருந்த வேண்டி வருமென வழிகாட்டியும், குதிரை வீரர்களும் கூறவே அங்கேயே கூடாரம் அடித்துக்கொண்டோம். பகல் நேரம் நதியில் நன்கு நீராடி மகிழ்ந்து, உணவுண்டு ஓய்வெடுத்தோம். சிறு பசும் போர்வைகள் விரித்தாற் போல ஆங்காங்கே சிதறிக் கிடந்த புற்றரையில் சில கவரிமாடுகள் நின்றன. வெண்மை கலந்த கறுப்புக் கவரிப்பசு ஒன்று நான் நின்ற திசை நோக்கி, ஒரு முறை கதறிவிட்டு அமைதியாக நின்றது. அதன் அழைப்புக் குரலைப் புரிந்து கொண்டு, அசையாது நின்ற கவரியை ஆர்வமுடன் படம் பிடித்தேன். மாலை நேரம் வந்து கொண்டே இருந்தது. மாடுகளும் எங்கோ சென்று கொண்டிருந்தன. நானும் திரும்பி எமது கூடாரத்தை அடைந்தேன்.

## குதிரைகள் முந்திவிட்டன

ஜூலை 11-ந் தேதி காலை வந்தது. சிவசிலிம் கரையிலிருந்த கூடாரம் சுருட்டிக் கட்டப்பட்டுவிட்டது. புறப்படுவதற்குக் குதிரை வீரர்களைப் பார்த்தோம். வீரர்கள் குதிரைகளைக் காணேம் என்றனர். தேடு படலம் ஆரம்பித்தது. கண்ணுக்கெட்டிய தூரம் தேடி அலைந்தனர். குதிரைகள் எமக்கு முன் நாம் மேலே செல்ல வேண்டிய பாதையில் வெகு தூரம் சென்று விட்டன. குதிரைகள் மக்களுக்கு முன் வழியைக் காட்டி ஓடிச் செல்லும் விஷயம் பற்றிய அனுபவம், குதிரை வீரருக்கு நிறைய உண்டு. ஆதலின் வீரரும் மேல் சென்றுகுதிரைகளைப் பிடித்து வந்தனர். குதிரை தேடுபடலம் முடிந்து, புறப்பட காலை மணி 10க்கு மேலாகி விட்டது. தண்ணீர்கிடைக்காது நெடுந்தூரம், நடக்க வேண்டும். ஆகவே நேரத்தோடு புறப்படவேண்டும் என்று எண்ணியிருந்ததற்கு நேர் மாறாக நடைபெற்றது. எல்லாம் அவன் செயல்.

## ஆண்டவன் கருணை


நீண்ட ஏற்றத்தைக் கடந்து ஒருபெரிய வெளியை அடைந்தோம். சுவாத்தியத் திடீர் மாற்றம். வெய்யோன் தன் ஆதிக்கத்தை உக்கிரமாகச் செலுத்தினன். என்னால் நடக்க முடியவே இல்லை. எல்லாரும் போய் விட்டார்கள். தனித்த நிலையெனினும் ஏகாந்தம் இன்பம் அளிக்கவில்லை. ஒவ்வொரு அடிக்கும் நின்று இளைப்பாற வேண்டியதாயிற்று. உடல் சோர்ந்தது. உயிரும் சோர்ந்தது. "சடையவனே ஆண்ட கருணை உடையவனே! தளர்ந்தேன்; என்னைத் தாங்கிக் கொள்ளே' என்று இறைவனை உள்ளம் வேண்டி நின்றது. வேண்டுவார்க்கு வேண்டுவன ஈயும் பெருமான், திருச் செவிக்கு அடியேன் குரல் கேட்டது. முந்திச் சென்ற சவாரிக் குதிரை வீரன் ஒருவன் பின்னே திரும்பி வந்து கொண்டிருந்தான். அவனுடன் குதிரையும் வந்தது.

## குதிரைச் சவாரி

முன் சென்ற அக் குதிரை குடையின் கருப்பைக் கண்டு வெருண்டு தன் மேல் இருந்த பிரவீணைக் கீழே தள்ளிவிட்டதாம். அவர் மீண்டும் ஏறிக் கொள்ள மறுத்துவிட்டார். அதே சமயம் என்னை நெடு நேரமாகக் காணுததால் குதிரையைப் பின் நோக்கிக் கொண்டு வந்தான் அவ் வீரன். இது முற்றிலும் எதிர் பாராத சம்பவம். குதிரை கொண்டு வந்த வீரனைப் புறக் கண்கள் கண்டன. மணிவாசகரின் துயர் துடைக்கப் பரி கொண்டு வந்த பரம் பொருளின் திருப்பாதங்களை நெஞ்சம் வாழ்த்தியது. வீரனுக்கு ஒரு பெரிய கும்பிடு போட்டுக் குதிரை மீது ஏறினேன். ஏற்றம் சிறிது சிறிதாகப் போய்க்கொண்டே யிருந்தது. முன்னே சென்றுவிட்ட தன் தோழர்களை நினைத்தோ அன்றிக் களைத்தோ குதிரையுங் கனைத்துச் கொண்டே தளர் நடை போட்டது. மனச் சோர்வுற்ற வீரனுக்கு மிட்டாயும் திராட்சையும் கொடுத்து, அன்பு மொழி கூறி ஒருவாறு மேலே சென்ளும். உச்சியை அடைந்ததும் குதிரைக்குப் பாரமாக இருக்க உள்ளம் உடன் படவில்லை. இறங்கிச் சிறிது தூரம் நடந்து சென்றேன்.

## கண்டேன் கைலைநாதன்திருமுடி

ஆஹா! கைலைநாதன் தரிசனத்தை நெடுந்தூரத்திற் கண்டேன். சொல்லொண்ணு இன்பம் இதயத்தை நிறைவிக்க சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தேன். உடலும் உளமும் உவகையாற் பூரித்தன. வழி வருத்தம் முழுதும் ஒளிந்து ஓடிற்று. 'எந்தையைக்கண்ட பின் ஏதமுமுண்டு கொல்? தந்தனை தரிசனம்; தவிர்த்தனை துன்பெலாம்; சிந்தை நிறைந்தது, சிவனே ஜெய ஜெய' என்றுளம் துதித்தது. என்னை மறந்தேன் திருநாவுக்கரசரின் அருள் மொழி அகத்தில் நிறைந்து நாவிற் தவழத் தொடங்கியது.



நதியின் அக்கரையில் பால் போல் வெண்மையாகக் காட்சியளிக்கும் ஒரு மேடை. யானைத் தந்தத்திலான சிம்மாசனமோ என்று எண்ணத் தோன்றியது. வெந்நீர் ஊற்று வருமிடத்தில் ... வெண்மை நிற வெண்கார உப்பு படிந்து இப்படிக் காட்சியளிக்கிறது.

## தெய்வ தரிசனம் யாருக்கு கிடைக்கும்?

கயிலை இறைவன் தரிசனத்தை விட்டுப் பிரிய மனம் ஒருப்படவில்லையே. இத்தனை தூரத்திலேயே இப்படி என்றால் அணிமையில் அப்பன் அருட்திறன் எப்படி இருக்குமோ, என்று ஒரு கணம் எண்ணிப்பார்த்தேன். காலத்தை கடத்தாது கயிலைநாதன் திருத்தோற்றம் முழுவதையும் அணிமையிற் சென்று கண்ணுரக் கண்டு களிக்க அவ்விடத்தை விட்டு விரைந்து புறப்பட்டேன். இறக்கம் முடிந்தது. இறைவனளித்த தரிசனமும் மறைந்தது. உள்ளத்தில் பற்றற்று உயர்நிலைஅடைந்தோரன்றி, கீழ் நிலைக்குச் செல்வோர் தெய்வதரிசனம் பெற இயலாதன்றே!



கெம்லுங் கெம்பா என்னுமிடத்தின் மற்றொரு அழகிய தோற்றம். இங்கு ஒரு வெந்நீர் ஊற்றும் உண்டு.

கீழிறங்கி மற்றவர்களோடு சிற்றுண்டி அருந்திக்கொண்டிருந்தேன். அதற்குள் சற்றும் தாமதிக்க மறுத்துக் குதிரை வீரர் சென்றனர். எங்கே செல்லுவது, எதற்குச் செல்வது, என்ற ஆராய்ச்சியின்றியே தனது குருவைத் தொடர்ந்து செல்லும் உத்தம சிஷ்யனைப் போல எஜமானைத் தொடர்ந்து சவாரிக் குதிரையும் புறப்பட்டு ஏற்றத்திற் பாதி தூரம் சென்று விட்டது.

## தண்ணீர் தேடல்

நான் அவசர அவசரமாக சிற்றுண்டியை வாயிற் செலுத்திவிட்டுக் காப்பிக்குக் கூடக் காத்திராமல் விரைந்து சென்றேன். எத்தகைய எண்ணம் வந்ததோ தெரியவில்லை, குதிரை வீரன் சிறிது தாமதித்துத் தனித்து நின்ருன். எல்லாக் குதிரைகளும் முன்னே சென்று விட்டதால் என்னைச் சிறிது கோபித்துக் கொண்டான். வேறு கூற எதுவுமின்றிக் குதிரை ஏறி மேலே சென்றேன். எதிர்ப்பட்ட ஏற்ற இறக்கங்களைக் கடந்து சென்ளும். தங்குதற்கு தண்ணீர் கிட்டவுள்ள இடத்தைத் தேடினேம். அப்பெருவெளியிலே கானல் கண்ட மான் போல கடுகி வழி நடக்க வேண்டியதாயிற்று வழி முழுதும் ஒரே பாலைவனமாகி 'ஓயஸிஸ்' தேடுபவர்களை ஒத்தோம்.

## ஸட்லெட்ஜ் நதிக்கரை

காலை 10 மணிக்குப் புறப்பட்ட நாங்கள் மாலை ஏழு மணிக்குத்தான் ஸட்லெட்ஜ் நதிக் கரையை அடைந்தோம். ஆற்றின் கரையை அடையுமுன் ஓரிடத்தில் கடுமையான காற்று வீசக் குதிரைகள் ஒன்று சேர்ந்து நின்றன. கீழே இறங்கலாமென எண்ணி ஒரு காலைத் தூக்கி குதிரையின் மறுபுறம் போட்டேன். அடுத்த கணம் நிலத்தில் கிடந்தேன். காயம் எதுவுமில்லை கையில் மட்டும்சிறு முட்கள் இடம் பிடித்துக் கொண்டன. விழுந்தும் எழுந்தும், நடந்தும், தவழ்ந்தும் தானே அவனடி பற்ற வேண்டியுளது. இராத் தங்கள் ஸட்லெட்ஜ் கரையோரம் ஆயிற்று.

## கெம்லுங் மைதான வெந்நீர் ஊற்று

ஜூலை 12

இன்று காலையும் நாங்கு குதிரைகள் எங்கோ சென்று விட்டனவென்று கூறிய வீரர்கள் மீண்டும் தேடுபடலம் ஆரம்பித்தனர். ஸட்லெட்ஜ் கரையிலிருந்து ஒரு மைல் தூரத்தில் கெம்லுங் மைதானம் காட்சி அளித்தது. அங்கே சிறு வெந்நீர் ஊற்று இருப்பதாக வழிகாட்டி மூலம் முன்பே அறிந்திருந்தோம். குதிரை வீரர்கள் வரும்வரை அங்கு சென்று வெந்நீரிற் குளிக்க எண்ணி அதை யடைந்தோம். ஊற்றைத் தேடிப்பார்த்தோம். ஊற்று வற்றியிருந்தது. சிறு ஏமாற்றமே. தண்ணீரில் நன்கு குளித்தோம். அதன் பின்னர் அங்கிருந்த தீபெத்திய அன்பர் ஒருவருடைய குகை வீட்டினுள் நுழைந்து தங்கிக் குதிரைகளைக் காத்திருந்தோம். பகல் ஒரு மணியாகியும் குதிரை வீரர்களைக் காணவில்லை. பசிமட்டும் சிறிதும் தாமதியாமல் வந்து விட்டது. உடன் இருந்த வீரன் நெஹ்ருசிங்கின் கோதுமை மாவிற் பரோட்டா செய்யத் தொடங்கக் குதிரைகளும் வீரரும் வந்தனர்.

## தொங்கு பாலம்

ஸட்லெட்ஜ் நதியைக் கடக்க மரத் தொங்குபாலம் ஒன்று அமைந்திருந்தது. பலங் குறைந்த அப் பாலத்தின்மேலே குதிரைகள் நடந்து செல்ல இயலாது. வீரர்கள் சாமான்களைச் சுமந்து சென்றனர்; குதிரைகள் தண்ணீரில் நீந்திச் சென்றன. நதியின் அக்கரையில் செல்லும் போது பால்போல வெண்மையான மேடை ஒன்று காட்சி அளித்தது. யானைத் தந்தத்தாலான சிம்மாசனமோ என்று உற்று நோக்

(15-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1959 ஏப்ரல் மாதம் 19-ந் தேதி

194 ஏ, தட்டாதெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183


## தீண்டாமை ஒழிப்பு வாரம்

இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் இம்மாதம் 15-ந் தேதி முதல் யாழ்ப்பாணத்தில் தீண்டாமை ஒழிப்பு வாரம் கொண்டாடி வருகின்றனர். இந்துக்களின் புதுவருடத்துக்கு அடுத்த தினம் இவ்வாரத்தை ஆரம்பித்திருப்பது மிகவும் பொருத்தமானதே. யாழ்ப்பாணத்து உயர்சாதி இந்துக்கள் எனப்படுவோர் தீண்டாமை ஒழிப்பைத் தங்கள் புதுவருடப் பிரதிக்ஞையாக ஏற்றுக்கொள்ளலாம் அல்லவா?

தீண்டாமைக் கொள்கை எவ்வளவு தவருனது, பிழையானது, அநீதியானது, பிற்போக்கானது என்பதை நெஞ்சார உணராதவர்கள் இன்று யாரும் இருக்க முடியாது. ஆயினும் பல்லாண்டு காலமாகப் பழகிவிட்ட தோஷத்தால் அதை விட்டொழித்துப் புதிய பாதையில் செல்ல சிலர் தயங்குகின்றனர். இந்தத் தயக்கத்துக்கு சுற்றுடல் தரும் பயமும், வரட்டுக் கௌரவமும், துணிவின்மையும் உடந்தையாயிருக்கின்றன.

இராமாந்தரங்களில் உள்ள சமூகக் கட்டுப்பாடுகளைத் தனி மனிதனுக ஒருவன் எதிர்த்து நின்று போராடுவது மிகவும் சிரமம். கூட்டு முயற்சியை மேற்கொண்டால் பல பிற்போக்கு சக்திகளை எதிர்த்துப் புதுமையைப் புகுத்துவது சாத்தியப்படும். தீண்டாமை போன்ற ஒரு தீய வழக்கத்தை ஒழிப்பதற்கு ஒருவர் இருவர் சேர்ந்து பாடுபடுவதைவிட முற்போக்கு எண்ணம் கொண்ட இளம் வாலிபர்கள் ஒன்று சேர்ந்து கிராமம் கிராமமாக தீண்டாமை ஒழிப்பு சங்கங்களை அமைத்து செயலாற்றினுல் விரைவில் விமோசனம் ஏற்பட வழியுண்டு.

தீண்டாமை ஒழிப்பு வாரத்தைக் கோலாகலமாகக் கொண்டாடிவரும் தமிழரசுக் கட்சியினர் ஒருவாரம் சலசலப்பாக மேடைப் பிரசங்கங்கள் மட்டும் செய்து ஒய்ந்து விடாமல், நிலையான தீண்டாமை ஒழிப்பு சபைகளையும், அமைப்புகளையும் ஆங்காங்கே நிறுவி, அவை தொடர்ந்து செயலாற்றும் வண்ணம் திட்டம் வகுத்துக் கொடுப்பதற்கும் இந்த தீண்டாமை ஒழிப்பு வாரத்தைப் பயன் படுத்துவார்களேயானுல் தக்க பயன் விளையும் என்று கருதுகிறோம்.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் இந்த நாட்டில் தமது இனமும் மொழியும் பூண்டழிந்து போகாமல் பாதுகாப்பதற்காக ஜீவமரணப் போராட்டம் நடத்தி வருகிருர்கள். இந்த நேரத்தில் தமிழ் பேசும் மக்களிடையே உயர்வு தாழ்வற்ற ஐக்கிய பாவம் நிலவ வேண்டியது அத்தியாவசியமாகும்.

மத வெறியும் இன வெறியும் பிடித்துச் சீறிவரும் சிங்கள மத யானையைத் தடுத்து நிறுத்திக் கட்டுவதற்கு தமிழினம் உறுதி வாய்ந்த ஒரு இரும்புச் சங்கிலியைப்போல் கணுவோடு கணு இணைந்து ஒருமித்து விளங்க வேண்டும். ஒவ்வொரு கணுவும் சமபலம் வாய்ந்ததாக இருந்தால்தான் சங்கிலி முழுமையும் பலம் உடையதாக இருக்கும். ஏதாவது ஒரு கணு பலவீனமடைந்ததாக இருந்தால், ஏனைய கணுக்கள் பலமுற்றிருந்தும் பயனில்லை; சங்கிலி அறுந்து விடும். இந்த உண்மையைத் தமிழ் மக்கள் நன்கு உணர வேண்டும்.

தமிழ் பேசும் சமூகத்தில் ஒரு சாரார் அடக்கப்பட்டவர்களாக, ஒடுக்கப்பட்டவர்களாக, தாழ்த்தப்பட்டவர்களாக பலவீனமுற்ற கணுவைப்போல் விளங்கும் வரை, தமிழினம் என்ற தொடர் சங்கிலி உறுதியும் பலமும் பெற்று மிளிர முடியாது.

எதிர்த்துவரும் பகையைத் தடுத்து நிறுத்தும் சக்தி வாய்ந்ததாக அது விளங்க முடியாது. எனவே நமது சகோதரர்களான ஒரு சாராரைத் தாழ்த்தித் தீண்டாதார் என்று ஒதுக்கி வைத்திருப்பது அவர்களுக்கு மட்டும் கஷ்ட நஷ்டம் தரும் ஒரு பிரச்னை அல்ல. தீண்டாமை தமிழ் பேசு மக்கள் அனைவருக்கும், தமிழ் இனத்திற்கும், தமிழகத்துக்கும், தமிழ் சமூகத்துக்கும், தமிழ் மொழிக்கும் எல்லாருக்கும், எல்லாவற்றிற்கும் தீமை விளைக்கும் ஒரு கொடிய சாபத்தீடு ஆகும்.

நம்மிடையே பிறந்து, நம்மிடையே வாழ்ந்து, நமது மொழி பேசி, நமது சமயத்தையே அனுஷ்டித்து, நமது கலை கலாச்சாரங்களில் தோய்ந்து நம்மோடு ஒன்றி வாழும் நமது சகோதரர்களான மக்களை நாம் தீண்டாதார் என்று அடக்கி ஒடுக்கி வைத்துக்கொண்டிருக்கும்வரை, நம்மை அடக்கி ஆட்சி புரிய முற்படும் வேற்றினத்தாரிடம் நாம் எப்படித் தலை நிமிர்ந்து உரிமை கோர முடியும்?

எனவேதான் தமிழரசுத் தந்தை திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம்:

> "பெரும்பான்மைச் சமூகம் தங்களை அடக்கி ஒடுக்கி வருவதாக தமிழ் சமூகத்தினர் குரல் எழுப்புகிருர்கள். தமிழ் சமூகத்துள் ஒரு பிரிவினர் அடக்கி ஒடுக்கப்பட்டு வரும்வரையில், தமிழ் மக்கள் பெரும்பான்மையினருடைய அடக்கு முறையை தாம் முறியடித்து வெற்றிகாண்போம் என்று எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் நம்முள் ஒரு சாராரை நாமே இப்பொழுதும் அடக்கி மடக்கி வைத்திருக்கிருேம். அந்த குற்றச்சாட்டுக்கு நாம் ஆளாய் இருக்கும்வரை எப்படி நமக்கு அரசியல் போராட்டத்தில் வெற்றி கிடைக்கும்?"

என்று கேட்கிருர். அவருடைய இந்த தர்க்க ரீதியான வினு தமிழ் பேசும் மக்களின் சிந்தனையைத் தட்டி எழுப்பப் பயன்படும் என்று நம்புகிருேம்.

தமிழ் பேசும் மக்கள் இன்று ஆளாகியிருக்கும் இன்னல்களிலும் துன்பங்களிலுமிருந்து விடுபட்டுத் தம்மைத் தாமே ஆளும் சுத்த சுதந்திர மக்களாக வாழவேண்டுமானுல் முதலில் அவர்கள் தாம் அடிமைப்படுத்தி வைத்திருப்பவர்களுக்கு விடுதலையளித்து, தமிழ் மக்கள் அனைவரும் சரிநிகர் சமானம் என்ற உயர்ந்த நெறியைக் கடைப்பிடிக்க வேண்டும். '[illegible] குலம், ஒருவனே தேவன்'' என்ற உன்னத இல[illegible] முன்னேறுவதன் மூலமே தமிழன் விமோசனமடைய வழி பிறக்கும் என்ற போதனையைத் தீண்டாமை ஒழிப்பு வாரம் வட பகுதித் தமிழ் மக்களுக்குப் [illegible]

# 'பண்டாரநாயக்க மாவத்தை'க்கு பகுதி முஸ்லிம்கள் கடும் எதிர்ப்பு

## ஆட்சேபனைக் கூட்டத்தில் பீபி பாத்தும்மா வீதி என்று பெயர் வைக்க வற்புறுத்து

"தேர்தல் காலத்தில் வாக்குப் பிச்சைக் கேட்டு வீடு வீடாக வந்து காலைக் கையைப் பிடிக்கும் பிரதிநிதிகள் பதவிக்கு வந்ததும் மக்கள் குறைகளைக் கேட்கவே மறுக்கிருர்கள். தட்டாதெருவுக்கு பண்டாரநாயக்க மாவத்தை என்று பகுதி மக்களைக் கலந்து ஆலோசிக்காமல் திருட்டுத் தனமாக இரவோடு இரவாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டதை ஆட்சேபித்து கொழும்பு மத்திய தொகுதிப் பாராளுமன்றப் பிரதிநிதிகள் மூவருக்கும் 90 சொற்கள் அடங்கிய தந்திகள் உடனுக்குடன் அனுப்பினேம். ஆனுல் ஒருவராவது அவற்றிற்குப் பதில்கூடத் தரவில்லை"



தட்டா தெரு பெயர்மாற்றத்தை ஆட்சேபிக்கு முகமாகக் கடந்த ஞாயிற்றுக்கிழமை தட்டா தெரு மக்களால் கூட்டப்பட்ட பொதுக் கூட்டத்தில், கூட்டத்து முக்கிய அமைப்பாளர் ஜனுப். கே. எம். ஏ. காதர் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினுர்.

புரொக்டரும் நொத்தாரிஸுமான ஜனுப் ஹில்மா பஹவுதீன் கூட்டத்துக்குத் தலைமை தாங்கினுர்.

ஜனுப் காதர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

### ஜனவிரோத அரசாங்கம்

"தன்னை ஒரு ஜனநாயக அரசாங்கம் என்று பறைசாற்றும் எம். ஈ. பி. அரசாங்கம் உண்மையிலேயே ஒரு ஜனநாயக அரசாங்கமாக இருக்குமானுல் இப்படிச் சர்வாதிகார ரீதியில், முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் இந்தத் தெருவுக்கு இப்படித் திருட்டுத் தனமாகப் பெயர் மாற்றியிருக்காது. அரசாங்கம் ஜனநாயக விரோதி, ஜன விரோதி என்பதையே இந்த நடவடிக்கை தெளிவு படுத்துவதாக இருக்கிறது.

### யார் பொறுப்பு?

"கொழும்புத்தெருக்களின் பெயர் மாற்றத்தில் கொழும்பு மாநகர சபைக்கு முக்கிய பங்குண்டு. ஏற்கனவே கலைக்கப்பட்ட மாநகர சபையின் ஏக நிர்வாகியாக இருக்கும் விசேஷ கமிஷனர் திரு. ஜயசிங்காவை வீதிப் பெயர் மாற்றம் பற்றிக் கேட்டால் தமக்கு இதுபற்றி ஒன்றுமே தெரியாது என்று கையை விரிக்கிருர். ஆயின் இந்தத் திருட்டைச் செய்யப் பொறுப்பாயிருந்தது யார்?

### தட்டா தெரு தான் கிடைத்ததா?

"பிரதமரின் பெயரைச் சூட்ட முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் தட்டா தெரு தான் கிடைத்ததா? தற்போது அவர் வசிக்கும் ரோஸ்மெட் பிளேஸுக்கு வைக்கலாமே அந்தப் பெயரை. அல்லாவிட்டால் சிங்களவர்கள் அதிகப்படியாக வசிக்கும் எந்த ஒரு தெருவுக்காவது வைத்திருக்கலாமே. தட்டா தெருவை ஏன் தெரிவு செய்ய வேண்டும்?" என்று ஜனுப் காதர் கேட்டார்.

### தப்புக் கணக்கு

தட்டா தெரு மக்களைப் பற்றி அரசாங்கம் தவருக எண்ணி இருக்கலாம். அவர்கள் ஏமாந்த சோணகிரிகள் என்று அரசாங்கம் தப்புக் கணக்குப் போட்டிருக்கலாம். எதைச் செய்தாலும் அவர்கள்" ஏன் என்று கேட்க மாட்டார்கள், ஆட்சேபிக்க மாட்டார்கள் என்று அரசாங்கம் நம்பியிருக்கலாம் என்று அவர் சொன்னுர்.

### மக்கள் எதிர்ப்பு

இரவோடு இரவாக யாருக்கும் தெரியாமல் தட்டா தெரு பெயர்ப் பலகையை அகற்றி விட்டு பண்டாரநாயக்க மாவத்தை என்று கூறும் பெயர்ப் பலகையை பதிலுக்கு நாட்டி அதற்கு பலத்த காவல் போட்டிருந்த அரசாங்க நடவடிக்கையை ஜனுப் காதர் மேலும் வன்மையாகக் கண்டித்ததோடு தட்டா தெரு மக்கள் அரசாங்கத்தின் பிரஸ்தாப நடவடிக்கையை முழு மூச்சோடு எதிர்க்கிருர்கள் என்பதையும் எடுத்துக் கூறினுர்.

### தீர்மானம்

ஜனுப்கள் எஸ். எச். முகமது, எம். ஏ. ரகுமான், பி. கே. எம். எம். ஏ. காதர் ஆகியோரும் பெயர்மாற்றத்தை எதிர்த்தும் அரசாங்கத்தின் நடவடிக்கையைப் பலமாகக் கண்டித்தும் பேசினுர்கள்.

பண்டாரநாயக்கமாவத்தை என்ற பெயர்ப் பலகையை அகற்றி விட்டு 'பீபி பாத்துமா வீதி' என்று பெயர் வைக்குமாறு குறிப்பாகக் கொழும்பு மாநகரசபை விசேஷ கமிஷனரைக் கோரும் தீர்மானம் ஒன்று இறுதியில் நிறைவேற்றப்பட்டது.

### தீபெத் விவகாரம்

தீபெத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியும், அதனுல் இலங்கையில் உண்டான எதிரொலியும், இந்த எதிரொலியின் காரணமாக இலங்கை அரசியலில் ஏற்படக்கூடிய விளைவுகளும் பற்றி விளக்கமான கட்டுரை அடுத்த வாரம் இடம் பெறும்.

—ஆசிரியர்.

# அவசரகால நிலைமை '58

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

சரியோ, பிழையோ—நூற்றுக்கு நூறு வீதம் ஏற்றுக்கொள்ளக் கூடியதோ, இல்லையோ, நடந்தவற்றை வெறும் எலும்புக் கூடாகவாவது தமது நூல் மூலம் தமக்குத் தெரிந்த வகையில் சொல்லி வைத்தாரே, அது பெரிய காரியம். வேறு எவரும் செய்யாத, செய்யத் துணியாத முயற்சியை வித்தாச்சி மேற்கொண்டார். நடந்தவற்றிற்கு இன்று நம்மிடம், முழுமையாக இல்லாவிட்டாலும் ஏதோ குறிப்பு என்று ஒன்று இருக்கத் துணை செய்தவர் அவர். அதற்காக அவரை எவ்வளவு பாராட்டினுலும் தகும்.

### அற்புதமான சொல்லாட்சி

பாராட்டு இதற்கு மட்டுமல்ல. வித்தாச்சியின் எழுத்து நடை விறுவிறுப்பான பத்திரிகை நடை. புத்தகத்தைக் கையில் எடுத்துவிட்டால் மொத்தமுள்ள 124 பக்கங்களையும் படித்து முடித்துவிட்டுத்தான் கீழே வைக்க மனம் இசையும். சொல்லாட்சி அற்புதமானது. சில கட்டங்களில் வித்தாச்சி ஆட்சியாளருக்கு குறி வைத்துள்ள கண்டனச் சொற்கள் சம்பந்தப்பட்டவர்களின் நெஞ்சைக் குத்திக் கிழித்துச் செல்லும் அளவுக்குச் சக்தி வாய்ந்தனவாக விளங்குகின்றன.

விறுவிறுப்பான ஆங்கிலத்துக்காகவும் இனக் கலவரம் சம்பந்தமான மேலோட்டக் குறிப்புகளுக்காகவும் ஆங்கிலம் தெரிந்த அத்தனை தமிழர்களுமே வாங்கிப் படிக்கத்தக்க நூல் அவசர கால நிலைமை '58. லேக் ஹவுஸ் புத்தகசாலை நிலையம், பார்சன்ஸ் ரோடு, கொழும்பு என்ற விலாசத்தில் கிடைக்கும். நூலின் விலை ரூபா 10/50.

(முற்றும்)

### இந்து சமயம்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஞர் தெய்வப் புலமைத் திருவள்ளுவர். 'நுமர்களைப் பழிப்பராகில் அவர்கள் தாம் புலையர் போலும் அரங்க மா நகருளானே' என்கிறது ஆழ்வார் திருவாய் மொழி. 'கங்கை வார் சடைக்கரந்தார்க் கன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே' என்று திருத்தாண்டகம் இசைத்தார் நாவுக்கரசர். அணிமையில் வந்த பாரதி கூட 'ஜாதிகள் இல்லையடி பாப்பா' என்ருன். சங்க காலம், தேவார காலம் முதல் சமீப காலம் வரை வந்த அத்தனை அநுபூதிமான்களும் பெரியார்களும் ஒதுக்கித் தள்ளிய தீண்டாமையைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, கைவிட்டால் இந்து மதம் மாண்டுவிடும், சைவ சமயம் சரிந்துவிடும், வேதமும் ஆகமமும் விரண்டோடிவிடும் என்று சொல்வது எத்தகைய பேதமை!

### ஐக்கிய சமூகம் உருவாக்குவோம்

"பிறப்பினுல் உயர்வு தாழ்வு கற்பிப்பது சமயத்துக்கும், பகுத்தறிவுக்கும் முற்றும் முரணுனது. இறைவன் எல்லா உயிர்க்கும் சமமானவன். இதை மறுப்பது சர்வ வியாபகரான ஈசனுக்கே மாசு கற்பிப்பதாகும். எனவே இந்த தீண்டாமை ஒழிப்பு வராத்தில் ஆரம்பிக்கும் நற்பணியை நாமனைவரும் நமது அன்ருட வாழ்க்கையில் தொடர்ந்து செய்து எத்துறையிலும் ஜாதி வித்தியாசம் பாராட்டாத ஒரு ஐக்கிய சமூகத்தை உருவாக்குவோமாக"-இவ்வாறு திரு. வன்னியசிங்கம் கூறி முடித்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அவசரகால நிலைமை '58

## நூலாசிரியர் ஒரு வகையில் பாராட்டுக்கு உரியவரே

### நடந்தது பற்றி எப்படியோ குறிப்பு என்று ஒன்றைத் தந்த நன்றியை மறக்க முடியாது

அவசரகால நிலைமை '58 நூலில் முக்கியமாக மூன்று விஷயங்கள் உள்ளதாக நூலாசிரியர் திரு. தார்ஸி வித்தாச்சி கூறியிருப்பதை முதல் கட்டுரையில் நினைவுபடுத்தினோம்.

1. இலங்கையில் நடந்த சம்பவங்கள்.

2. மனிதனுக்கு மனிதன் இழைத்த கொடுமைகள், அட்டூழியங்கள்.

3. சமூகப் பொருளாதாரக் கோட்பாடுகள் படிப்படியாகப் பாழாகிக் கொண்டு வந்த,வரும் விவரம்.

**சம்பவங்கள்**

மேற்படி மூன்றிலும் முதலாவதாக உள்ள இலங்கையில் நடந்த சம்பவங்கள் பற்றிக் குறிப்பிடுகையில், அவற்றை வித்தாச்சி தமது நூலில் எடுத்துச் சொன்னதற்கும் பெரும்பாலான தமிழரின் கண்ணோட்டத்துக்கும் அதிக வேறுபாடுகள் இல்லை என்று சுட்டிக் காட்டினோம்.

ஆயினும், இலங்கையின் பூர்வக் குடிப்பிரச்னை, துட்டகைமுனு-எல்லாளன் யுத்தம், பிரஜா உரிமைச் சட்டம் என்பன பற்றி ஆசிரியர் தந்த விவரங்கள், காரண காரியங்கள் மட்டும் உண்மைக்குப் புறம்பாக நிற்கின்றன என்றும் அவற்றின் மூலம் ஆக்கியோனின் இனச் சார்பு வெளிப்படுத்தப் படுகிறது என்றும் தெரிவித்தோம்.

**மழுப்பல்**

அடுத்தபடியாக, மனிதனுக்கு மனிதன் இழைத்த கொடுமைகள், அட்டூழியங்கள் பற்றி நூலாசிரியர் தந்த விவரங்கள் மிகக் குறைவு என்றும் அவை கூட உள்ளது உள்ளபடி. உரிய முறையில் தரப்படவில்லை என்றும் குற்றம் சாட்டினோம். அங்கொன்றும் இங்கொன்றுமாக நுனிப்புல் மேய்ந்த மாதிரி சில சம்பவங்களை மட்டும் ஏதோ, தவிர்க்க முடியாத காரணத்தால் சொல்லி மழுப்பி விட்டு முக்கியமானவற்றை மூடி மறைத்துவிட்டதை எடுத்துக் கூறினோம்.

**ஏன் இருட்டடிப்பு?**

இனக்கலவரத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்களே. பெருமளவில் சொத்து, சுகம் இழந்தவர்கள், உடல் ஊறு பெற்றவர்கள் தமிழர்கள். உயிரோடு கொளுத்தப்பட்டவர்கள், அங்கம் அங்கமாகப் பிய்த்தெறிந்து சாகடிக்கப்பட்டவர்கள் தமிழர்கள். மண் உள்ளளவும் மாருத அவமா

~~~~~ சிங்கம் ~~~~~

னத்துக்கு பொறுக்க முடியாத பேய்ச் செயலுக்கு ஆளானவர்கள் தமிழ்ப் பெண்கள். நடுத் தெருவில் ஒருத்தியை நிறுத்தி நீசர்கள் நூற்றுக் கணக்கில் சேர்ந்து கற்பழிக்கும் கண்ணராவி நடந்தது கற்பைக் கண்மணியெனக் காக்கும் தமிழ்க் குலப் பெண்களுக்கே.

இவற்றையெல்லாம் வித்தாச்சி விழுங்கி விட்டார் தமது சமூகத்தைத் தாழ்த்தக் கூடாது-தம்மவரைப் பண்பற்ற பதர்கள் என்று தாமே உலகுக்கு எடுத்துக் காட்டக் கூடாது என்பதற்காக.

**மறக்கவே முடியாத சம்பவங்கள்**

இதனால் வித்தாச்சி விட்ட சம்பவங்களை எடுத்துக்கூறும் பொறுப்பு நமக்கு ஏற்பட்டது. கொடுமையின் சிகரமாக அமைந்த சம்பவங்கள் சிலவற்றைத் தேவையை உத்தேசித்து நேயர்களுக்குத் தந்தோம். குறிப்பாகக் கிரிபத் கொடை சம்பவத்தையும் (1-3-59 சுதந்திரனில் வெளியானது), மகா ஓயா சம்பவங்களையும் (15-3-59, 22-3-59 சுதந்திரனில் வெளியானவை) எப்படித்தான் முயற்சித்தாலும் எந்த உண்மைத் தமிழனும் மறக்க முடியுமா?

**'அப்பே ஆண்டுவ' மனப்பான்மை**

இனி, மூன்ருவதாக, சமூக, பொருளாதாரக் கோட்பாடுகள் படிப்படியாகப் பாழாகிக் கொண்டு வந்த, வரும் விவரம் பற்றி ஆசிரியர் சொல்வதைப் பார்க்கலாம்.

எம். ஈ. பி. 1956-ல் ஆட்சிக்கு வந்ததிலிருந்து அதன் சட்ட திட்டங்களும் நிர்வாக நடவடிக்கைகளும் சமூகக் கட்டுக்கோப்புக்கும் சௌஜன்ய உறவுக்கும் அமைதிக்கும் உலை வைத்துவிட்டதாகக் கூறுகிறார்.

மக்கள் மத்தியில் அவர்களிலும் குறிப்பாகச் சிங்கள மக்களிடையில் "அப்பே ஆண்டுவ" மனப்பான்மை ஏற்பட்டுவிட்டதால் சட்டத்தை மதிக்கவும், சட்டத்தினதும் சமூகத்தினதும் பாதுகாவலரான பொலீசாருக்குப் பணியவும் அவர்கள் மறுக்கத் தொடங்கிவிட்டார்கள்.

**அரசாங்கமே காரணம்**

மக்கள் இவ்விதம் தாழ்ந்து போனதற்கு காரணமே எம். ஈ. பி. அரசாங்கம் தான் என்று ஒளிவு மறைவின்றி எடுத்துரைக்கிருர் வித்தாச்சி. மக்கள் அரசாங்கம் என்ற போர்வைக்குள் இருக்க விரும்பிய அரசாங்கம் மக்கள் நினைத்தபடியெல்லாம் நடக்க வளைந்து கொடுத்ததும், எடுத்ததற்கெல்லாம் ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள் மக்கள் பக்கம் தாம் சார்ந்து நின்று கொண்டு பொலீஸாரைப் பகிரங்கமாகக் கண்டித்து வந்ததும், மக்கள் தம்மைப் பற்றியும் தமது உரிமைகள் பற்றியும் தவருன எண்ணம் கொள்ள இடமளித்துவிட்டன என்கிருர்.

**பிரதமரின் பேதமை**

இனக்கலவரம் ஏற்பட்டு நாட்டில் இரத்த வெள்ளம் ஆருக ஓட இந்த நிலைமை வாய்க்காலாக அமைந்தது என்ற தோரணையில் வித்தாச்சி கூறுகிருர். எந்த ஒரு விஷயத்தையும் உரிய காலத்தில் அணுகி வேண்டிய பரிகாரம் தேடுவதற்குப் பதிலாக, அதை ஆறப்போட்டு, பல்கிப் பெருகிப் பிரச்னைக்குரியதாகிப் பயங்கர ரூபம் எடுக்கும் வரைவிட்டு விட்டு, கடைசிநேரத்தில் கண்டு கதிகலங்கிப் போய் ஏதோ ஒரு வகையில் சமாளிக்க முயலும் பிரதமரின் பேதமையால் நாடு படிப்படியாகச் சீர்கெட்டு இறுதியில் இனக்கலவரத்தில் வந்து முடிந்தது என்று கூறுகிருர்.

**இரண்டு கருத்துக்கள்**

இவற்றை யாரும் மறுக்க முடியாது. உண்மை அது தான் என்பதில் கருத்து வேற்றுமை இருக்க இடமில்லை. அதேபோல நாட்டின் பொருளாதாரக் கட்டுக் கோப்புக் குலைந்துபோய் திண்டாட்ட நிலை தலையெடுத்த விவரத்தை கூறுவதைப் பார்த்தால் அதிலும் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க நியாயமில்லை ஆனல் ஒன்று, யு. என். பி தொடர்ந்து ஆட்சியில் இருந்திருந்தால் இப்படி ஆகியிருக்காது என்று நம்பும்படியான வகையில் விளக்கம தந்திருக்கிருர். நூலில் முதலிருந்து கடைசிவரை இழையோடி நிற்கும் கருத்துக்கள் இரண்டிலும் இது ஒன்ருக இருக்கும்போது குறிப்பிட்ட இந்தக் கட்டத்திலும் அதன் சாயல் தெரிவது ஒன்றும் வியப்பில்லையே.

சிங்களக் காடையர்கள் இனக்கலவரத்தைச் சாக்காக வைத்துத் தமது மிருக இச்சைக்கும், இரத்த வெறிக்கும், பேய்க்குணத்துக்கும் தக்க பலி எடுத்துத் திருப்தி அடைந்தார்கள் என்ற உண்மையைப் பூசி மெழுகி அவர்களும் மனிதர்தான், பண்புள்ளவர்கள் தான் என்பதை உலகுக்குக் காட்ட முனைந்தது நூலில் இழையோடியுள்ள அடுத்தகருத்து. இதை ஏற்கனவே சொல்லி விட்டோம்.


**பொறுக்கு மணிகள்**

அறுவடை செய்து கொண்டால் கிடைத்தது முழுவதும் நெல்மணியாக இருந்து விடாது. பதரும் கலந்து தான் இருக்கும். வித்தாச்சியின் நூலிலும் அப்படியே—முழுவதும் மணியுமல்ல. எல்லாமே பதருமல்ல. எது பதர் என்பதும் ஏன் அது தள்ளப்படவேண்டும் என்பதும் சொல்லப்பட்டாகி விட்டது. ஒரு சில மணிகளைப் பொறுக்கி முதல் கட்டுரையிலேயே தந்தோம்.

1. தமிழின் பெருமையையும் அதைப் பேசும் மக்களின் தொகையையும், தமிழர்கள் சிங்களவர்களைப் போல் அல்லாமல் இலங்கையில் மட்டுமல்லாது உலகின் வேறுபாகங்களிலும் வாழ்கிருர்கள் என்ற உண்மையையும் உலகுக்கு எடுத்துக்காட்டியிருக்கிருர்.

2.. மொத்தத்தில் தமிழர்கள் பண்பு நிறைந்தவர்கள், வீண் பதஷ்டம் அற்றவர்கள், திறமைசாலிகள் என்பதையும் தமிழர் தலைவரான திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் எல்லோராலும் மதிக்கப்படும் அரசியல்வாதி என்பதையும் தெளிவு படுத்தியுள்ளார்.

(8-ம் பக்கம் பார்க்க)



வளரும் எழுத்தாளர் சங்க ஆண்டு விழாவில் திருவாளர்கள்: கி. லக்ஷ்மணன், கே. பி. ஹரன், வண. பிதா சவரிமுத்து.

# ஆறு சிறுகதைகள் எழுதியவர் ரூபா 48 ஆயிரம் பெற்ருர்

## சோவியத் ருஷ்யாவில் எழுத்தாளர்களின் மேம்பாடு

### வளரும் எழுத்தாளர் சங்க ஆண்டு விழாவில் திரு. கி. லக்ஷ்மணன்

"இலங்கையில் தமிழ் எழுத்தாளர்களின் நிலை பரிதாபத்துக் குரியது. ஆனல் சோவியத் ருஷ்யாவிலோ மிக உயர்ந்த ஸ்தானத்தில் வைத்து மதிக்கப்படுபவர்களாகவும் பொருளாதார வளம் மிக்கவர்களாகவும் உள்ளவர்கள் எழுத்தாளர்களே" என்று அணிமையில் அங்கு சென்று திரும்பிய எழுத்தாளர் குழுவில் ஒருவரும் ஸ்ரேபஸ் கல்லூரித் தமிழ் விரிவுரையாளருமான திரு. கி. லக்ஷ்மணன் கூறினர்.

கொழும்பு விவேகானந்த வித்தியாலய மண்டபத்தில் கடந்த ஞாயிறன்று வளரும் எழுத்தாளர் சங்க ஆண்டு விழாவில் பேசுகையிலேயே திரு. லக்ஷ்மணன் மேற் கண்டவாறு சொன்னர்.

**ஹரன் பேச்சு**

விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய திரு கே. பி. ஹரன் எழுத்தாளர்களுக்கு உள்ளத்திலே தூய்மையும் தெளிவும் வேண்டும் என்றும் அப்போதுதான் சமுதாயத்துக்குப் பயன்படத்தக்க நல்ல படைப்புக்களை அவர்களால் ஆக்க முடியும் என்றும் கூறினர். மகாத்மா காந்தியும், பாரதியும் எழுதியவை அவர்கள் மறைவுக்குப் பின் இன்றும் உயிர் உள்ளனவாக இருப்பதற்குக் காரணம் அவை உள்ளத் தூய்மையோடும் தெளிவோடும் எழுதப் பட்டதே என்ருர். எழுத்தாளர்கள் தமது கடமைகளைச் சரிவரச் செய்தால் உரிமைகள் தாமாகக்கிடைக்கப் பெறலாம் என்றும் அவர் சொன்னர்.

**நல்ல வருமானம்**

திரு. லக்ஷ்மணன் கூட்டத்தில் தொடர்ந்து பேசுகையில், ருஷ்ய எழுத்தாளர்களின் மேம்பாடான பண நிலை பற்றி விளக்கினர்.

"ருஷ்யாவில் 6 சிறுகதைகள் எழுதியவருக்கு ரூபா 12 ஆயிரம் கிடைத்தது. அவற்றை ஒரு தொகுப்பு நூலாக வெளியிட்ட பின்னர் மொத்தம் 48 ஆயிரம் ரூபாய் அவருக்குக் கிடைத்தது. ஒரு நூலுக்கே இவ்வளவு வருமானம் என்ருல....!" இப்படிக் கூறினர்.

**புகார்**

திரு. லக்ஷ்மணன் மேலும் பேசுகையில் இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைகளில் விஷயங்கள் பெரும்பாலும் சுருக்கமாகவும் இறுக்கமாகவும் வெளியிடப்படுவதில்லை என்று புகார் கூறினர்.

**கம்பராமாயணம்**

கம்பராமாயணம் பற்றி அவர் பேசுகையில் நால்வர் எழுவர் ஆகியதையும் கும்பகர்ணன் தமது தமையனை இராவணனை "ஆரிய" என்று அழைந்ததையும் எடுத்துக் காட்டி அரிய விளக்கங்கள் தந்தார்.

திரு எஸ். டீ. சிவநாயகம் பேசுகையில் திரு லக்ஷ்மணன் கூறிய குறை தமிழ்ப் பத்திரிகைகளில் மட்டுமல்ல ஆங்கிலப் பத்திரிகைகளிலும் உண்டு என்று சொன்னர்.

(13-ம் பக்கம் பார்க்க)


சி. சி. சி.

தெங்குப் பசளைக் கலவைகள்




சிங்கள எமது பசளைக் கலவைகளில் நம்பிக்கை வைக்கலாம் ஏனெனில் அவை நல்ல, பெருவாரி விளைச்சலைப் பெறுவதற்கு உங்களுக்கு உதவியளிக்கின்றன.

இலவச விளக்கப் பிரசுரத்திற்கு தயவுசெய்து எழுதுக:-

கொழும்பு கொம்மேர்ஷியல் கம்பெனி லிமிட்டெட்

(பெரிய பிரித்தானியாவில் இணைக்கப் பெற்றது. அங்கத்தவர் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது.)

தபாற் பெட்டி 33, கொழும்பு. CCC629


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
~~~~~

# காணிக்கை

சிறுகதை — எழுதியவர்: ஏ. பி. வி. கோமஸ்

மான்விழி! அவள் கண்களின் எழிலை ஆழ்ந்து இரசித்தவர் தான் அப் பெயரை அவளுக்குச் சூட்டியிருக்க வேண்டும். சுமார் முப்பது வயதிருக்கும். ஆனாலும் உடற்கட்டிலும், முக வெட்டிலும் கண்களின் காந்த சக்தியிலும் எந்தவொரு யுவதியையும் வென்று விடுவாள். இவைகளுக்கெல்லாம் காரணம், ஒருவேளை அவள் மணம் செய்துகொள்ளாததுதானோ என்னவோ?

தற்சமயம் அவள், "சுதந்திர நாடு நாடக சபா"வின் பதினைந்தாவது ஆண்டு விழாவில் நடைபெறவிருந்த "போராட்டம்" என்னும் நாடகத்தில் நடிக்க ஒப்பந்தமாகியிருந்தாள். "போராட்டம்" நாடகத்தை எழுதியவர் பிரபல நாடகாசிரியர் கரிகாலன். இந்நாடகம் எழுதப்பட்டு சுமார் பதினைந்து ஆண்டுகள் ஆகின்றன. ஆனால், ஒரு முறையாவது அரங்கேற்றப்படவில்லை. காரணம், கதாநாயகனாக நடிக்கவிருந்த நாடகாசிரியர் கரிகாலன், நாட்டில் நடந்த அறப்போருக்குப் போக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டதுதான். நாட்கள் சில சென்றன. அறப்போரில் கலந்துகொண்டவரும் மாண்டுவிட்டதாகச் சொல்லிக் கொண்டார்கள்.

ஃ ஃ ஃ

பதினைந்து வருடங்களுக்குப் பிறகு. மேற்படி சங்கத்தின் தயாரிப்பாளர் கதிரவன் இந் நாடகத்தை அரங்கேற்ற முன் வந்தார். அதில் கதாநாயகனாக நடிக்க இளஞ்செழியன் என்பார் ஒப்புக்கொண்டிருந்தார். அவரிடம் அழகிருந்தாலும் நடிப்புத் திறமையிருந்தது என்று சொல்ல முடியாது. நடிப்பழகி மான்விழிக்கு முன் இளஞ்செழியன் நடிப்பு எம்மாத்திரம்? ஆனால் இளஞ்செழியன் சாயல், கதாசிரியர் கரிகாலனின் சாயலைக் கொஞ்சம் ஒத்திருந்தது. ஆனால் கதாசிரியரின் அரும்பு மீசை இவருக்கு இல்லை. அந்த மீசை மாத்திரம் அமைந்திருந்தால்......?

நாடகப் பழக்கம் பல நாட்கள் நடந்தது. ஆகஸ்டு மாதம் 20-ம் தேதி நாடகம் நடைபெறவிருந்தது. பத்தொன்பதாம் தேதி, வெள்ளோட்டம், உடையலங்காரத்துடன் நடைபெற்றது. அரும்பு மீசை, ஒட்டுத் தாடியுடன் காட்சியளித்தார் இளஞ்செழியன். புலிநாட்டு இளவரசன் என்றால் புலி நாட்டிளவரசனே தான்! எல்லாவற்றிற்கும் மேலாக கதாசிரியர் கரிகாலன்தானோ ஒட்டுத் தாடியுடன் வந்திருக்கிறார் என்று எண்ணும்படியாக விருந்தது. மந்திரி மகளே நேரில் வந்து தரிசனம் தந்ததுபோல் காட்சியளித்தாள் மான்விழி. கடலலை என சுருண்ட கூந்தல், வில் போன்று வளைந்த புருவங்கள், கயல் போன்ற கண்கள், கதுகதுப்பான கண்ணாடிக் கன்னங்கள், சிரிக்கும்போது கன்னத்தில் விழும் குழிகள், கன்னத்துச் சரிவுகளில் காணப்பட்ட கருமை நிறம், கொவ்வையிதழ், முத்துப் பற்கள், நல்ல "மேக்கப்" எல்லாமாக சேர்ந்து, குங்கும நிறத்தழகி மான்விழி குவலய எழிலரசியாகத் தோன்றினாள்.

முதல் காட்சி. வீராவேசத்துடன் பேசினான் இளவரசன். என்ன? இளஞ்செழியனா நடிப்பது! என்ன கம்பீரம்! என்ன வீராவேசம்! இவ்வளவு நடிப்பு எங்கிருந்து வந்தது? சிம்மக்குரல்! சிறுத்தை நடை!! "சிங்கத்தை சிறு நரி சூறையாடும் சூதுச் செயல் தொடர்ந்து நடைபெற இனியும் அனுமதிக்க முடியாது. பொறுத்தது போதும். இனி பொறுமைக்கு இடமில்லை. ஆணவத்துக்கு, அகந்தைக்கு, ஆஷாடபூதித்தனத்துக்கு அடிமையாய் வாழ்வதைவிட, அறப்போர் புரிந்து ஆவி துறப்பதே மேல். சூழ்ச்சி பல செய்து நம்மை சூதாட்டக் காய்களாக ஆக்க முனைகிறார்கள் சுயநலமிகள்! இறைவனின் பெயரால், இனத்தின் பெயரால் இடிக்கப்பார்க்கிறார்கள் நம் இன்ப வாழ்வுக் கோட்டைகளை. ஆம் அன்பர்களே, நயவஞ்சக நரிக்கு ஒரு புதர், பாம்புக்கு ஒரு புற்று, புலிக்கு ஒரு குகையிருக்கும்போது, நெஞ்சில் நேர்மையும், உள்ளத்திலே உண்மையும், அன்பும் பண்பும், அவனி புகழ் அறிவும் கொண்டிருக்கும் நமக்கு, நம்மினத்துக்கு ஒரு நாடு......?"

இப்படியாகப் பேசினான். ஏகப்பட்ட கூட்டம். ஒரு குண்டூசியைக் கீழே போட்டாலும் அணுக்குண்டு போட்டது போல சப்தம் எழுந்திருக்கும். அவ்வளவு உணர்ச்சி வசப்பட்டுச் சிலையென மாறியிருந்தனர் இரசிகர்கள். திரை விழுந்தது. கரகோஷம், கைதட்டல். கட்டடமே இடிந்து விழுந்து விடும்போலிருந்தது. இதே போல் இன்னும்மூன்று காட்சிகள், கதைப் போக்கிற்கேற்ப நடைபெற்றன. கடைசிக் காட்சி இளவரசன் தன் காதலி மந்திரி குமாரியிடம் விடைபெறும்காட்சி. காட்சியின் கடைசிக் கட்டத்தில் இளவரசன் பேசினான்: "அன்பே உன்னை ஒருகணமும் விட்டுப்பிரிய மனம் இடந்தரவில்லை. ஆனாலும் கடமை என்னை அழைக்கிறது. களம் நோக்கிப் புறப்படுகிறேன். நம் ஜென்ம பூமியை மீட்டு, ஜெயத்துடன் மீண்டால்—திருமணம். அன்றேல் வீர மரணம். ஆனால் அன்பே! அதற்குள் உன் கர்வம்பிடித்தத் தந்தையின் மனதை மாற்றிவிடு."

இளவரசனின் கரத்தைப் பற்றினாள் மந்திரி குமாரி. ஆ என்ன? கையில்...! யார் இது? இளஞ்செழியனா? அல்லது......? மான்விழிக்கு என்னமோபோலிருந்தது. ஏன், கடைசியில் அவள் கேட்ட வசனங்கள் பிரதியில் காணப்பட்டவையல்லவே! ஆனால் என்றோ கேட்டது போல் பிரமை.......திரை விழுந்தது. மிகுந்த ஆரவாரம், கைத்தட்டல். கதிரவன், இருவரையும் தேடி மேடைக்கு விரைந்தார். "இளஞ்செழியன் எங்கே? மான்விழி எங்கே?" சந்தோஷம் முகத்தில் தாண்டவமாட கத்தினார். "மக்கள் வேண்டுகின்றனர். இளஞ்செழியன் எங்கே?" காணவில்லை! ஆனால் மான்விழி? அவள் கண்களிலே நீர் காரணம்?

இதற்குள் மேடைக்குள் ஒரு ஆள் நுழைந்தான். கதிரவனிடம் சென்றான். அவர் மான்விழியுடன் ஏதோ பேசிக்கொண்டிருந்தார். வந்த ஆள் தன்னை டாக்டர் கண்ணனின் வேலையாள் என்று கூறினான். ஒரு சிறு காகிதத் துண்டு தந்தான். அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:- "திரு கதிரவன் அவர்கட்கு வணக்கம். நான் வரும் வழியில் ஓர் கார் விபத்தில் சிக்கிக் கொண்டேன். இப்பொழுதுதான் சுயஉணர்வு வந்தது. என் அண்ணா, அந்த அறிஞர் எழுதிய நாடகத்தில் நடிக்க முடியாமல் போனதே! மன்னிக்க வேண்டும். டாக்டர் கண்ணன் வீட்டில்தான் இருக்கிறேன். இங்ஙனம் இளஞ்செழியன். "ஆ" என்று ஆச்சரியத்தில் கதறிவிட்டார் கதிரவன்.

அதே நேரம், "கன்கிராஜுலேஷன்ஸ்' என்று கூறிக்கொண்டே நுழைந்தார் டாக்டர் பெருமாள். "என்ன டாக்டர், என்றுமில்லாதமாதிரி இன்று தமிழ் நாடகம் பார்க்க வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார் கதிரவன். நடந்தவைகளை மறைக்கப் பார்த்தார் அவர். ஆனால் டாக்டர் சொன்ன மறுமொழி கதிரவனை ஆச்சரியக் கடலின் அடித்தளத்துக்கே அமிழ்த்தியது. கனவா அன்றி நனவா என்று ஐயப்பட்டார். டாக்டர் சொன்னார்: "மிஸ்டர் கதிரவன். வழக்கமாக நான் தமிழ் நாடகங்களோ, சினிமாப் படங்களோ பார்ப்பதில்லை என்பது சொல்ல வேண்டியதில்லையே. ஆனால் பாருங்கள். இந்த நாடகத்தைக் கட்டாயம் பார்க்க வேண்டுமென்று இருந்தேன். காரணம் கேட்கிறீர்களா? இதோ,இப்போ சுமார் பத்து பதினைந்து வருடங்களுக்கு முன்னால் என் ஆஸ்பத்திரிக்கு ஒரு கேஸ் வந்தது பாருங்கள். அந்த ஆசாமி விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டார். ஆனால் துரதிஷ்டவசமாக அவருடைய வலதுகை பெருவிரலில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்துவிட்டது. துரதிஷ்டவசமாக என்று ஏன் சொன்னேன் என்றால், அவர் ஒரு எழுத்தாளர். இல்லை. இல்லை. அவர்தான் இந்நாடகத்தின் கதாசிரியர். கரிகாலன் அவர் பெயர். ஆர்வம் கொண்ட அவ்விளைஞன் எழுதியதைக் காதாரக் கேட்கவே வந்தேன்."

"என்ன? கரிகாலன் இன்னும் உயிருடன் இருக்கிறாரா?" என்றார் கதிரவன்.

"ஏனில்லை. ஆனால் இப்போது அவர் இந்த ஊர்ப் பக்கமே வருவதில்லை. அதற்குக் காரணமும் சொன்னார். அவர் இந் நாடகத்தை அந் நாளில் அரங்கேற்ற நினைத்த போது பலர் தடை செய்தனர். நம் மக்களே அப்படித் தானே! நல்ல காரியமென்றால் நாலாயிரம் தடைகள். இன்னொரு காரணமாகவும் அவர் இந்தப் பக்கம் வருவதேயில்லை. அதாவது பாருங்கள், யாரோ ஒரு பெண்ணும். அவள் பெயர் சுந்தரியாம். 'எஸ்டேட் புறப்ரயட்டர்' சந்திரசேகரின் மகளாம். தன் மகள் சுந்தரியுடன் இந்த நாடகாசிரியர் சிநேகமாக, அன்னியோன்யமாகப் பழகுவதைக் கண்டு, அவர் அந்த இளைஞனுக்கு செய்யாத கொடுமைகளையெல்லாம் செய்து துன்புறுத்தியிருக்கிறார். காடையர்களை ஏவிவிட்டு அடித்தாராம். குடியிருந்த வீட்டுக்கே தீ வைத்தாராம். மேலும், அந்த சுந்தரி கூட யாரையோ மணம் செய்துகொண்டதாக கரிகாலன் அறிந்தாராம். ஏன் சார், காலிலே தூசி என்றால் தலையிலே மலம் என்று சொல்லும் சனங்கள்தானே நம் சனங்கள். அவர் இறந்துவிட்டார் என்றுதான் சொல்லுகின்றனர். அது கிடக்கட்டும். ஆனால் உண்மையில் அவர் இறக்கவில்லை! வலது கை பெருவிரலை மட்டும் இழந்து வாழ்ந்து வருகிறார். அவர் இப்போது எங்கே இருக்கிறாரோ...!"

மான்விழியின் கண்கள் அகல விரிந்தன. கடைசிக் காட்சியில், இளவரசனின் கடைசி வார்த்தைகள், புண்பட்ட செஞ்சிலே மீண்டும் தைத்த அந்த வார்த்தைகள், பலவித எண்ணங்களை அவள்மனதில் எழுப்பின. பதினைந்து வருஷங்களுக்கு முன்—சந்திரசேகரன்—நிலா வெளி முற்றம்—வலது கையிலே பெருவிரல் காணாதது—இவை யாவும் அவள் கண்முன் சுழன்றன. விம்மியது மார்பகம். நெஞ்சு வெடித்து விடும் போலிருந்தது. மூச்சு நின்றுவிடும்போல் தோன்றியது.

பேசிக்கொண்டிருந்த இருவரும் "தடார்" என்றதோர் சத்தம் கேட்டுத் திரும்பினார்கள். ஆம். மான்விழி கீழே, தரையில் விழுந்து கிடந்தாள். பேச்சு மூச்சில்லை.

டாக்டர் குனிந்து பார்த்தார். "ஆர்ட் பெயிலியர்" (Heart failure) என்றார். "ஐயோ" என்று அலறிவிட்டார் கதிரவன்.

உண்மையான காரணம் அவர்களுக்கெங்கே தெரியும். கண்களில் நீருடன் "ஏ? ஒன். நடிகை" என்றார் தயாரிப்பாளர் கதிரவன். இரு நீர்த் துளிகள் அவள் பாதங்களில் வீழ்ந்தன. நன்றாக நடித்ததற்குக் காணிக்கையோ என்னவோ!

சுதந்திரன் இல்லையேல் சுபிட்சமில்லை

உங்கள் நீடித்த எழிலுக்கு
'எலைட்'
சூப்பர்லோன் ஜோர்ஜட்
என்னும் அழகின் அணிகலனை
அணியுங்கள்.
பார்வைக்கு மட்டும் அழகல்ல, அவை நவீன நூலிழைகளால் இணைக்கப்பட்டிருப்பதால் உறுதியாக உழைக்கின்றது.
இன்னும் அழுக்குப் பிடியாமல், சுருங்காமல், மடிப்புக் குலையாமல் இருக்கக் கூடியது
'எலைட்'
சூப்பர்லோன் ஜோர்ஜட்
அற்புதமான டிசைன்களிலும் எடுப்பான கண்கவர் வர்ணங்களிலும் கிடைக்கின்றன.
குண்டன்மால்ஸ்,
லிமிட்டெட்,
கொழும்பு.

போன்: 281. தந்தி: "ஜுவல்லர்ஸ்"
மதிப்பிற் சிறந்த வைரங்கள்!
அழகிற் சிறந்த ஆபரணங்கள்!!
யாவற்றிற்கும்
ஈழத்திருநாட்டில் இணையற்ற ஸ்தாபனங்கள்
எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ் & தங்க மாளிகை
யாழ்ப்பாணம்.
உத்தரவாதமுள்ள எல். கே. எஸ். நகைகளையே அணிந்து ஆனந்தமடையுங்கள்,
கிளைகள்: கொழும்பு, திருச்சி, சென்னை, காயல்பட்டணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரசபைத் தேர்தலில்

# சென்னை கற்பித்த பாடம்: கொள்கைக்கும் குணத்துக்குமே முதலிடம்

## பத்தாண்டுப் பயிரான தி. மு. க. தனிப் பெரும் கட்சியாகத் தெரிவு

## கொம்யூனிஸ்ட்டுகளுக்கு படுதோல்வி

### காங்கிரஸ் கவிழ்ந்தது-'துள்ளு மீசை'யும் துவண்டது

சென்னை ஏப்ரல் 16—

சென்னை கார்ப்பரேஷன் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிவாகை சூடியது. ஆட்சிப் பொறுப்பில் உள்ளகாங்கிரஸ் கட்சி மண் கவ்வியது. கொம்யூனிஸ்ட்டு கட்சிபடுதோல்வி அடைந்து இருந்த இடமே தெரியாமல் மறைந்தது. சோஷலிஸ்ட்டு கட்சிக்கும் அதே கதி. பிரஜா சோஷலிஸ்ட்டு கட்சியைப்பற்றிப் பேசவேண்டியதில்லை. நேரடியாகத்தேர்தலில் குதிக்காமல் எட்டிநின்று சிலரைத் தட்டிக்கொடுத்து வந்த தமிழரசுக் கழகமும் துள்ளு மீசையைத் தொங்கப் போட்டுக் கொள்ளும்படியாகிவிட்டது. ஜனநாயக காங்கிரஸின் தலைவிதியும் அப்படியே ஆயிற்று.

இம்முறைதான் முதன் முதலாகக் கார்ப்பரேஷன் தேர்தலில் இறங்கிய தி. மு. க. மொத்தமுள்ள 100 ஸ்தானங்களில் அசலாக 45 ஐயும் தாம் ஆதரித்த சுயேச்சை அபேட்சகர்கள் வெற்றி பெற்ற வகையில் இன்னும் 3 ஐயும் ஆக எல்லாம் 48 ஐக் கைப்பற்றி மற்றக் கட்சிகள் யாவற்றுக்கும் முன்னுக்கு நிற்கிறது.

காங்கிரஸ் 37 ஸ்தானங்களையும், கொம்யூனிஸ்ட்டு கட்சி 2 ஸ்தானங்களையும், சோஷலிஸ்ட்டு கட்சி 2 ஸ்தானங்களையும், பிரஜாசோஷலிஸ்ட்டு கட்சி 1 ஸ்தானத்தையும் சுயேச்சையாளர்கள் (தி. மு. க. ஆதரவு பெற்றவர்கள் நீங்கலாக) 10 ஸ்தானங்களையும் பெற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் தேர்தலின் மூலம் தமிழ் நாட்டிலுள்ள அரசியல் கட்சிகளின் உண்மை நிலை, அவற்றின் செல்வாக்கு, சிறப்பு எல்லாம் ஓரளவு



சென்னைத் தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாயிருந்து பணியாற்றிய கலைஞர் கருணாநிதி.

தெளிவு படுத்தப்பட்டாகி விட்டன. தமிழ் நாட்டு அரசியலில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்துவதாகவும் பிரஸ்தாப தேர்தல் அமைந்து விட்டதைக் குறிப்பிடலாம். ஆளும் கட்சியான காங்கிரஸ் கட்சி தன் ஆயுள் காலத்தில் கண்டறியாத தோல்வியை ஏற்கவேண்டி வந்ததும் கொம்யூனிஸ்ட்டு கட்சி தலை தூக்க முடியாதபடியும் வாய் திறக்க முடியாதபடியும் வாக்காளப் பெருமக்களால் ஒதுக்கித் தள்ளப்பட்டதும் சம்பந்தப்பட்ட இரு கட்சிகளுக்கும் தமது தம்பட்டத்தைக் குறைத்துக் கொள்ளவும் வருங்காலத்திலாவது திருந்தி நடக்கவும் உதவும் என்று நம்பலாம்.

### கோட்டையில் குழி

சென்னை பல இன மக்களும் கலந்து வாழும் நகரம். பெரும்பாலும், படிப்பு வாசனை உள்ளவர்கள் இங்குள்ள மக்கள்; கட்சிகளின் கொள்கைகளைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் படைத்தவர்கள் அவர்கள். இன்னும் சொல்லப்போனால் சென்னை ஓர் வர்த்தகத் தொழில் துறை நகரமாக இருப்பதால் இங்கு வசிக்கும் மக்களில் கணிசமான பகுதியினர் தொழிலாளர்களாகவே இருக்கிறார்கள்.

தொழிலாளர்களையே தமது அரசியல் பிழைப்புக்கு ஆதாரமாக வைத்து அவர்கள் பிரச்னையையே தமது உயிர்ப் பிரச்னை என்று சொல்லி நாளெல்லாம் முழக்கிவரும் கொம்யூனிஸ்ட்டுகள் சென்னையைத் தமது கோட்டையாகக் கருதிவந்தனர். அந்தக் கோட்டையிலேயே அவர்களுக்குக் குழி தோண்டப்பட்டு விட்டது.

### அபேட்சகர்களே கிடைக்கவில்லை

நூறு ஸ்தானங்களில் 100 க்கு காங்கிரஸும் 90 க்கு தி. மு. க. வும் அபேட்சகர்களை நிறுத்தின. அதற்கான வாய்ப்பு அந்தக் கட்சிகளுக்கு இருந்தது. ஆனால் கொம்யூனிஸ்ட்டுகளுக்கோ அந்த வாய்ப்பும் இல்லை. ஆகப் 17 அபேட்சகர்களையே தேடிப்பிடித்துத் தேர்தலில் நிறுத்த அவர்களால் முடிந்தது. அந்தப் பதினேழு பேரிலும் 15 பேர் தமது கோட்டையில் 'கோட்டை' விட்டு விட்டார்கள். இரண்டே இரண்டு பேருக்குத்தான் தப்பித் தவறித் தலை தூக்க முடிந்தது.

### தோழர்களின் கதி

தமது கோட்டையிலேயே விரட்டியடிக்கப்பட்ட கொம்யூனிஸ்ட்டுகள், தொழிலாளர்களால் — நிராகரிக்கப்பட்ட தோழர்கள் — இனி என்ன சொல்லிக் காலக்ஷேபம் நடத்தப்போகிறார்களோ நாமறியோம். பாருக்காகத்தாம் குரல் கொடுப்பதாகக் கொம்யூனிஸ்ட்டுகள் கூப்பாடு போட்டார்களோ அந்த மகாஜனங்களே அவர்களை வேண்டாம் என்று கை கழுவி விட்டுவிட்ட பிறகு இவர்களுக்கு என்ன வேலை இருக்கிறது? இவர்கள் சிந்திக்க வேண்டிய விஷயம் இது. சிறிப் பயனில்லை.

சுதந்திரன் சென்னை நிருபர்
ஈழத்தரசன்

## சென்னைக் கடிதம்

சென்னையில் தான் தோழர்களுக்கு இந்த 'அடி' என்றால் தமிழ் நாட்டிலுள்ள மற்ற 53 நகரசபைகளிலாவது பெருமைக்குரிய நிலை கிடைத்ததா? தஞ்சையிலும், தூத்துக்குடியிலும் தோல்விமேல் தோல்வி. திருச்சியில் சேலத்தில் எல்லாம் கூடத் துரதிர்ஷ்டம்தான். மதுரையும் கோவையும் மனது வைக்காதிருந்தால் கொம்யூனிஸ்ட்டுகள் அரசியல் துறவு பூண்டு



கழகக் காப்பாளர் நாவலர் நெடுஞ்செழியன்

பஜகோவிந்தம் பாடிக் கொண்டு மாஸ்கோவுக்கு காவடி எடுத்திருக்க வேண்டியதுதான். இதைத் தவிர வேறு வழியில்லை அவர்களுக்கு. ஏனெனில் கேரளத்திலும் கூட அவர்கள் குட்டு வரவர அம்பலமாகிவருகிறது

### தி. மு. க. வின் அதிகப்படியான வாக்குகள்

காங்கிரஸைப் பொறுத்தவரையில் சென்னையில் அதற்கு இம்முறை கிடைத்த அதிர்ச்சி அதன் மூல வேரையே தாக்குவதாக இருக்கும். பத்து ஆண்டுப் பயிரான தி. மு. க. எடுத்த எடுப்பிலேயே, கார்ப்பரேஷன் தேர்தலில் இறங்கிய முதல் தடவையிலேயே காங்கிரஸை ஒதுக்கிவிட்டது ஒருபுறத்தில். அசலாக 8 ஸ்தானங்களைக் காங்கிரஸைக் காட்டிலும் அதிகப்படியாகப் பெற்றது ஒன்றுதான் அதன் வெற்றி என்று சொல்லி முடித்துவிட முடியாது.

காங்கிரஸ் போட்டியிட்ட 100 ஸ்தானங்களிலும் பெற்ற மொத்த வாக்குகளைக் காட்டிலும் தி. மு. க. தான் போட்டியிட்ட 90 ஸ்தானங்களிலும் 4,569 வாக்குகளை அதிகப்படியாகப் பெற்றிருக்கிறது.

### காங்கிரஸ் செயலாளர் தோல்வி

சென்னை மாவட்டக் காங்கிரஸ் கமிட்டிச் செயலாளர் திரு அற்புதராஜனே தி. மு. க. அபேட்சகர் ஒருவரால் தோற்கடிக்கப்பட்டார்.

சென்னையில் மட்டுமல்லாமல் ஆம்பூர் வேலூர் தஞ்சைத் தேர்தல்களிலும் காங்கிரஸால் தி. மு. க. வை முந்த முடியவில்லை. ஏனையவற்றிலும் கூட காங்கிரஸுக்கு பெருமை தரக் கூடிய அளவு ஸ்தானங்கள் கிடைக்கவில்லை. ஏன்?

### அடுக்கு மொழியும் பயன்தரவில்லை

ஜாதி அடிப்படையில் வாக்குப் பறிக்கும் அரசியல் சாணக்கியம் சென்னையில் தான் செல்லுபடியாக முடியாதென்றால் மற்றப் பகுதிகளிலும் அப்படியா போக வேண்டும்? கூளை கூளையாகப் பணத்தையும் விலக்கப்பட்ட பானங்களையும் திருட்டுத்தனமாகத் திணித்தால் அவற்றையெல்லாம் வாங்கிக் கொண்டு வாக்குச் சீட்டை மட்டும் வகையான அபேட்சகருக்குப் போடும் பொதுமக்கள் சென்னையில் தான் இருக்கிறார்கள் என்றால் ஏனைய பகுதிகளிலும் அப்படித்தானா நிலைமை?

ஆம்; அதுதான் உண்மையும் கூட. 'தி. மு. க. வினர் அடுக்கு மொழி பேசியும், உவமான உவமேயங்களை அள்ளி வீசியும் பொது மக்களின் வாக்குரிமை பெற விழைகிறார்கள்' என்று கேலி பேசிய சென்னை மந்திரிகளே முன்னின்று தமக்கும் அந்தக் கலை கைவரும் என்று காட்டத் துணிந்தும் கண்ட பலன் தோல்விதான்.

### தொண்டு மனப்பான்மை வேண்டும்

ஆக, காங்கிரஸின் தோல்விக்கு உண்மைக் காரணம் அது நடந்து கொண்ட விதந்தான் என்பதை இந்தத் தருணத்திலாவது சம்பந்தப்பட்டவர்கள் தெரிந்து கொண்டு முன் எச்சரிக்கையாக நடந்தால் எதிர் வரும் பொதுத் தேர்தலில் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் பூண்டோடு ஒழிவதைத் தடுக்கலாம்.

ஆளத் துணிபவர்களுக்கு, ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்துவிட்டவர்களுக்கு தொண்டு மனப்பான்மை வேண்டும். நாட்டு நிர்வாகத்துக்கான நல்ல திட்டங்கள் வேண்டும்; அவற்றைச் செயல்படுத்தும் திறன் வேண்டும்; செயல்படுத்தும் போது மக்கள் பாதிக்கப்படாதிருக்கிறார்களா என்பதைத் தெரிந்து உசிதமான முறையில் காரியமாற்றுவதற்கான பக்குவம் வேண்டும்.

இத்தனையும் இல்லாமல் எதிர்க் கட்சிகளைத் தாக்குவதையும், தாம் நினைத்ததே சட்டம் என்ற சர்வாதிகார ரீதியில் நடப்பதையும், மக்கள் எண்ணத்துக்கு மதிப்புக் கொடுக்காமல் அலட்சியமாக இருப்பதையும் பழக்கமாகக் கொண்டுள்ளவர்களுக்கு ஜனநாயக சம்பிரதாயப்படி குறிப்பிட்ட காலக்கிரமத்தில் கிடைக்கும் தண்டனை என்ன என்பது இப்போது தெளிவாகிவிட்டது.

### காங்கிரஸ் ஏன் தோற்றது

1. சென்னை மாகாணத்துக்கு தமிழ் நாடு என்ற பெயர் வைக்கக் காங்கிரஸார் மறுத்ததன் விளைவு.

2. வானொலிப் போராட்டத்துக்கு வளைந்து கொடுத்து இந்



திரு. சி. என். அண்ணாத்துரை

திக்குப் பதில் தமிழ் முழங்க வைக்கப் பின் நின்றதன் விளைவு.

3. ஊட்டிக்கு உல்லாச வாசத்துக்கு புறப்பட ஒற்றைக் காலில் நின்றதன் விளைவு.

4. வரிக்குமேல் வரி உயர்வு போட்டு கடைசியில் அழுகல் வரியும் விதித்ததன் விளைவு.

5. வடவரின் சுரண்டலிலிருந்து தமிழ் நாட்டை மீட்கப் பயந்து நிற்பதன் விளைவு.

6. கிராம அபிவிருத்தியிலும் வளம் தரும் நிர்மாணத் திட்டங்களிலும் போதிய கவனம் செலுத்த மறுத்ததன் விளைவு.

நகரசபைத் தேர்தல்களில் காங்கிரசின் தோல்வியாக முடிந்தது.

### தி. மு. க. வின் சிறப்பு

ஆட்சிப்பொறுப்பை ஏற்க மாற்றுக் கட்சி வேண்டும் என்ற முடிவுக்கு மக்கள் வந்துவிட்டார்கள். காங்கி

(13-ம் பக்கம் பார்க்க)

சிக்கனமானது! பிரகாசமுள்ளது!
உங்கள் றேடியோவில் திறமையான முறையில் கேட்பதற்கு
நாஷனல் றேடியோ பாட்றியைப் பாவியுங்கள்.



ஸ்டாக்கிஸ்ட்ஸ்:- எஸ். டி. மொகமெட் ஹாஜீயார்,
70, டாம் வீதி, கொழும்பு-12.
143, மெயின் வீதி, காலி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# படத்துறையில் மட்டுமல்லாமல் கொடை துறையிலும் புரட்சி செய்தார் நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன்

## மக்கள் சேவைக்கு 'டிரஸ்ட்' அமைத்து ரூபா 3 லட்சம் ஒப்படைத்தார்

## பள்ளி மாணவர்களின் மதிய உணவுக்கு நடிகர் திலகம் 1 லட்ச ரூபாய் நன்கொடை



புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன்

இலங்கையிலே 'லேடி லொக்ஹோர் பண்ட்' என்ற ஸ்தாபனமும் மேற்குலகிலே 'ரொக்பெல்லர் பவுண்டேஷன்' என்ற ஸ்தாபனமும் மற்றும் பல இடங்களில் வேறுபல 'டிரஸ்ட்' ஸ்தாபனங்களும் இருந்து மக்களுக்கு அரும்பணி செய்து வருவது தெரிந்ததே

அதே முறையில் இயங்குவதற்கான ஒரு குழுவை அமைத்து அதன் கையில் ரூபா 3 லட்சத்தை ஒப்படைத்திருக்கிறார் புரட்சி நடிகர் எம் ஜி. இராமச்சந்திரன். தென்னகத்திலே இத்தனை பெரிய நன்கொடையை இப்படியான அமைப்பு மூலம் மக்களுக்கு நீண்டகாலப் பயன் அளிக்கக் கொடுத்து வைத்த நடிகர் வேறு எவரும் இல்லை. கலைவாணர் வழிவந்த புரட்சி நடிகர் சினிமாத் துறையில் மட்டுமல்லாமல் கொடை கொடுப்பதிலும்கூடப் புரட்சியை உண்டுபண்ணிய பெருமைக்கு ஆளாகிறார்.

ஆளவந்தார் மக்களின் கனக்குரலைக் கேளாக் காதினராக இருந்து வரிக்கு மேல் வரி போட்டு அவர்களை மேலும் மேலும் வாட்டி வதைக்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டு வருகையில், தம்மை வாயார வாழ்த்தி வாழவைக்கும் மக்கள் நலிவைப் போக்கி நன்றிக் கடன் ஆற்றும் அரும்பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள் தென்னகத்துத் திரையுலகச் சோதிச் சுடர்களான நடிகர் நடிகைகள்.

### ஈடு இணை இல்லை

பள்ளிக்கூடங்கள், மருத்துவ மனைகள், அனாதை விடுதிகள் போன்றவற்றை நிறுவி அவற்றின் மூலம் மக்களுக்கு நீடித்த முறையில் பயன் சுவறச் செய்யவென ஒரு குழுவொன்றை அமைத்து அதனிடம் ரூபா 3 லட்சத்தை ஒப்படைத்த எம். ஜி. ஆரின் கொடைத் திறனுக்கு இன்றைநாளில் இந்தியத் திரையுலகில் ஈடு இணை காண முடியாது.

### சிவாஜி நன்கொடை

கிழக்குலகிலேயே, நடிப்புக்கொரு சிவாஜி என்று குறிப்பிடத்தக்க நமது நடிகர் திலகம் சிவாஜி கணேசன் சென்னை நகரசபை பள்ளிகளின் மதிய உணவுத் திட்டத்துக்காக ஒரு லட்ச ரூபாய் நன்கொடை அளித்துள்ளார்.



நடிகர் திலகம்
சிவாஜி கணேசன்

### உண்மை வெளிச்சம்

உல்லாச வாழ்க்கைக்கு 'குளு குளு' ஊட்டிக்குப்புறப்பட ஒற்றைக்காலில் நிற்கும் 'கனம்'களின் நெஞ்சத்தைக் கூட மேற்படி இரண்டு செய்திகளும் குளிரச் செய்யும் என்பதில் சந்தேகம் இல்லையென்றால் மக்கள் மகிழ்ச்சி பற்றி வேறு சொல்ல வேண்டுமா?

நடிகர்களைக் 'கூத்தாடிகள்' என்று கேலி பேசிவந்த ஆட்சியாளர்களுக்கு இப்போது புரியும் உண்மை நிலை. யாரைத் தாம் வெறும் கூத்தாடிகள் என்று எண்ணினார்களோ அவர்களே நல்ல கொடையாளிகள் என்பதும் மக்கள் துயர் கண்டு இளகும் இதயம் படைத்தவர்கள் என்பதும் இப்போது புரியும்.

### நாடோடி மன்னன்

தம்மைச் சிறந்த நடிகர் என்பதை விட திறமைமிக்க ஓர் டைரக்டர்—தயாரிப்பாளர் என்பதையும் விளக்கி, மிகுந்த பணத்தையும் புகழையும் தமக்கு ஈட்டித்தந்த வெற்றிப்படமான நாடோடி மன்னன் தொடர்ந்து நூறு நாட்களுக்கு மேல் சென்னையில் ஓடியதை யொட்டியே எம். ஜி. ஆர். 3 லட்சம் ரூபாய் நன்கொடை வழங்கினார்.

### கட்டப் பொம்மன்

சிவாஜியும் கட்டப் பொம்மனில் தாம் ஈட்டிய புகழையும் பெருமையையும் உத்தேசித்தே ஒரு லட்ச ரூபாய் நன்கொடை அளித்தார்.

முன்னவர் குழுவிடம் கொடுத்ததால் பலருக்கு அது தெரியாமல் போயிற்று. பின்னவர் தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்துள்ள பிரதமர் நேருவிடமே ஒப்புவித்ததால் எங்கணும் அது தெரிய வந்தது.

### மக்கள் வாழ்த்து

"வலக்கை கொடுப்பதை இடக்கை அறியாமலிருக்குமானால் அதுதான் கொடை என்பார்கள். இந்த வகையில் எம். ஜி. ஆரும், சிவாஜியும், மற்றும் பல நடிகர் நடிகைகளும் அவ்வப்போது பல காரியங்களுக்கும் பெருந்தொகையில் நன்கொடைகள் அளித்திருக்கிறார்கள். "நடிக நடிகையர்களின் நல்ல உள்ளம் வாழ்க! நவயுகக் கொடை வள்ளல்கள் வாழ்க!" என்று மக்கள் வாழ்த்தக் கேட்கிறோம்.

பட விமர்சனம்:

# நாடோடி மன்னன்

"சூழ்ச்சிக்காரருக்கு, சுயநலமிகளுக்கு நாட்டை ஆளும் வாய்ப்பை அளிக்கக்கூடாது. தொண்டு செய்யத் திடம் கொண்டவர்கள், மக்கள் உள்ளத்தைப் புரிந்து கொண்டு, அவர்கள் உண்மை நிலையை அறிந்துகொண்டு ஆவன செய்ய முடிந்தவர்களுக்கே பொறுப்பான பதவி கிடைக்க வேண்டும்"—இந்தக் கருத்தை வலியுறுத்தும் வகையில் புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரனால் தயாரித்துத் தரப்பட்டிருக்கும் படம் இப்போது இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் தியேட்டர்களில் காண்பிக்கப்பட்டு வருகிறது.

### கலர் காட்சிகள்

படத்தில் சரிபாதியளவு கலரில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. கலரில் எடுக்கப்பட்டிருக்கும் இயற்கைக் காட்சிகள் —ஒன்று இரண்டல்ல, ஏராளமானவை — கண்களை அப்படியே கவர்ந்து உள்ளத்தில் இன்பம் குவிக்கின்றன. ஆங்கிலக் கலர்ப் படங்களின் தரத்தில் நாடோடி மன்னன் கலர்க் காட்சிகள் உள்ளன என்றால் மிகையாகாது.

### சண்டைக் காட்சிகள்

சண்டைக் காட்சிகள் படத்தில் சரமாரியாக வருகின்றன. ஆனால் ஒன்று தானும் சோடை போகவும் இல்லை; சலிப்புத் தட்டவும் இல்லை. எம். ஜி. ஆர். இரண்டு தோள்களிலும் தடி ஒன்றைத் தாங்கிக்கொண்டு முரடர்களை லாகவமாகத் தாக்கி [illegible] தொங்கு பாலத்தில் [illegible] [illegible] ரஸமானவை.

அரைகுறையாக அறுக்கப்பட்ட தொங்கு பாலத்தில் எம். ஜி. ஆர். சரோஜாதேவியுடன் தொங்கியபடியே கரைசேர முயன்ற காட்சியும் குறிப்பிடத்தக்கதாகும்.

### இருவேட நடிப்பு

புரட்சிக்காரன் வீராங்கனாகவும் மன்னன் மார்த்தாண்டனாகவும் எம். ஜி. ஆர். இரட்டை வேடத்தில் சக்கை போடு போட்டிருக்கிறார். வீராங்கனும் மார்த்தாண்டனும் கை குலுக்கும் காட்சியும், ஒருவர், தாம் இருந்த கதிரையில் அப்படியே இருக்க, மற்றவர் சுற்றி வருவதுமான காட்சிகள் கமிராவின் உதவியால் பார்ப்போரைத் திகைக்க வைக்கும் வண்ணம் அற்புதமாகத் தரப்பட்டிருக்கின்றன.

### உருக்கமான கட்டம்

எம். ஜி. ஆர்., வீரப்பா தவிர நம்பியார், சந்திரபாபு, சக்ரபாணி, பானுமதி, எம். என். ராஜம், சரோஜா தேவி, முத்துலட்சுமி, சகுந்தலா, அங்கமுத்து ஆகியோரும் நடித்திருக்கிறார்கள். யாருடைய நடிப்பையும் மட்டம் என்று சொல்வதற்கில்லை. பானுமதி அவசியமில்லாமல் படத்தில் வந்து இடையில் சாகடிக்கப்பட்டு விடுவது தவிர்க்கப் பட்டிருக்கலாம். எம். ஜி. ஆர். தம்மை யாரென்று ராஜத்துக்குச் சொல்லும் கட்டத்தில் அவரும், 'அண்ணே, அண்ணே' என்று அழைத்து, "டீங்கள் தலைமைதான் அண்ணே நாடே எதிர்பார்த்து இருக்கிறது" என்று கூறும் கட்டத்தில் ராஜமும் நன்கு சோபிக்கிறார்கள்.

### பாட்டு, நடனம்

திராவிட மொழிகள் நான்கிலும் கருத்தமைந்த பாடல்கள் ஒலிக்கின்றன. இனிமையான சங்கீதம், நடனங்களும் நன்று. காட்சிஜோடனைகளும் பாத்திரங்களின் ஆடை அணிகளும் அற்புதமாக இருக்கின்றன.

### டைரக்ஷன்

டைரக்ஷன் எம். ஜி. ஆரின் திறமைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. காமிராவும் மிகத் திறமையாகக் கையாளப்பட்டிருக்கிறது.


### புரட்சியும் தி. மு. க. கொடியும்

மக்கள் புரட்சியோடு படக்காட்சி ஆரம்பித்து சிவப்பும் கறுப்பும் கொண்ட தி. மு. க. கொடி 'வணக்கம்' என்ற சொல்லைத் தாங்கிப் பட்டொளி வீசிப் பறப்பதோடு முடிவடைகிறது. படம் சற்று நீளமானதுதான். ஆயினும் பார்ப்போர், இன்னும் நீண்டிருந்தாலோ என்று அங்கலாய்க்குமளவுக்கு நன்றாக ஓடுகிறது. நல்ல கருத்துக்களுக்காக, இனிய இயற்கைக் காட்சிகளுக்காக, அற்புதமான ஸ்டண்டுகளுக்காக அருமையான படப்பிடிப்பு நுணுக்கத்தை ரஸிப்பதற்காகக் கண்டிப்பாக ஒவ்வொருவரும் பார்க்க வேண்டிய படம் நாடோடி மன்னன்.

—கே. கே. ஆர்.

இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி!
மங்கையர் மனதுக்குகந்தது

உஷா தையல் மெஷின்களே




★ ஒருவரின் ஆயுள் காலம்முழுவதும் உழைக்கக் கூடிய வெகுமதி

★ மாதத் தவணைக் கட்டணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

★ இலங்கை பூராகவும் விற்பனையாகிறது.

★ உங்கள் உள்ளூர் விற்பனையாளர்களைக் கேளுங்கள்.

சோல் ஏஜண்டுகள்:

ரெய்முசன்ஸ் லிமிட்டெட்,

88 A, மெயின் வீதி, கொழும்பு-11

போன்: 4243, 5060

கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புரொமோஷன் கவுன்ஸிலால் நடாத்தப்படுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னை கற்பித்த பாடம்....

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

ரஸின் கையாலாகாத் தனத்தை நன்ருகப் புரிந்து கொண்ட மக்கள் அதற்குப் பதிலாக தி. மு. க. வின் தலைமையை நாடத் தொடங்கி விட்டார்கள்.

திட்டம் உள்ளவர்கள், செயல் திறமை உடையவர்கள், அயராது உழைப்பவர்கள், கொள்கைஉரம் படைத்தவர்கள், மக்கள் நலம் பேணுகிறவர்கள், பதவிப் பித்து அற்றவர்கள், டெல்லிக்குப் பணியாத நெஞ்சுரம் படைத்தவர்கள் தி. மு. க. வினர் தான் என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். அறிஞர் அண்ணுவின் தலைமையில் நாவலர் நெடுஞ்செழியனின் ஆணை ஏற்று அரும்பணி ஆற்றும் வீரர் கூட்டந்தான் தமக்கு விடுதலை வாழ்வும் சுபீட்ச நிலையும் ஏற்படுத்தித் தரவல்லவர்கள் என்பதை இந்தப் பத்தாண்டுக் காலத்தில் இப்போதுதான் மக்கள் ஐயந்திரிபு இல்லாமல் அறிந்து கொண்டார்கள்.

### தமிழரசுக் கழக உமாபதி தோல்வி

ஏக இந்தியாக்களையோ அல்லது எடுத்ததற்கெல்லாம் சோஷலிஸம் பேசுகிறவர்களையோ அவர்கள் மாற்றுக் கட்சிக்கு லாயக்குள்ளவர்களாகத் தெரிந்தெடுக்கவில்லை. "தமிழ்... தமிழ் நாடு ......" என்று அவ்வப்போது சாதகமான காற்று வீசும்போது முழங்கிவிட்டு ஓய்ந்திருக்கும் கழகத்தார்களையும் மக்கள் தெரிவு செய்யவில்லை. தமிழரசுக் கழகத் 'தூண்' என்று சொல்லத்தக்கவரும் "உமா" சஞ்சிகை ஆசிரியருமான திரு உமாபதியே மண் கவ்விஞரென்ருல் அந்தக் கட்சியின் நிலைபற்றி வேறு என்ன சொல்ல வேண்டும்!

### சேவை

சரி, தி. மு. க. வெற்றிக் கொடி நாட்டி விட்டது. அதன் கொள்கை மக்கள் மத்தியில் எடுபட்டு விட்டது என்றே சொல்லலாம். இத்தனை சூருவளி வேகத்திலும் மாற்றுக் கட்சியினர் தேர்தல் முடிவைக் கண்டு மலைத்துப் போகும் வகையிலும் வெற்றி கிட்டியதற்குக் கழக அமைப்பாளர், காப்பாளர், முன்னணி வீரர்கள் மற்றுமுள்ள தொண்டர்கள் ஆர்வமுடன் ஆற்றி வந்த பணிக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போலக் கழகத்து நடிப்புச் செல்வங்கள் செய்த சேவை திகழ்கிறது. குறிப்பாக புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். மக்கள் மத்தியில் தமக்கு உள்ள செல்வாக்கை நன்கு பயன்படுத்த தம்முடைய ஓயாத திரைப்பட வேலையோடு வேலையாகத் தேர்தல் பிரசார வேலையையும் செய்ததைக் குறிப்பிடலாம்.

### நாடோடி மன்னன்

மற்றும் தயாரிப்பில் இருந்து வந்த தமது சொந்தப்படமான நாடோடி மன்னனைக் கார்ப்பரேஷன் தேர்தலுக்கு சமீபத்தில் வெளியிட்டது. தி.மு. க.வின் வெற்றிக்கு பெருந்துணை செய்தது என்ருல் மிகையாகாது.

### செயல் வேண்டும்

வெற்றிக் களிப்பில் தி. மு. க. செயலில் இறங்கத் தாமதிக்கக் கூடாது. சொல்லில் மட்டுமல்ல, செயலிலும் தாம் வீரர்தான் என்பதை நிதர்சனம் காட்டவேண்டிய காலம் இப்போது தி. மு. க. வுக்கு வந்து விட்டது. குறிப்பாகச் சென்னையின் தேவைகள் பல. அவற்றைக் கச்சிதமாகப் பூர்த்திசெய்துவைக்க வேண்டும். மக்கள் அன்பையும் ஆதரவையும் மென்மேலும் பெற இது வழியாகும்.

---

# பெரும்பான்மை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அந்தக் குற்றச்சாட்டுக்கு நாம் ஆளாய் இருக்கும்வரை எப்படி நமக்கு அரசியல் போராட்டத்தில் வெற்றி கிடைக்கும்?

### கட்சியின் கருத்து

பழமை வாய்ந்த பெரிய இனமான இந்திய மக்கள் சமுதாயத்தை அந்நிய ஆட்சி அடக்கி ஆண்டு வந்தது. இந்திய மக்கள் தமக்குள் இருந்த தீண்டாமையை ஒழித்து, தீண்டப்படாதார் என தள்ளி வைக்கப்பட்டிருந்தவர்கட்கு விடுதலை அளிக்க இந்தியா உண்மையான நேர்மையான நடவடிக்கை எடுத்ததோடு அந்நிய ஆட்சியும் தானுகவே ஒழிந்து போனது. அதே போல இலங்கையிலும் தமிழ் மக்கள் தாழ்த்தப்பட்டோர் என்று தாங்கள் தள்ளிவைத்திருக்கும் மக்களுக்கு விடுதலை அளிக்க முன் வந்தாலன்றி, தமிழ் பேசும் மக்கள் அரசியல் போராட்டத்தில் வெற்றி பெறுவதற்கில்லை.

எப்பொழுது விடுதலை அளிக்கிருர்களோ அப்பொழுதுதான் தமிழ் சமூகம் அரசியல் துறையில் வெற்றி பெறுவார்களென்று எங்கள் கட்சி அந்தரங்க சுத்தியுடன்

---

# நீலவேணி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தியநாதன் மாட்டிக்கொண்டிருக்கிருன். உண்மைக் குற்றவாளி யார், என்பதை நான் எப்படியும் கண்டு பிடித்துவிடுவேன் என்பதில் உங்களிருவருக்கும் அனேகமாக அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கும். ஆகவே நீலவேணியையும் தட்டிக் கொண்டு பாரிஸிற்குக் கப்பி நீட்டிவிட நீங்கள் திட்டமிட்டிருக்கிறீர்கள். இனி இலங்கையில் அதிகநாள் நீங்கள் தங்குவதற்கில்லை. இன்றோ நாளையோ கிளம்பிவிடலாம். பயப்பட வேண்டாம், துணைக்கு நானும் கப்பலில் வந்து சேர்ந்துகொள்கிறேன். டட்டா! வருகிறேன்.

— அன்பன் நிழல்மனிதன்"

(தொடரும்)

---

# ஆறு சிறுகதை...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்ப் பத்திரிகைகளில் அந்தத் தவறு நேர்வதற்குக் காரணம் அவற்றிற்கு வசதிக் குறைவுகள் பல இருப்பதுதான் என்று விளக்கினுர்.

வளரும் எழுத்தாளர்களுக்குத் திரு. சிவநாயகம் சில புத்திமதிகள் கூறினுர். பதங்களைப் பிரயோகிப்பதில் அவர்கள் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என்று சொல்லிவைத்த அவர் பெரும்பாலும் பலராலும் தவருன இடங்களில் பிழையாக உபயோகிக்கப் பட்டு வரும் 'நிவாரணம்', 'மகத்தான' என்பன போன்ற சொற்கள் எங்கே எப்படி உபயோகிக்கப்பட வேண்டும் என்று தெளிவு படுத்தினுர்.

### சொற் பிரயோக அகராதி

ஆங்கிலத்தில் உள்ளது போன்ற சொற் பிரயோக அகராதிகள் தமிழிலும் வெளிவர வேண்டும் என்றும் அவற்றிற்கு திரு. லக்ஷ்மணன் போன்ருர் முன்னின்று உழைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

### வண. பிதா சவரிமுத்து

வண. பிதா சவரிமுத்து பேசும் போது வளரும் எழுத்தாளர்களை வளர்ந்த எழுத்தாளர்கள் கைதூக்கி விட வேண்டும் என்றும் வளரும் எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு பொது மக்கள் ஆதரவு நல்க வேண்டியது அவசியம் என்றும் கூறினுர்.

திருவாளர்கள் இணுவை மாறன், வில்லவன், நவசோதி ஆகியோரும் கூட்டத்தில் பேசினுர்கள். இசை நிகழ்ச்சியும் வளரும் எழுத்தாளர் சங்கம் நடத்திய கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

---

# திட்டமிடுதல்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மான பண்பு அபரிமிதமாக இருந்தது. தமிழனிடம் அந்தப் பண்பு சூன்யமாக இருக்கிறது. அந்தப் பண்பை ஆங்கிலத்தில் "என்ரெப்பிரெனர்ஷிப்" (Entrepreneurship) என்று சொல்வர். தமிழில் அதைக் குறிப்பதற்குச் சரியான சொல் இல்லை.

—(தொடரும்)


செல்லமஹால் (3-வது வாரம்

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

ஸ்ரீராம்-வனஜா-ஜி. எம். பஷீர்

முத்துலக்ஷ்மி

நடிக்கும்

மாய மனிதன்

'இன்விஸிபிள் மான்' என்ற ஆங்கிலக் கதை






கெயிட்டி 7-வது வாரம்

ஜெமினி கணேசன்,

சாவித்திரி

நடிக்கும்

திருமணம்

வியாபாரத்திற் கழகு விளம்பரம் செய்தல்



மகத்தான 6-வது வாரம்

இன்னும் சினிமா ரசிகர்கள் விரும்பும் மகோன்னத சித்திரம்

சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்ப்பாணம்)

தினசரி மாலை 6, இரவு 9-30 மணி. மெற்னி சனி ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கும், ஞாயிறு முற்பகல் 10 மணிக்கும் காண்பிக்கப்படும்.

ஜோதி (திருகோணமலை)

தினசரி 6, இரவு 9-30 மணிக்கும் ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கும் காண்பிக்கப்படும்.

அன்னபூர்ணுவின்

மஞ்சள் மகிமை

ஏ. நாகேஸ்வரராவ், சாவித்திரி, ராஜசுலோசன, கே. ஏ. தங்கவேலு, பி. கண்ணும்மா, ஜி. வரலக்ஷ்மி, கே. சாரங்கபாணி, எஸ். வி. ரங்கராவ் நடித்தது.

நடனம்: ராகினி——குமாரி





ஒடியன் (கல்கிஸை) ... நடித்த

கார் சன் ஸ்பார்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கண்டது கற்க.....

இந்தப் பகுதிக்கு நேயர்கள்கூட வினுக்களும் விடைகளும் எழுதி அனுப்பலாம். ஏற்றவை அவரவர் பெயர்களுடன் வெளியிடப்படும்.

ஆசிரியர்: சுதந்திரன்

1. சங்ககால மாதர் தங்கள் கூந்தலுக்கு அகிற் புகை ஊட்டியதாக அறிகிறேம். அகிற் கூட்டில் சேரும் பண்டங்கள் எவை?

—ம. சபாரத்தினம், சித்தாண்டி

2. சூரிய ஒளியைக் காட்டிலும் அதிக பிரகாசமான ஒளியுடைய நட்சத்திரம் உண்டா?

—ஜே. டி. சி. விக்டர், டெனியாய

3. பிரான்சிய மன்னனும் சரித்திரப் பிரசித்தி பெற்றவனுமான நெப்போலியனின் கொடிச் சின்னம் என்ன?

—வி. ஜே. அன்டனி, வாழைச்சேனை

4. வண்டின் ரீங்காரம் எப்படி வருகிறது. அது உண்மையில் வாய் திறந்து பாடுகிறதா?

—கா. சாந்தநாயகி, மட்டுவில் தெற்கு

5. இலங்கை வானெலி வர்த்தக ஒலிபரப்பில் தினசரி எத்தனை இசைத்தட்டுகள் ஒலிபரப்புகிறூர்கள்?

—க. இரத்தினசிங்கம், கிளிநொச்சி

## ..............பண்டிதனுவான்

# இரு பொருள் அழகு

சில செய்யுட்களுக்கு ஒரே கருத்து மட்டுமன்றிப் பல கருத்துக்களும் இருப்பதுண்டு. இரு கருத்துத் தரும் பாக்களைச் சிலேடைப் பாக்கள் என்று சொல்வதுண்டு. 'குடியேறினல் சிறியவூர் பட்டணமாகும், வெறியரும் மயங்கித் திரிவர்.' என்பதில் இரு கருத்தைக் காண்கிறேம். 'பெருங்காயத்தினுல் வெந்த கறி மணக்கும், வேந்தர் படையும் முறியும்" என்பதிலும் இருகருத்தைக் காணமுடிகின்றது.

கவி காளமேகப் புலவர் பாடிய ஒரு பாடல் இரு பொருள்களைத் தருகின்றது. இதோ! இவ்வெண்பா பாம்பிற்கும் வாழைப்பழத்திற்கும் பொருந்துவதாய் உள்ளது.

"நஞ்சிருக்கும் தோலுரிக்கும்
நாதர்முடி மேலிருக்கும்
வெஞ்சினத்திற் பற்பட்டால்
மீளாதே—விஞ்சு மலர்த்
தேம்பாயுஞ் சோலைத்
திருமலைராயன் வரையில்
பாம்பாகும் வாழைப்பழம்"

பாம்பிற்கும் நஞ்சு இருக்கும். வாழைப் பழமும் நஞ்சு போய் (மெதுமையாய்) இருக்கும். இடையிடை பாம்பும் தோலுரிக்கும். (செட்டை கழற்றுதல்) வாழைப்பழமும் சாப்பிடுமுன் தோல் உரிக்கப்படும். சிவனின் (நாதர்) சில முடிமேல் வாழைப்பழம் இருக்கும். (பழம் வைத்துக் கும்பிடல் இந்துக்களின் வழக்கம்.) பாம்பும் சிவனின் சடைமுடியில் இருக்கும். சினக் கொதிப்பால் ஒருவன் உடலில் பாம்பு பல் வைத்தால் அவன் மீள்வது அருமை. வாழைப் பழமும் பல்லில் பட்டால் மிஞ்சாது.

தேன் சொரியும் மலர்கள் நிறைந்த சோலையுள்ள திருமலைராயனின் மலையின் பாம்பும், வாழைப்பழமும் இத்தகையனவாம். இப்போது பொருளழகு புரிகிறதல்லவா? இச் செய்யுள் தந்த புலவர் வாழ்க!

—"தாமரைத்தீவான்"
கந்தகெதரை.

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

**வளர்மதி**

**சுதந்திரன் மாணவர் மன்றம்**

**அங்கத்தவர் மனுப்பத்திரம்**

இல. 5.

பெயர்.....................................................................

பாடசாலை.....................................................................

விலாசம்.....................................................................

.....................................................................

......................................... .........................................
பெற்றேர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்




# இலக்கிய உலகம்

பண்பு வழுவாச் சோதர சோதரிகாள்! நீங்கள் இலக்கிய உலகினைக் கண்டிருக்கிறீர்களா? திங்கள் உலகம், செவ்வாய் உலகம் என்பன போன்றதல்ல இது. புலவர்கள் அமைத்துள்ள இலக்கிய உலகம் இது. இந்த இலக்கிய உலகினுட் புகுந்து கற்பனைச் சிறகடித்துப் பறந்து சென்று பார்ப்போமாயின் செய்யுட் சோலைகளைப் பார்க்கலாம். அவற்றில் கருத்துக் கனிகளைக் காணலாம். கண்கள் என்ற கரங்களால் அவற்றைக் கவர்ந்து மனம் வயிற்றுள் இட்டு உண்ணலாம். மனமகிழ்ச்சி பெறலாம். பேரின்பம் அடையலாம். இதுவரை நீங்கள் இலக்கிய உலகினுக்குச் செல்லாமலிருந்தால் இருக்கட்டும். அது வருத்தத்திற் குரியதே. சரிபோகட்டும். இனிமேலாவது தினமும் கொஞ்ச நேரமாவது இலக்கிய உலகினிற் சஞ்சரியுங்கள். சென்று பாருங்கள். கண்களுக்கு வேண்டிய காட்சிகள் கிடைக்கும். செவிகளுக்கு வேண்டிய ஒலிகள் கிடைக்கும். மன வயிற்றுக்கு வேண்டிய கருத்துணவுகள் கிடைக்கும். அறிவுப்பசியைத் திர்த்துக் கொள்ளலாம்.

திருக்குறள், சிலப்பதிகாரம், அகநானூறு, புறநானூறு, நாலடியார், கலிங்கத்துப் பரணி போன்ற எண்ணிறந்த பகுதிகளைக் கொண்ட தமிழ் இலக்கிய உலகில் புகுந்து அரும் பெருங்காட்சிகளைக் கண்டவர்கள்—சுவை கொடுமையானதல்ல. வெகு அழகானது. இவ்வுலகில் நீங்கள் துன்பம் அனுபவிக்க வேண்டிவந்தால்-இன்னல்கள் ஏதும் ஏற்படாமல் இதனை விட்டுவிட்டு கொஞ்ச நேரம் இலக்கிய உலகிற்குச் சென்று பாருங்கள். கவலையெல்லாம் பறந்தோடும். இன்பம் பொங்கும். தனித் தமிழ்த் தேனுறு பாய்ந்தோடும். அதில் நீராடி மகிழலாம். அவ்வுலகில் இல்லாதது எதுவுமே இல்லை. மழை பொழியும். வெயில் பரவும். நிலா ஒளி வீசும் இளந்தென்றல் அசையும். மலையுண்டு-மரமுண்டு-கடலுண்டு-வயலுண்டு-நதியுண்டு-யாவுமுண்டு. அங்கே மான்கள் ஓடும். மயில்கள் ஆடும், குயில்கள் பாடும் மந்திகள் நடனமிடும். யானை-சிங்கம்-புலி-கரடி போன்ற மிருகங்கள் உலாவி வரும். பறவைகள் பறக்கும். ஊர்வன ஊர்ந்து வரும். இப்படி எவ்வளவோ காட்சிகளைக் காண முடியும்.

இத்தகைய இன்பக் காட்சிகள் நிறைந்த உலகினைப் பாராது-களிக்காது இருக்கலாமா? செல்லுங்கள்! பாருங்கள்! களியுங்கள்! வாழ்க இலக்கியம்! வளர்க வண்டமிழ்!

—செல்வி. சி. சகுந்தலா

யைப் பெற்றவர்கள் பின்பு எந்நேரமும் இலக்கிய உலகிலேயே இருக்க விரும்புவர். இலக்கிய உலகத்தில் இன்பமே இருக்கும். துன்பம் இல்லை. ஒளியே இருக்கும். இருள் இராது. நன்மையே இருக்கும்-தீமை இருக்காது. சில பல நற்கருத்துக்களற்ற பகுதிகளுமுண்டு அவை நல்லிலக்கிய உலகிற்குக் கேடு பயப்பனவாயுள்ளன. அத்தகைய பாகங்கள் தவிர்ந்த நல்லிலக்கிய உலகினையே யான் இங்கு கூறுகின்றேன்.

[illegible]
[illegible]
இந்த உலகம் போன்று

# புத்தர் இன்றிருந்தால்....!

"ஜீவா"

உத்தமன் புத்தனவன் - இன்று
உலகிலே யிருந்தால்
சத்திய வாக்குப் பல—தரணிக்கு
சாற்று திருப்பானே?

எல்லோரு மோர் நிழற் கீழ்—நாட்டில்
ஒன்றுக வாழுமெனச்,
சொல்லி யிருப்பானே—மக்கள்
துயர் களைவானே.

எண்ணிற் குறைந்த மக்கள்-இலங்கையில்
இன்னற் படுதல் கண்டு,
கண்ணீர் வடிக்கானே-நல்லவழி
காட்டாதிருப்பானே!

ரத்த வெறி பிடித்து-வாழும்
ராட்சசர் கூட்டத்திற்கு,
இத்தரை வாழுயிர்கள்—யாவும்
இறைமய மென்றிருப்பான்.

## மின்சாரம்

ஏறக்குறைய இருநூறு வருடங்களுக்கு முன் இத்தாலி தேசத்தில் கால்வனிக் என்ற பெயர் பூண்ட அறிஞர் ஒருவர் இருந்தார். ஒருநாள் அவருடைய மனைவி திடீரென சுகவீனமுற்றுள். கால்வனிக் தன்னுடைய மனைவியை ஒரு டாக்டரிடம் அழைத்துச் சென்றுர். அந்த டாக்டர், அவளுக்கு தவளைகளை அவித்து, அவற்றின் சாற்றைக் கொடுக்குமாறு உத்தரவிட்டார்.

அவ்வூரில் பெரிய தவளைகளும் அவற்றைப் புசிக்கும் மனிதர்களும் இருந்தார்கள். கால் வனிக் என்பவர் ஒரு பெரிய தவளையைக் கொணர்ந்து இரும்புத் தகடால் வேயப்பட்ட மேசையின்மீது வைத்து சுத்தம் செய்துகொண்டிருந்தார். அப்போது—ஒரு அதிசயம் தென்பட்டது. தவளைகளின் கால்களை பிணைத்திருந்த மெல்லிய செப்புக் கம்பி அந்த இரும்புத் தகட்டால் வேயப்பட்ட மேசையைத் தொட நேர்ந்தது. அந்நேரத்தில்—தவளையின் கால்களில் ஒரு நடுக்கம் தென்பட்டது! கால்வனிக் இந்தநடுக்கத்தின் காரணத்தை ஆழ்ந்து யோசிக்கலானுர். கடைசியில் "தவளைகளின் கால்களில் உண்டானது மின்சார அதிர்ச்சியே, அதற்கு வேண்டிய மின்சாரம் அவற்றின் கால்களிலேதான் இருக்கிறது" என்ற முடிவுக்கு வந்தார்.

இத்தாலி தேசத்தில் வால்ட்டர் என்று இன்னுமொரு அறிஞர் இருந்தார். அவர் இதைக் கேள்வியுற்று, பல ஆராய்ச்சிகள் செய்து பார்த்தார். செப்புக் கம்பி மேசையைத் 'தொடாத போது, தவளையின் கால்களில் நடுக்கமொன்றும் உண்டாகவில்லை, அப்படியாயின் இவை மூன்றிலும் ஏதேனும் தொடர்பிருக்க வேண்டுமென பலவாறு சிந்தித்தார். ஆராய்ச்சிகளை நடத்திஞர். இறுதியில், பிரதான மின்சாரம் உண்டாவதற்குக் காரணம், செப்புக் கம்பியும் இரும்பு மேசையுமே என்ற உண்மையையும், இவை இரண்டும் ஒன்றை ஒன்று தீண்டும் போதுதான் மின்சாரம் உண்டாகிறது என்றும் கண்டு பிடித்தார். இதன் பயனுகவே அன்று 'வால்ட்ட'ரின் ஒட்ட மின்சாரம் எழுந்தது!

—ஐ. வேலுப்பிள்ளை

## கண்டது கற்கப் பண்டிதனுவான்

(விடைகள்)

1. சந்தனம், கற்பூரம், எரிதாசு, தேன், ஏலம்.

2. ஆம் உண்டு. "பெடல்கியூஸ்" (Betelgeuse) என்ற நட்சத்திரத்தின் ஒளி சூரிய ஒளியை விட 5 ஆயிரம் மடங்கு பிரகாசமுடையதாம். பூமிக்கு மிகமிகத் தொலைவில் உள்ளதால் இதன் ஒளியின் தன்மையை நம்மால் சரியாக அறிந்துகொள்ள முடியாது இருப்பதாகக் கூறுகிறூர்கள்.

3. கழுகு.

4. வண்டு வாய் திறந்து பாடுவதில்லை. அதனுடைய மெல்லிய சிறகுகளின் அசைவினுல் எழுப்பப்படும் ஓசைதான் ரீங்காரம்.

5. சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் சுமார் 72 இசைத் தட்டுகளை ஒலிபரப்புகிறூர்கள். சனியும் ஞாயிறும் இன்னும் அதிகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## நெல் அரிசி அளவை தொழிலாளர் சங்கம்

மட்டக்களப்பு நெல் அரிசி அளவைத் தொழிலாளர் சங்கத்தின் மாதாந்தப் பொதுக் கூட்டம் சென்ற 22-3-59ல் அரசினர் அரிசி ஆலைக்கு அருகில் தலைவர் திரு வி. கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெற்றது. சங்கத்துக்கென சொந்தமாக ஒரு லொறியை வாங்குவதற்கு ரூபாய் 24,600மும் சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு, தொழிலாளருக்கு முன்பணமாகக் கொடுக்க ரூபாய் 6000மும் ஆக மொத்தம் 30,000 ரூபாய் மட்டக்களப்பு கூட்டுறவு உதவி ஆணையாளரிடம் விண்ணப்பிக்க வேண்டுமென்றும், நாட்டுக்கு உழைக்கும் தொழிலாளர்கட்கு அளப்பரிய சேவை செய்யும் மேற்படி சங்கத்தின் முன்னேற்றத்தை பாதிக்கக்கூடிய செயல்களை முறியடிக்க ஆயத்தமாயிருக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## கொழும்பு முத்தமிழ் மன்றம்

கொழும்பு முத்தமிழ் மன்றவருடாந்திரக் கூட்டம் கடந்த 1-4-59ல் தோழர் எஸ். இராமகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. சென்ற வருட வரவு செலவு கணக்குகள் யாவும் ஒப்புக் கொள்ளப்பட்டதும் நடப்பு வருடத்திற்கு கீழ்க்கண்டவர்கள் நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்:-

செயலாளர்: கே. ஜி. பாலன், பொருளாளர் ஏ. கொர்நேலிஸ். புதிய உறுப்பினர்களும் சேர்க்கப்பட்டனர்.

## "தமிழ் மக்களையே குடியேற்றுக"

மொறவேவாத் திட்டத்தை முதலிக்குளத் திட்டமென மாற்றித் தமிழ் மக்களையே குடியேற்றும்படி அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானமொன்று அணிமையில் நடைபெற்ற கட்டைபறிச்சான் கிராமச் சங்க கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது. கூட்டத்திற்கு கிராமச் சங்கத் தலைவர் திரு. சி. குணநாயகம் தலைமை வகித்தார். மற்றும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களாவன:

(1) கிழக்கு மாகாணத்திலுள்ள இத்திட்டத்தில் முதலிக்குளம் என்ற தமிழ்ப் பெயரை 'மொறவேவா' என மாற்றியுள்ள அரசாங்கத்தின் வகுப்புவாதக் கொள்கையை இச்சங்கம் வன்மையாகக் கண்டிப்பதுடன், முதலிக்குளம் திட்டம் என மாற்றும்படியும் கேட்டுக்கொள்ளுகிறது.

(2) சட்டத்தை மீறி அல்லையில் குடியேறியுள்ள அடக்கமற்ற சிங்கள மக்களை இத்திட்டத்தில் குடியேற்றுவது குடியேறவிருக்கும் தமிழ் மக்களைப் பீதிக்குள்ளாக்கும் செயலாகையினால் அவ்வெண்ணத்தைக் கைவிட்டுத் தமிழ் மக்களுக்கே இடமளிக்கும்படியும் இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது.

## ஆசிரியருக்கு பிரிவுபசாரம்

இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை பழைய மாணவராகவும், நெடுங்காலமாக ஆசிரியராகவும் கடமையாற்றி அணிமையில் இளைப்பாறிய ஆசிரியர் திரு மா. சங்கரப்பிள்ளைக்கு மேற்படி பாடசாலையில் ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் தலைமை ஆசிரியர் திரு கு. நல்லதம்பி தலைமையில் பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது. ஆசிரியரின் சேவையையும் அன்னாரின் குணாதிசயங்களையும் பாராட்டி பலர் பேசினர். பிரிவுபசாரப் பாவும், அன்பளிப்புகளும் வழங்கப்பட்டன.

## பளிங்குமலை இ. தி. மு. க.

கொட்டகலை மாவட்டத்தைச் சேர்ந்த இ. தி. மு. க. பளிங்குமலை கிளையின் பொதுக்கூட்டமொன்று கடந்த 4-4-59ல் கழகப் பணிமனையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கிளைச் செயலாளர் தோழர் இரா. ரெங்கையா தலைமைவகித்தார்.

"மலைநாட்டுத் தமிழ் பேசும் மக்களை சிங்கள மயமாக்க ஒரு மொழி வெறியர்கள் செய்து வரும் சூழ்ச்சிகளை தவிடுபொடியாக்கவும் தமிழ் மக்களை எதிர்நோக்கிக்கொண்டிருக்கும் பேராபத்திலிருந்து அவர்களை விடுவிக்கவும் தமிழர்கள் அனைவரும் தோளோடு தோள் நின்று போராட வேண்டும்" இவ்வாறு தமது தலைமை உரையில் திரு ரெங்கையா கூறினர்.

தோழர்கள்: பி. இராமையா, வி. எம். சுப்பையா, குமார், பால்ராஜ், கோவிந்தன், செல்வன் ஆகியோர்கள் பேசிய பின் துணைச் செயலாளர் தோழர் சி. செங்கமலை நன்றி நவிலுடன் கூட்டம் முடிவுற்றது.

## இளைஞர் முன்னேற்றக் கழகம்

இரத்தினபுரி இளைஞர் முன்னேற்ற கழக நிர்வாக சபைக் கூட்டம் கடந்த 4-4-59-ல் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. திரு த. கேசவன் தலைமை தாங்கினர். கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின:-

1. மேதினத்தன்று மே தினம் கொண்டாடுவது.

2. இரத்தினபுரியிலுள்ள பொது வாசிகசாலையில் தமிழ் புத்தகங்களுக்கு இடமளிக்க வலியுறுத்தல்.

6. இரத்தினபுரியிலுள்ள எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

இறுதியாக மன்றச் செயலாளர் திரு. பர முருகையாவின் நன்றியுரையோடு கூட்டம் இனிது முடிவுற்றது.

## சேரன் கல்லூரி நிர்வாகிகள் தேர்வு

கொல்லாந்தை சேரன் கல்லூரி நிர்வாகக் குழு தேர்தல் கூட்டம் கடந்த 29-3-59 சேரன் கல்லூரி மண்டபத்தில் ஆசிரியர் திரு. இராமையா தலைமையில் நடைபெற்றது.

கல்லூரியின் வளர்ச்சிக்கு பொது மக்களும் மாணவர்களும் செய்ய வேண்டிய தொண்டைப்பற்றித் தலைவர் குறிப்பிட்டார். திரு. இரா. சு. செல்லத்துரை, திரு. கே. பி. தங்கவேல் ஆகியோர் கல்லூரி வளர்ச்சிக்கு பெற்றோர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர்.

பின்னர் கீழ்கண்டவர்கள் நிருவாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்:—

தலைவர்: திரு. ஏ. எம். எஸ். வேலு தலைமை கங்காணி, உப தலைவர்கள்: திரு. தங்கவேலு தலைமை கங்காணி, இரா. சு. மணியம், செயலாளர்: திரு. இரா. சு. செல்லதுரை தனராட்ணம், நிதிக்குழு செயலாளர்: திரு. இராசு ராஜா, மற்றும் பன்னிரண்டு செயற்குழு அங்கத்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

# நாட்டு நிர்மாண வேலைகளில்

## சீனத்து மாதர்களின் சாதனைகள்

## ஈழத்தவர்களுக்கு சிறந்த படிப்பனைகள்

பழைய காலத்தில் பெரும்பாலும் ஆண்களுக்கு அடிமைகளாகவும் வெறும் ஜன உற்பத்தி இயந்திரங்களாகவும் இருக்கும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்த பெண்கள் இன்று முன்னணிக்கு வரத் தொடங்கிவிட்டார்கள். பல்வேறு துறைகளிலும் இறங்கி பணிபுரிய விழைகிருர்கள்.

இவர்களில் குறிப்பாகச் சீனப் பெண்கள் ஆற்றிவரும் பணி போற்றத்தக்கதாகும். சீனப் பெண்களின் சமீபத்திய சாதனைகளை நம் நாட்டுப் பெண்கள் அறிவதால் பயனுண்டு.

—ஆசிரியர்

சோஷலிஸ நிர்மாணத்துறையில் நடைபெற்ற பிரம்மாண்ட முன்னேற்ற இயக்கத்தின் விளைவாயும் மக்கள் கொம்யூன் இயக்கத்தின் விளைவாயும் சீனப் பெண்களுக்கு வீட்டு வேலையிலிருந்து விடுதலை கிட்டியது. அவர்கள் விவசாய, இயந்திரத் தொழில் அரங்குகளிலும் கலாச்சார, கல்வி, மருத்துவ துறைகளிலும் சென்ற ஆண்டு பெரும் பணி ஆற்றினர்.

1958ம் ஆண்டின் அமோக அறுவடைப் பணியில், பல இடங்களிலும் எல்லாப்பெண்களும்—வயதானவர்கள், நடுத்தர வயதினர், இளைஞர் என்ற பேதமின்றி—பங்கு கொண்டனர். கோதுமை சாகுபடி, நெல் சாகுபடி, பருத்தி சாகுபடி, காவரைப் பூச்சிகளையும் வியாதிகளையும் தடுத்தல் போன்ற பல வயல் வேலைகளிலும் பெண்கள் தேர்ச்சி பெற்ற ஊழியர்கள் ஆயினர். இதனால் ஆண்கள் பலர் பொருளுற்பத்தியின் இதர துறைகளுக்குச் செல்ல முடிந்தது.

### நீர்ப்பாசனம்

நீர்ப்பாசன வேலை, நெருக்கமாக பயிர் வைத்தல், ஆழ உழுதல், நிலவளம் அபிவிருத்தி முதலிய பணிகளிலும் பெண்கள் பெரும் பங்கு கொண்டனர். 24 மாகாணங்களிலிருந்து கிடைத்துள்ள புள்ளி விவரங்களின் படி, நீர்த்தேக்கத் திட்டப் பணிகளில் 7 கோடியே 30 லட்சம் பெண்கள் பங்கு கொண்டனர். ஹோனன் மாகாணத்துப் பெண்கள், அம் மாகாணத்தின் நீர்த்தேக்கத் திட்டப் பணிகளில் மூன்றில் ஒரு பகுதியை செய்து முடித்தனர். அவர்கள் மாத்திரம் 8,80,000 குளங்களையும் கால்வாய்களையும் நீர்த்தேக்கங்களையும் நிறுவினர்.

### விவசாயம்

விவசாயம் சம்பந்தமான நுட்பங்களில் பாண்டித்தியம் பெற்று பல கிராமத்துப் பெண்கள், பரீட்சார்த்தப் பண்ணைகளில் பணியாற்றி, மிக உயர்வான விளைச்சலைக் கண்டனர். இப்பணியில் மாத்திரம் சுமார் ஒரு கோடியே 30 லட்சம் பெண்கள் பங்கு கொண்டனர். ஹூபேவிலுள்ள பெண்களில் 36 சதவிகிதம் பேர் 1,21,000 ஹெக்டர் பரப்புடைய பரீட்சார்த்தப் பண்ணை நிலங்களில் சாகுபடி வேலை பூராவையும் செய்தனர். இம்முயற்சியின் விளைவாக 20 லட்சம் "அமோக அறுவடைப் பெண்கள்" தோன்றினர். இவர்கள் அனைவரும் புதிய விளைச்சல் சாதனைகளைச் சாதித்தவர்களாவர்.

### கடற்றொழில்

பெண்கள் கடலுக்குப் போகக் கூடாது என்ற பிரபுத்துவ கால மூடக்கருத்தை அவர்கள் உடைத்தெறிந்தனர். இதனால் மீன் பிடிக்கும் பெண்கள் கோஷ்டிகள் பல நிறுவப்பட்டன. சில மீன்படகுகளில் எல்லா வேலைகளையுமே பெண்கள் கவனித்துக் கொள்கின்றனர். பல பெண்கள் "மீனவர் பெண் திலகம்" என்ற மதிப்புக் குரிய பட்டத்தைப் பெற்றனர்.

### காடு வளர்ப்பு

21 மாகாணங்கள், நகரங்களிலிருந்து கிடைத்துள்ள புள்ளி விவரங்களின்படி, 6 கோடியே 70 லட்சத்திற்கு மேற்பட்ட பெண்கள் காடு வளர்ப்புப் பணியில் ஈடுபட்டனர். இது, அப்பணியில் ஈடுபட்டவர்களில் பாதிக்கு மேலாகும்.

### பல் தொழில்கள்

மக்கள் கொம்யூன் இயக்கம் 1958ம் ஆண்டில் உச்ச நிலையை அடைந்தபோது ஏராளமான பெண்கள் பொதுஉணவு விடுதிகளிலும், குழந்தைப் பராமரிப்பு நிலையங்களிலும், தையல் தொழிற்சாலைகளிலும், பிரசவ விடுதிகளிலும், பணியாற்றச்சென்றனர். ஹான்ஸி மாகாணத்தில் பொது உணவு விடுதிகள், குழந்தைப் பராமரிப்பு நிலையங்கள், பிரசவ விடுதிகளில் வேலை செய்யும் 7,90,000 பெண்களில் மூன்றில் ஐந்தில் பங்கு நபர்கள் "மதிரித் தொழிலாளி" என்ற பட்டமும் "தீவிர உழைப்பாளி" என்ற பட்டமும் பெற்றவர்கள்.

### சமையல் தொழில்

அன்ஹ்வியைச் சேர்ந்த தலைசிறந்த சமையல் தொழிலாளிப் பெண் ஒருவர் மாவு அரைக்கும் ஆலையில் பல புதிய அபிவிருத்திகளை ஏற்படுத்தி, அதன் திறமையை 11 மடங்கு உயர்த்தினர்.

### ஆலைத் தொழில்

ஹோனுங், க்வீசோவ் மாகாணங்கள் உள்பட ஏழு மாகாணங்களில் உருக்கும் இரும்பும் தயாரிக்கும் "மார்ச் எட்டாந் தேதி" ஊதுலைகள் பலவற்றை பெண்களே நிறுவி, இரும்பும் உருக்கும் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டனர். பெண்கள் இயக்கி வரும் சில ஊதுலைகள், நாள் ஒன்றிற்கு 30 டன்னிற்குக் கூடுதலான தேனிரும்பை உற்பத்தி செய்து வருகின்றன.

வர்த்தகம், கல்வி, கலாச் [illegible] கலைகள் ஆகிய துறைகளிலும் பெண்கள் பெரும் பணி ஆற்றியுள்ளனர்.

## கைலாசம்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கினேன். வெந்நீர் ஊற்று வருமிடத்தில் வெண்மை நிற வெண்கார உப்புப் படிந்த மேடை என்பது தெளிவாயிற்று. அன்று பிற்பகல் சுமார் நான்கு மைல் தூரத்தைக் கடந்து சென்று கூடாரத்தை அமைத்துத் தங்கினேம்.

(தொடரும்)

மில்க் வைற் நீல சோப்

பாவிப்பவர்கள் திருப்தி அடைகிருர்கள்

தயாரிப்பாளர்:

மில்க் வைற் சோப் தொழிற்சாலை,

527, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சை ஜூன் 6-ந் திகதி

அற்லஸ் ஹோல் அளிக்கும் விளக்கமான பாடங்களைப் படிப்பதன் மூலம் இவ் வருடம் பரீட்சையில் சுலபமாகத் தேறி நீங்களும்

ஒரு ஆசிரியராகலாம்

★ சாதாரண பயிற்சி
★ புதிய பாடத் திட்டம்
★ புதிய வினு விடைப் புத்தகங்கள்

விபரங்களுக்கு எழுதினுல் இலவசமாக அனுப்பப்படும்.

அற்லஸ் ஹோல்.,

723, மருதானை ரோடு, கொழும்பு.
த. பெட்டி. 649 போன்: 9759

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகத்தான 2-வது வாரம்!

# கிங்ஸ்லி காமினி பிளாஸா சபையர்
# நவா குயின்லன்

வெம்பிளி (கண்டி) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) மனோஹரா (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை) மொடேர்ன் (பதுளை) விஜிதா (மஸ்கேலியா) தீவொளி (நுவரெலியா)

தாஜ்மஹால் (கல்முனை) நியூ சினிமா (குருநாகல்) ஜெமினி (குகலை)

ஆகிய திரைகளில் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!



எம்ஜிஆர் பிக்சர்ஸ்

# நாடோடி மன்னன்

கன்னித் தமிழரின் தீரம் காட்டும் கதை! கனல் பொறிக்கும் நடிப்பு!
கலைச் செறிவு நிறைந்த காட்சிகள்!

நடிகர்கள்:

புரட்சி நடிகர் **எம். ஜி. ராமச்சந்திரன்,**

**பி. பானுமதி, சந்திரபாபு, பி. சரோஜா தேவி,**

எம். என். ராஜம், சக்ரபாணி, பி. எஸ். வீரப்பா, நம்பியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை கொழும்பு தட்டாரெதரு 196-ம் இலக்கத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டாரெதரு சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1959 ஏப்ரல் மாதம் 19-ந் திகதி பிரசுரிக்கப்பட்டது.